www.padippakam.com

1-15 நவம்பர் 2001 ரூ. 5.00

# புதிய ஜனநாயகம்



"பொடோ": மீண்டும் பாசிச பயங்கரம்



# "உலக மேலாதிக்க பயங்கரவாதி அமெரிக்காவே, ஆப்கானை விட்டு வெளியேறு!"

## — புரட்சிகர அமைப்புகளின் ஆர்ப்பாட்டங்கள்

உலக மேலாதிக்க பயங்கரவாதி அமெரிக்காவின் ஆப்கான் மீதான ஆக்கிரமிப்புப் போரை எதிர்த்தும், அமெரிக்காவின் போர்வெறி பயங்கரவாதமே மிக அபாயகரமானது என்று அதை முறியடிக்க அறைகூவியும், அமெரிக்க மேலாதிக்கத்துக்குத் துணையாக நின்று அடியாள் வேலை செய்துவரும் இந்துவெறி பா.ஜ.க. அரசையும், ஜால்ரா போடும் ஓட்டுக்கட்சிகள் - தொலைக்காட்சி - பத்திரிகைகளை அம்பலப்படுத்தியும் ம.க.இ.க., வி.வி.மு., பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு. ஆகிய புரட்சிகர அமைப்புகள் ஆர்ப்பாட்டங்கள் - பொதுக் கூட்டங்கள் - தெருமுனைக் கூட்டங்களைத் தமிழகத்தில் தாங்கள் செயல்படும் பகுதிகளில் நடத்தி வருகின்றன.

* சென்னையில் 18.10.2001 அன்று மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு ம.க.இ.க.வும், பு.ஜ.தொ.மு.வும் இணைந்து எழுச்சிமிகு ஆர்ப்பாட்டத்தை நடத்தின. ஆர்ப்பாட்டப் பகுதியில் கொலைகாரன் புஷ் போலவும், அடியாள் வாஜ்பாய் போலவும் வேடமணிந்து இருவர் கைகோர்த்து உலாவிய காட்சி பரபரப்பான வரவேற்பைப் பெற்றது. ஆர்ப்பாட்ட இறுதியில் மேலாதிக்கக் கொலைவெறியன் புஷ் உருவப்படத்தையும் அமெரிக்கக் கொடியையும் எரிக்க முற்பட்ட போது, போலீசார் ஓடிவந்து தடுத்து அரசின் அமெரிக்க விசுவாசததை நிரூபித்தனர். இந்த ஆர்ப்பாட்டத்தில் முசுலீம்களும் பிற ஜனநாயக அமைப்புகளைச் சேர்ந்தோரும் பங்கேற்று ஆதரவளித்தனர்.

* திருச்சியில் உறையூர் நாச்சியார் கோயில் அருகிலிருந்து 24.10.2001 அன்று மாலை உலக மேலாதிக்கப் பயங்கரவாத அமெரிக்காவின் ஆப்கான் ஆக்கிரமிப்புப் போரை எதிர்த்து ம.க.இ.க., பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு. ஆகிய அமைப்புகள் இணைந்து பேரணியையும் சத்திரம் பேருந்து நிலையத்தில் எழுச்சிமிகு ஆர்ப்பாட்டத்தையும் நடத்தின. பேரணியில் அமெரிக்க மேலாதிக்கப் போர்வெறியன் புஷ்ஷுக்கு எலும்புக்கூடு போல வேடமிட்டு, அதன் காலடியில் மண்டை ஓடுகளை அடுக்கி வைத்து ரிக்ஷாவில் கட்டி இழுத்து வந்த காட்சி விளக்கப்படமும், அமெரிக்காவுக்கு அடியாள் வேலை செய்துவரும் பா.ஜ.க. அரசைத் திரைகிழித்து எழுப்பப்பட்ட "பாய் பாய் வாஜ்பாய்! அமெரிக்காவுக்கு ஆபீஸ் பாய்!" என்ற முழக்கமும் மக்களிடம் பெருத்த வரவேற்பைப் பெற்றது.

* மதுரையில் ம.க.இ.க.வும் பு.மா.இ.மு.வும் இணைந்து விராட்டிப்பத்து, செல்லூர், சட்டக் கல்லூரி வாயில், புதுத்தாமரைப்பட்டி, ஒத்தக்கடை ஆகிய பகுதிகளில் அக்டோபர் மாதத்தின் முதல் இரு வாரங்களில் தொடர்ச்சியாக தெருமுனைக் கூட்டங்களை நடத்தின.

* உசிலம்பட்டி வட்டத்திலுள்ள செல்லம்பட்டியில் வி.வி.மு. சார்பில் உலகின் முதல்நிலை எதிரியான பயங்கரவாத அமெரிக்காவின் ஆக்கிரமிப்புப் போரை எதிர்தது 14.10.2001 அன்று பொதுக்கூட்டமும், ம.க.இ.க. மையக் கலைக்குழுவின் புரட்சிகர கலை நிகழ்ச்சியும் நடைபெற்றது.

அமெரிக்காவின் ஆக்கிரமிப்புப் போரை எதிர்த்து திருச்சி நகரில் நடந்த பேரணி.



# மறுகாலனியாதிக்க எதிர்ப்பு தீ பரவட்டும்

நாடு மீண்டும் காலனியாக்கப்பட்டு வருவதை எதிர்த்து கோக்-பெப்சி போன்ற அந்நிய பன்னாட்டு நிறுவனங்களின் பொருட்களை எரிக்கும் போராட்டத்தை கடந்த செப்டம்பர் 3-ஆம் தேதியன்று தமிழகத்தின் பல பகுதிகளில் ம.க.இ.க., வி.வி.மு., பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு. ஆகிய புரட்சிகர அமைப்புகள் எழுச்சியுடன் நடத்தின. இப்போராட்டத்துக்கு போலீசு அனுமதி தராமல் இழுத்தடித்த சில பகுதிகளில், கால தாமதமானாலும் இப்போராட்டம் தொடர்ந்து நடந்துள்ளது.

தர்மபுரி மாவட்டம் கிருஷ்ணகிரியில் 8.10.2001 அன்று தோழர் இராமலிங்கம் தலைமையில் வட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து ஊர்வலமாகப் புறப்பட்டு, ரவுண்டானா அருகே மறுகாலனியாதிக்கத்தை எதிர்த்து எழுச்சிமிகு ஆர்ப்பாட்டத்தை வி.வி.மு. நடத்தியது. அந்நியப் பொருட்களை எரிக்க அனுமதி மறுத்து போலீசு கெடுபிடி செய்ததால், வி.வி.மு. தோழர்கள் மற்றொரு குழுவாகச் சென்று பேருந்து நிலையம் அருகே விண்ணதிர முழக்கங்களுடன் அந்நியப் பொருட்களை எரித்தனர். திரளாக மக்கள் கூடி நின்று இப்போராட்டத்தை வரவேற்று ஆதரித்தனர்.

கர்நாடக மாநிலம் கோலார் தங்கவயல் பகுதியில் இயங்கி வரும் ம.க.இ.க., பு.மா.இ.மு. மற்றும் பகத்சிங் இளைஞர் முன்னணி ஆகிய அமைப்புகள் இணைந்து இராபர்ட்சன் பேட்டை பேருந்து நிலையம் அருகே 22.10.2001 அன்று ஆர்ப்பாட்டத்துடன் அந்நியப் பொருட்களை எரிக்கும் போராட்டத்தை எழுச்சியுடன் நடத்தின. போராட்டத்தையும் நாடு மறுகாலனியாகி வருவதையும் விளக்கி தமிழ் மற்றும் கன்னட மொழிகளில் வெளியிடப்பட்ட பிரசுரமும், அந்நிய பொருட்களை எரிக்கும் போராட்டமும் பகுதிவாழ் மக்களிடம் சிறப்பான தொரு வரவேற்பைப் பெற்றது.


www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

*மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு*

**தொகுதி: 16**

**இதழ் 23-24**

**16 அக். - 15 நவ. 2001**

**உள்நாடு:**
**தனி இதழ்: ரூ. 5.00**
**ஆண்டு சந்தா: ரூ. 120.00**

**வெளிநாடுகள்**
**(வான் அஞ்சலில்)**
**ஆண்டு சந்தா: US$ 18**

**மின் அஞ்சல் முகவரி:**
**puthiyajananayagam@hotmail.com**

**படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்**

**புதிய ஜனநாயகம்**
**அஞ்சல் பெட்டி எண்: 6015,**
**அசோக் நகர்,**
**சென்னை - 600 083.**


# உள்ளாட்சித் தேர்தல்: உச்சகட்ட அராஜகம்

கடந்த சட்டமன்றத் தேர்தலின்போது ''நான் போட்டியிடும் கடைசி தேர்தல் இதுதான்'' என்று அனுதாபத்தைத் தோற்றுவித்து ஓட்டுக் கேட்டார் தி.மு.க. தலைவர் கருணாநிதி. அவர் மட்டுமல்ல; இனி தி.மு.க. உள்ளிட்டு எதிர்க்கட்சியினர் எவரும் போட்டியிடும் கடைசி தேர்தல் இதுதானோ என்று நடந்து முடிந்த உள்ளாட்சித் தேர்தல் வன்முறை வெறியாட்டத்தின் மூலம் எச்சரிக்கை விடுத்துள்ளது, பாசிச ஜெயா கும்பல்.


செங்கை கிழக்கு மாவட்டப் போலீசு அதிகாரியான பொன் மாணிக்கவேல் தலைமையில் அதிரடிப் படை அணி வகுத்து வந்த ஒரு வாக்குச் சாவடியில் வாக்களிக்க நிற்போரை கண்மூடித் தாக்க, அவர்கள் அலறியடித்துக் கொண்டு ஓடுகிறார்கள். அதைத் தொடர்ந்து டாடா சுமோ காரில் அமைச்சர் வளர்மதியும் இரண்டு வேன்களில் அ.தி.மு.க. குண்டர்களும் வந்திறங்குகிறார்கள். வாக்குச் சாவடியில் புகுந்த குண்டர்கள் தேர்தல் அதிகாரிகளை கழுத்தைப் பிடித்துத் தள்ளி கத்தியைக் காட்டி மிரட்டி ஓரமாக நிற்க வைக்கிறார்கள். வாக்குச் சீட்டுக்களை கத்தை கத்தையாக அள்ளி இரட்டை இலைக்கு முத்திரை குத்தி வாக்குப் பெட்டியில் போட்டு முடித்ததும் வெற்றிப் பெருமிதத்துடன் புறப்பட்ட இக்குண்டர்படை, அடுத்த வாக்குச் சாவடிக்குப் பறக்கிறது. போலீசு கைகட்டி நிற்கிறது. எதிர்க்கட்சி வேட்பாளர்கள் தாக்குதலுக்கு அஞ்சி ஓடி ஒளிந்து கொண்டு புலம்புகிறார்கள். வாக்காளர்கள் பட்டப்பகலில் நடக்கும் இந்த அராஜகத்தைக் கண்டு விக்கித்துப் போய் நிற்கிறார்கள். சென்னை அருகே ஆலந்தூர் பகுதியில் நடந்த அராஜகக் காட்சி இது. இப்படித்தான் தமிழகத்தின் பெரும்பாலான வாக்குச் சாவடிகளில் அ.தி.மு.க. முன்னாள் - இந்நாள் அமைச்சர்கள், நாடாளுமன்ற - சட்டமன்ற உறுப்பினர்கள் தலைமையில், அதிகார வர்க்கம் - போலீசு துணையோடு அ.தி.மு.க. குண்டர்படை வன்முறை வெறியாட்டங்களில் ஈடுபட்டது.

வாக்குச் சாவடிகள் சூறையாடப்பட்டன. தேர்தல் அதிகாரிகள் கத்தி முனையில் நிறுத்தப்பட்டனர் அல்லது தாக்கப்பட்டனர். போலீசு முன்னிலையிலேயே பகிரங்கமாக கள்ள ஓட்டுக்களைப் போட்டனர். மரண பீதியில் வாக்காளர்கள் அஞ்சி ஓடினர். செய்தியாளர்களின் புகைப்படக் கருவிகள் பறிக்கப்பட்டு உதைத்து விரட்டப்பட்டனர். சீல் வைக்கப்பட்ட வாக்குப் பெட்டிகளை உடைத்து முத்திரையிட்ட இரட்டை இலை வாக்குச் சீட்டுக்களை கத்தை கத்தையாகத் திணித்தனர். இதை வெற்றிகரமாக சாதிக்க முடியாத இடங்களில் வாக்குப் பெட்டிகள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன. அல்லது வாக்குச் சீட்டுகளைப் பறித்து வீதியில் வீசியெறியப்பட்டன.

ஆற்காடு மற்றும் வாலாசா நகர் மன்றத் தேர்தலில் காங்கிரசு வேட்பாளர்கள் முன்னணியில் இருப்பதாகச் செய்திகள் வந்தன. அம்மாவைக் கண்டதும் கன்னத்தில் போட்டுக் கொள்ளும் அமைச்சர் பாண்டுரங்கன் வாக்குகள் எண்ணுமிடத்துக்கு ஓடோடிச் சென்றார். திட்டமிட்டபடி அராஜகம், தில்லுமுல்லு - மோசடிகள் நடந்தன. அதன்பிறகு அவ்விரு நகர் மன்றங்களிலும் அ.தி.மு.க. வெற்றி பெற்றதாக அறிவிப்புகள் வந்தன.

சென்னை மாநகர மேயர் தேர்தலுக்கான வாக்குச்சீட்டு எண்ணுமிடங்களில் கத்தி முனையில் எதிர்க்கட்சி ஏஜெண்டுகள் விரட்டப்பட்டனர். ''307-வது பிரிவின் கீழ் கொலை வழக்கு கேஸ் போட்டு உள்ளே தள்ளிடுவோம்'' என்று போலீசு அதிகாரிகளே தி.மு.க. ஏஜெண்டுகளை அச்சுறுத்தி விரட்டினர். சேகர் பாபு, கராத்தே தியாகராசன், வெற்றிவேல், சைதை துரைசாமி என அ.தி.மு.க. பிரமுகர்கள் ஓட்டு எண்ணுமிடங்களில் தமது அடியாட்படையுடன் புகுந்து அதிகாரிகளை மிரட்டி 'முறையாக' வாக்கு எண்ணப்படுகிறதா என்று கண்காணித்தனர். இந்த அராஜகங்களை எதிர்த்து எதிர்க்கட்சியினர் ஆளுநர், தலைமைச் செயலாளர், போலீசு தலைமை இயக்குனர் என அனைத்து அதிகார மட்டங்களிலும் முறையிட்டும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. கடைசியாக உயர் நீதிமன்றத்தில் முறையிட்டு போட்டியிடும் வேட்பாளர்களையாவது வாக்கு எண்ணுமிடங்களில் அனுமதிக்க வேண்டும் என்று கெஞ்சி அனுமதி பெற வேண்டியதாயிற்று.

தலைநகர் சென்னையிலேயே இந்த அளவுக்கு அராஜகம் என்றால், தமிழகத்தின் பிற பகுதிகளில் வன்முறை வெறியாட்டங்கள் கேள்விமுறையின்றித் தலைவிரித்தாடின. முதுகுளத்தூர் அருகே செல்வநாயகபுரத்தில், இப்பகுதி அ.தி.மு.க. எம்.எல்.ஏ.வான பதினெட்டாம்படியானின் தம்பி, வாக்குச் சாவடியைச் சூறையாடி ஊரில் புகுந்து வாக்காளர்கள் மீதே துப்பாக்கிச் சூடு நடத்தி 6 பேரைப் படுகாயப்படுத்தியுள்ளான். இராமநாதபுரம் மாவட்டம் மேலத்தூவல் கிராமத்து சத்துணவு அமைப்பாளர் கேசவன் கொலை, மதுராந்தகம் அருகே பா.ம.க. பிரமுகர் பன்னீர் செல்வம் கொலை, நெல்லை மாவட்டம் தேவர்குளம் வாக்குச் சாவடியில் 4 பேருக்கு அரிவாள் வெட்டு, கிருஷ்ணகிரி அருகே வெங்கட்டாபுரம் வாக்குச் சாவடி சூறையாடல், விழுப்புரம் மாவட்டத்தில் 6 வாக்குச் சாவடிகளில் தீ வைத்து வாக்குச் சீட்டுகள் எரிப்பு, திண்டுக்கல் மாவட்டம் சானார்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் தேர்தல் அதிகாரி மீது அ.தி.மு.க. குண்டர்களின் தாக்குதல், ஈரோடு மாவட்டம் தாராபுரம் பகுதியில்



''எல்லா ஓட்டும் ரெட்டை எலைக்குத்தான்!'' - தேர்தல் அதிகாரிகளை மிரட்டி அ.தி.மு.க. குண்டர்களால் கத்தை கத்தையாக முத்திரை குத்தப்பட்ட வாக்குச் சீட்டுகள்.

பா.ம.க வேட்பாளராகப் போட்டியிட்ட பால்ராஜ் படுகொலை, கமுதி அருகே வாக்குச் சாவடியில் வேட்பாளருக்கு அரிவாள் வெட்டு, ஓசூர் அருகே போலீசு துப்பாக்கிச் சூட்டில் மூவர் படுகாயம், சென்னை அருகே நங்கநல்லூரில் செய்தியாளர்கள் மீது தாக்குதல் - புகைப்பட கருவிகள் உடைப்பு என அ.தி.மு.க. ரௌடிகளும் அதற்கு உடந்தையாக போலீசும் வெறியாட்டம் போட்டுள்ளன.

ஒருபுறம் அ.தி.மு.க. குண்டர்படையும் போலீசும் மூர்க்கமான வன்முறை - அராஜகத்தில் இறங்கியது போதாது என்று கிராமப் புறங்களில் சாதிவெறியர்கள் தாழ்த்தப்பட்ட மக்களை வாக்களிக்க விடாமல் தடுத்து, வன்முறை வெறியாட்டத்தைக் கட்டவிழ்த்து விட்டு, ஓட்டுச் சீட்டு ஜனநாயகத்தின் யோக்கியதையைப் பறைசாற்றியுள்ளனர். தருமபுரி மாவட்டம் அரூர் அருகேயுள்ள மருக்காலம்பட்டி கிராமத்தில் அக்டோபர் 16-ஆம் தேதியன்று ஓட்டுப் போட வந்த தாழ்த்தப்பட்டோரை வழிமறித்துத் தாக்கிய வன்னிய சாதி வெறியர்கள், அன்றிரவு காலனிக்குள் புகுந்து தாழ்த்தப்பட்டோரை அடித்து நொறுக்கி ஊரை விட்டே விரட்டியடித்ததோடு, மறுநாள் ஒவ்வொரு வீடாகப் புகுந்து கடப்பாரையால் இடித்து நாசமாக்கி, பண்ட பாத்திரங்களை உடைத்து, சூறையாடி வெறியாட்டம் போட்டுள்ளனர். இன்றும் மருக்காலம்பட்டி கிராமத்து தாழ்த்தப்பட்ட மக்கள் ஊருக்குள் நுழையவே அஞ்சி அகதிகளாக அல்லற்படுகின்றனர்.

இதேபோல காஞ்சிபுரம் மாவட்டத்தில் வெளியம்பாக்கம், கடலூர் மாவட்டத்தில் சி.முட்லூர் ஆகிய கிராமங்களிலும் பொதுத் தொகுதியில் போட்டியிட்ட 'குற்ற'த்துக்காக தாழ்த்தப்பட்டோர் மீது சாதிவெறித் தாக்குதல் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. மதுரை மாவட்டம் சிட்டாம்பட்டியில் பொதுத் தொகுதியில் வேட்பு மனு தாக்கல் செய்த தாழ்த்தப்பட்ட பெண் வேட்பாளரை ஆதிக்க சாதி வெறியர்கள் மிரட்டி அச்சுறுத்தி வேட்பு மனுவையே திரும்பப் பெறச் செய்தனர்.

பொதுத் தொகுதி கிடக்கட்டும். தாழ்த்தப்பட்டோருக்கென ஒதுக்கப்பட்ட ரிசர்வ் தொகுதிகளில் கூட தாழ்த்தப்பட்டோர் வேட்பு மனு தாக்கல் செய்ய முடியவில்லை. தென் மாவட்டங்களில் பல கிராமப் பஞ்சாயத்துக்களில் குறிப்பாக, மதுரை மாவட்டம் தீரிப்பட்டி, பாப்பாபட்டி, நாட்ராமங்கலம், மருதன்குடி பஞ்சாயத்துகளிலும் தேவர் சாதி வெறியர்களின் அச்சுறுத்தல் காரணமாக, தாழ்த்தப்பட்டோர் எவரும் வேட்பு மனு தாக்கல் செய்ய முடியவில்லை. தேர்தலும் நடக்கவில்லை.

சாதி வெறியர்களின் இந்த அட்டூழியத்தைக் கண்டும் காணாத எதிர்க்கட்சித் தலைவர் கருணாநிதி, ''ஐயோ! வன்முறை!'' என்று தி.மு.க. மீதான அ.தி.மு.க. குண்டர்களின் வெறியாட்டத்தை மட்டும் குற்றம் சாட்டிப் புலம்புகிறார். அரூரில் வன்னிய சாதி வெறியாட்டத்தை எதிர்க்க முன் வராத அரசியல் விபச்சாரி பா.ம.க. இராமதாசு, அ.தி.மு.க.வின் வன்முறை வெறியாட்டங்களுக்கு எதிராகக் கண்டன அறிக்கை வெளியிட்டு முணுமுணுக்கிறார்.


எந்தக் கட்சிக்கு பணபலமும் குண்டர் பலமும் சாதிய பலமும் அரசு எந்திரத்தின் ஒத்துழைப்பும் உள்ளதோ அந்தக் கட்சிதான் வெற்றி பெறும் என்பது ஓட்டுச் சீட்டு ஜனநாயகத்தின் எழுதப்படாத விதியாகி விட்டது. அதையே உச்ச கட்டத்துக்குக் கொண்டு சென்று, இதுதாண்டா ஜனநாயகம் என்று எக்காளமிடுகிறது பாசிச ஜெயா கும்பல். இத்தகைய சாதிய ஆதிக்க - கிரிமினல் பேர்வழிகள் அ.தி.மு.க.வில் மட்டுமல்ல; நாட்டின் அரசியல் சமுதாய அமைப்பில் - அதிகார வர்க்கம், போலீசு, நீதித் துறைகளிலும் ஏன், எதிர்க்கட்சிகளிலும் நிறைந்திருக்கிறார்கள். எனவேதான் தி.மு.க. தலைவர் கருணாநிதியின் மகனாகிய மு.க. அழகிரியின் ஆசி பெற்ற மதுரையைச் சேர்ந்த மிசா பாண்டியன், தேர்தல் வெற்றிக்குப் பிறகு ''அம்மா'' கட்சிக்குத் தாவிவிட்டார். ''மிசா பாண்டியன் மீது கொலை வழக்கு உள்ளதா? அதனாலென்ன? அதை அவர் கோர்ட்டில் பார்த்துக் கொள்வார்'' என்று நியாயவாதம் பேசுகிறார் பாசிச ஜெயா. மிசா பாண்டியன் மட்டுமல்ல; மேயர், தலைவர் தேர்தலுக்குப் பிறகும் எதிர்க்கட்சியினர் மற்றும் சுயேட்சைகள் பலரும் துணை மேயர், துணைத் தலைவர் தேர்தலுக்காக விலை பேசப்பட்டு ''குதிரை வியாபாரம்'' சூடாக நடந்தேறி வருகிறது.

இத்தகைய பிழைப்புவாதிகள், ஆதிக்க சாதிவெறியர்கள், கிரிமினல்களைக் கட்சியின் இரண்டாம் மட்டத் தலைவர்களாகவும் முன்னணியாளர்களாகவும் கொண்டுள்ள பாசிச ஜெயா கும்பலின் வன்முறை வெறியாட்டத்தை எதிர்த்தரப்பு ஓட்டுக் கட்சிகளால் முறியடிக்கவோ, தடுக்கவோ ஆற்றலும் உறுதியும் கிடையாது. கொள்கை - இலட்சியம் என்று பற்றுறுதி கொண்ட அணிகளும் அக்கட்சிகளுக்குக் கிடையாது. குவார்ட்டரும் பிரியாணியும் இருந்தால்தான் கட்சிப் பிரச்சார வேலைகளில் தொண்டர்கள் ஈடுபடுவார்கள் என்பது ஓட்டுக் கட்சிகளில் இயல்பாகி விட்டது. இதனால்தான் பட்டப் பகலில் தில்லுமுல்லு - மோசடி - வன்முறை வெறியாட்டங்களில் அ.தி.மு.க. குண்டர்கள் ஈடுபட்டபோது, எதுவும் செய்ய முடியாமல் முடங்கிக் கிடந்தது எதிர்த்தரப்பு.

''டேய்! மூச்...! வாயத் தொறக்காம ஓடிப் போயிடு!'' - அ.தி.மு.க. விசுவாச போலீசு அதிகாரி பொன் மாணிக்கவேலின் மிரட்டல்.



www.padippakam.com





**''வெற்றி பெற்றால் மட்டும் விட்டுவிடுவோமா?'' - ஆளுங் கட்சி குண்டர்களால் சூறையாடப்பட்ட உள்ளகரம் பேரூராட்சி சுயேட்சை கவுன்சிலரின் வீடு (மேல்படம்); மதுரை மாநகராட்சி துணை மேயர் தேர்தல்: மாநகர மன்ற அவையினுள் புகுந்து வெறியாட்டம் போடும் 'ரத்தத்தின் ரத்தங்கள்'.**

தி.மு.க. தலைவர் கருணாநிதி கைது செய்யப்பட்டதைக் கண்டித்து சென்னையில் நடந்த ஊர்வலத்தில், அ.தி.மு.க. குண்டர்களும் போலீசும் கொலை வெறியாட்டத்தைக் கட்டவிழ்த்து விட்டு தி.மு.க. தொண்டர்கள் 6 பேரின் உயிரைப் பறித்த போதிலும், அதற்கெதிராக ஒன்றும் செய்ய முடியாமல் தி.மு.க. முடங்கிப் போய்விட்ட நிலையில், இப்போதைய தேர்தல் வன்முறை - அராஜகங்களுக்கு எதிராக தி.மு.க. தொண்டர்கள் குமுறி எழுவார்கள் என்று எதிர்பார்க்க முடியுமா? ஆனாலும் ''மிதிக்க மிதிக்கப் புழுவும் புலியாகும்'', ''மக்கள் புரட்சி வெடிக்கும்'' என்றெல்லாம் தி.மு.க. தலைவர் கருணாநிதி உடன்பிறப்புகளை உசுப்பேற்றிப் பார்த்தார். ''ஐயோ! ஜனநாயகக் கற்பழிப்பு!'' என்று புலம்பிப் பார்த்தார். டெல்லி எஜமானர்களிடம் முறையிட்டு முறுக்கிப் பார்த்தார். ஒன்றும் நடக்கவில்லை. கடைசியில் இந்த அளவுக்காவது உள்ளாட்சித் தேர்தலில் வெற்றி கிடைத்ததே என்று ''அராஜக இருட்டுக்குள் அகல் விளக்கேற்றிய தமிழக வாக்காளர்களுக்கு நன்றி'' தெரிவித்து முடங்கிக் கொண்டார்.

தி.மு.க. கூட்டணியில் உரிய அளவுக்குத் தொகுதிகள் ஒதுக்காததால் தனித்து நின்று பலத்தைக் காட்டப் போவதாக உறுமிய சிறுத்தைகளின் தலைவர் திருமாவளவன், ''இதுதான் சனநாயகமா?'' என்று தேர்தலில் உதைபட்ட வேதனையில் ஒப்பாரி வைக்கிறார். ''சனநாயகம் அகல் விளக்காய் இருப்பதைவிட பகல் விளக்காய் பரிணமித்தால்தான் அனைவருக்கும் வெளிச்சம் கிட்டும்'' என்று உபதேசம் செய்கிறார். இந்த மோசடி ஜனநாயக சாக்கடையில் விழுந்து புரண்டு ''மக்களுக்கே அதிகாரம்! கடைசி மனிதனுக்கும் ஜனநாயகம்!'' கிடைக்கப் பாடுபடப் போவதாகப் பித்தலாட்டம் செய்து ஓட்டுப் பொறுக்கிவிட்டு இப்போது, ''இது என்ன வகை சனநாயகம்?'' என்று யோக்கியவானாக நாடகமாடுகிறார்.

ஆனால் ஓட்டுச் சீட்டு ஜனநாயகம் என்பது எப்போதுமே உழைக்கும் மக்களுக்கான ஜனநாயகமாக ஒரு போதும் இருந்ததில்லை; இருக்கப் போவதுமில்லை. சுருக்கமாகச் சொன்னால் ஓட்டுச் சீட்டு ஜனநாயகமே துப்பாக்கி முனையில் தான் நிலைநிறுத்தப்பட்டுள்ளது. இந்த வேட்பாளர் இவ்வளவு வாக்குகள் பெற்றார் என்பதை விட, இந்த வேட்பாளர் இவ்வளவு குண்டர்கள் - துப்பாக்கி, ஆயுதங்களைப் பெற்றிருந்தார் என்பதுதான் தேர்தல் வெற்றிக்கான அடிப்படையாக மாற்றப்பட்டுவிட்டது. ஒவ்வொரு முறையும் இது வரலாறு காணாத வன்முறைத் தேர்தல் என்று பத்திரிகைகளும் எதிர்க்கட்சிகளும் புலம்பும் அளவுக்கு இன்றைய நாடாளுமன்ற மோசடி ஜனநாயகம் அராஜகத்தை நோக்கி முன்னேறி மரண வாயிலுக்குள் தள்ளப்படுகிறது. நாடாளுமன்ற ஜனநாயகத்தின் முக்கியத் தூணாகக் கருதப்படும் தேர்தல் முறை, கசாப்புக் கடைக்கு இழுத்து வரப்பட்டு அங்கம் அங்கமாக வெட்டிச் சிதைக்கப்படுகிறது. இனி, அதன் தலையைச்சீவி உயிரைப் பறித்து மண்ணில் புதைக்க வேண்டியதுதான் பாக்கியிருக்கிறது. சாதி - மதவெறியர்கள், கிரிமினல் குண்டர்கள், பாசிசக் கொடுங்கோலர்களின் அட்டூழியங்களை முறியடிக்கவும், உழைக்கும் மக்களுக்கே எதிரான இந்த ஜனநாயக விரோத அரசியலமைப்பு முறையைத் தூக்கியெறிந்துவிட்டு, மக்களுக்கு அவசியமான, மக்களின் கரங்களில் அதிகாரத்தைக் குவிக்கும் புதிய ஜனநாயக அரசியலமைப்பை நிறுவிக் கொள்ளவும் உழைக்கும் மக்கள் வீதிகளில் இறங்கிப் போராடுவதைத் தவிர இனி வேறு என்ன வழி இருக்கிறது?

**இப்போது விற்பனையில்**

**இயக்கவியல் பொருள்முதல்வாதமும் வரலாற்றுப் பொருள்முதல்வாதமும்**

**— ஜே.வி. ஸ்டாலின்**

**விலை ரூ. 10.00**

**பிரதிகளுக்கு:**
**கீழைக்காற்று வெளியீட்டகம், 10, அவுலியா சாகிபு தெரு, எல்லீசு சாலை, சென்னை - 600 002.**

# ஆப்கான் போர்

# புதை மணலில் சிக்கியது அமெரிக்க வல்லரசு

ஆப்கான் மீதான அமெரிக்க - பிரிட்டிசு கூட்டுப்படையினர் போர் தொடங்கி ஒரு மாதத்திற்கு மேலாகிறது. ''குருயிஸ்'' ஏவுகணைகள், பாறைகள் - குகைகளை ஊடுருவித் தாக்கும் குண்டுகள் தாங்கிய விமானங்கள், ஹெலிகாப்டர் பீரங்கிகள் என்று அதிநவீன ஆயுதங்கள் கொண்டு இரவு - பகலாக ஆப்கானின் ''நகரங்கள்'' தாக்கப்படுகின்றன.

அமெரிக்க அதிபர் புஷ் போர் தொடங்கு முன்பு, ''நான் நடவடிக்கை எடுக்கும்போது, 10 கோடி ரூபாய் மதிப்புடைய ஒரு ஏவுகணையைக் கொண்டு 50 ரூபாய் மதிப்புடைய ஆளில்லாத ஒரு கூடாரத்தைத் தாக்கமாட்டேன்; ஒரு ஒட்டகத்தைத் துப்பாக்கிக் கட்டையால் அடிக்கமாட்டேன்; தீர்க்கமான தாக்குதலைத்தான் தொடுப்பேன்'' என்றார்.

''என்ன செய்வது? ஏவுகணைக்கு மதிப்புடைய ஒரு இலக்குகூட ஆப்கானில் கிடையாது. ஏழை நாடுகளின் மலிவான இலக்குகளைத் தாக்குவதற்குத் தோதாக, மலிவான ஏவுகணைகளைத்தான் அமெரிக்கா உற்பத்தி செய்ய வேண்டும். ஆனால், அது அமெரிக்காவின் ஆயுத ஏகபோக உற்பத்தியாளர்களுக்கு இலாபகரமானதாக இருக்காதே!'' என்று கிண்டலடிக்கிறார் சமூக சேவகி அருந்ததி ராய்.

முசுலீம் தீவிரவாத அமைப்பான அல் கொய்தாவின் நிறுவனத் தலைவர் ஒசாமா பின்லேடன்.



ஏற்கனவே ஆப்கானில் நடந்த 20 ஆண்டு போரின் விளைவாக 15 இலட்சம் பேர் மாண்டு போயினர். நகரங்கள் என்ற பெயரில் அங்கே எஞ்சியிருப்பவை இடிபாடுகள்தாம். இடிபாடுகளை மண்புழுதிகளாக்கும் குண்டு வீச்சுகள் தாம் இப்போது நடக்கின்றன, அமெரிக்காவின் விமான - ஏவுகணைத் தாக்குதல் தொடங்கிய இரண்டாம் நாளே கொடுக்கப்பட்ட குண்டுகளை வீசுவதற்கான இலக்குகள் - மதிக்கத் தக்க கட்டிடங்கள் எதுவும் இல்லை என்று போர் விமானிகள் திரும்பினர்.

''இலக்குகளே இல்லையே என்ன செய்யப் போகிறீர்கள்?'' என்று கேள்வி எழுப்பியபோது, ''முதலாவதாக இலக்குகளை நாங்கள் மீண்டும் தாக்குவோம். இரண்டாவதாக, இலக்குகள் தீர்ந்து போய் விடவில்லை. ஆப்கானிஸ்தான்தான் இருக்கிறதே...'' என்று அமெரிக்க இராணுவ மந்திரி ரிமிரோடு பதில் சொல்ல, விசுவாச நிருபர்கள் வெடித்துச் சிரித்தார்கள். மூன்றாம் நாள் ''ஆப்கானுடைய வானில் அமெரிக்க மேலாண்மையை நிறுவி விட்டோம்'' என்று அமெரிக்க இராணுவ அமைச்சகம் அறிவித்தது.

அடுத்து, ஆப்கான் முழுவதையும் இலக்கு வைத்துத் தாக்குதல் தொடருகிறது. அமெரிக்காவில் நடந்த பயங்கரவாதத் தாக்குதலுக்குப் பலியானவர்களை விடக் கூடுதலான பேர், ஆப்கானில் விமான - ஏவுகணைத் தாக்குதலுக்கு முன்பே, அகதிகளாகத் தப்பியோடுவதற்கு நடந்த நெரிசல், விபத்துகளில் பலியாகிவிட்டனர்.

12 மீட்டர் விட்ட அளவுக்குள் குறிதவறாது தாக்கக் கூடியவை என்று கூறப்பட்ட லேசர் கதிர் வழிகாட்டும் குண்டுகள் 1,600 மீட்டர் குறி தவறி சிவிலியன் இலக்குகளைத் தாக்கி அப்பாவி மக்கள் பலரைப் பலி கொள்ளுகிறது.

ஜலாலாபாத் நகருக்கு அருகே கோரம் என்ற கிராமத்தின் மீது நடந்த குண்டு வீச்சில் 200 பேர் மாண்டனர். காபூல் நகரில் மருத்துவமனை சிவில், பேருந்துகள் மீது குண்டு வீசியதில் நூறுக்கும் மேற்பட்டவர்கள் மாண்டனர். செஞ்சிலுவைச் சங்கத்தின் உணவு சேமிப்புக் கிடங்கு மீது குண்டு வீசி அழிக்கப்பட்டது. தாலிபான் இராணுவ நிலைகள்மீது குண்டு வீசப்போன அமெரிக்க விமானங்கள், தமது ஆதரவு வடக்குக் கூட்டணி கட்டுப்பாட்டில் உள்ள கிராமத்தின் மீது தாக்குதல் நடத்தி சிறுவர்கள் - பெண்கள் உட்பட பலரைக் கொன்று குவித்தன.

இதற்கிடையே இசுரேலிய யூதவெறி சுற்றுலா மந்திரி ஒரு தற்கொலை போராளியால் கொல்லப்பட்டதைச் சாக்கு வைத்து அமெரிக்காவின் அடியாட்படையான இசுரேல் பாலஸ்தீன மக்கள் மீது மீண்டும் பயங்கரவாதப் போர் தொடுத்துள்ளது. பாலஸ்தீனத்தின் மேற்குக் கரைப்பகுதிக்குள் புகுந்த இசுரேலிய இராணுவம் பாலஸ்தீன மக்களைக் கொன்று குவிக்கிறது.

இவற்றால் ஆத்திரமடைந்த உலக மக்கள் பல்வேறு நாடுகளிலும் கொதித்தெழுந்து அமெரிக்க - பிரிட்டிஷ் - இசுரேலிய ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிரான போராட்டங்களில் குதித்துள்ளனர். பாகிஸ்தானில் மட்டுமே, அதுவும் தாலிபான் ஆதரவாளர்களும், மதவெறியர்களும் - போராடுவதாக உலகச் செய்தி ஊடகங்கள் காட்டுகின்றன. ஆனால், தாலிபான் ஆதரவு இசுலாமிய மத வெறியர்கள் அல்லாத பல பிரிவினர் - ''கத்தோலிக்க'' இத்தாலி, ''புராட்டஸ்டண்ட்'' ஜெர்மனி, அமெரிக்கா, ''பௌத்த'' கொரியா, ''கிறித்தவ'' பிலிப்பைன்ஸ், ''இந்து'' இந்தியா என்று உலகமெங்கும் மக்கள் ஆத்திரமுற்று போரா


மேலாதிக்கப் போர் வெறியன் ஜார்ஜ் புஷ்.



www.padippakam.com

டுகின்றனர். இத்தாலியில் மட்டும் மூன்று இலட்சம் பேர் ஆக்கிரமிப்புப் போர் எதிர்ப்புப் பேரணி நடத்தியுள்ளனர்.

''நாங்கள் ஒரு அமைதியான தேசம்'' என்று அமெரிக்க அதிபர் புஷ்ஷும் பிரிட்டிஷ் பிரதமர் பிளேயரும் தமது விமான - ஏவுகணைத் தாக்குதல் தொடக்கத்தை அறிவிக்கும் போது கூறினர். ''இது எங்கள் அழைப்பு. இது அமெரிக்காவின் அழைப்பு. அமெரிக்காதான் உலகிலேயே மிகவும் சுதந்திரமான தேசம்; வெறுப்பு, வன்முறை, கொலைகள், தீமை ஆகியவற்றை நிராகரிக்கும் ஒழுக்க மதிப்பீடுகளின் அடிப்படையில் கட்டப்பட்டுள்ள தேசம். நாங்கள் ஓய்ந்துபோக மாட்டோம்'' என்று கூவினார் புஷ்.



காபூல் நகரில் மக்கள் வசிக்கும் பகுதிகளில் அமெரிக்கா நடத்திய கண்மூடித்தனமான விமானத் தாக்குதலால் மண்ணோடு மண்ணாகிப் போன குடியிருப்பு.

இந்த மதிப்பீடுகளுக்கு நேர்மாறானது தான் அமெரிக்கா என்று கண்டுகொண்ட உலக மக்கள் அதன் மீது வெறுப்பும் ஆத்திரமும் நம்பிக்கையின்மையும், சந்தேகமும் கொண்டுள்ளனர் என்பதை ஏற்க மறுக்கும் புஷ், ''இதை நான் நம்பவே முடியாது; ஏனென்றால் நாங்கள் எவ்வளவு நல்லவர்கள் என்பது எனக்குத் தெரியும்'' என்கிறார்.

ஆனால், அமெரிக்காவுக்கு வெளியே, குறிப்பாக ஆப்கானில் என்ன நடக்கிறது என்பதை அமெரிக்க மக்களிடமிருந்து மூடி மறைப்பதற்காக உலகிலேயே மிகவும் சுதந்திரமான தேசமான அமெரிக்காவில் கடுமையான செய்தி தணிக்கை, இருட்டடிப்பு வேலைகள் நடக்கின்றன. அமெரிக்க இராணுவத் தலைமையகம் பெண்டகன் வெளியிடும் தகவல்களை மட்டுமே வெளியிடும்படி செய்தி ஊடகங்கள் நிர்பந்திக்கப்படுகின்றன. ''இரகசியச்செய்திகளை வெளியிடும் எவரும் மற்றவருடைய உயிருக்கு ஆபத்து விளைவிக்கிறார்கள் என்றுதான் பொருள்'' என்று அதிபர் புஷ் எச்சரிக்கிறார். உண்மையை மூடிமறைக்கும்படி அரசு அதிகாரிகள் அறிவுறுத்தப்படுகின்றனர்.

தாலிபான் - அல் கொயிதா அமைப்புகளின் செய்திகளை அரபு வானொலி அல் ஜெசிரா மட்டும் ஒளிபரப்புகிறது. அந்தச் செய்திகளில் பின்லேடனின் இரகசியத் தகவல்கள் இருக்கும் என்றும் அதனால் அவற்றை மறு ஒளிபரப்பு செய்யக்கூடாது என்றும் அமெரிக்க இராணுவ ஆலோசகர் ரைஸ் எச்சரிக்கிறார். வர்த்தக ஒளிபரப்பு நிறுவனமான ''ஐக்கோனேஸ்''இடம் இருந்து ஆப்கான் சிவிலியன் சாவுகள் பற்றிய செய்திகளை ஒளிபரப்பும் உரிமையை விலைக்கு வாங்குவதற்கு அமெரிக்க அரசு முயல்கிறது.

ஆப்கானில் தனது இராணுவ நடவடிக்கையை மறைக்க விரும்பவில்லை என்று அறிவிக்கும் அமெரிக்க இராணுவ மந்திரி ராம்ஸ்பெல்ட் கூடவே சொல்கிறார், ''போர்காலங்களில் உண்மையின் விலை மதிப்பற்றது. அந்தப் பெண்ணை, பொய்கள் என்ற மெய்க்காவலர்கள் எப்போதும் சூழ்ந்திருக்க வேண்டும்''.

மொத்தத்தில், அமெரிக்க பிரிட்டிஷ் அரசியல் தலைவர்களும், இராணுவத் தளபதிகளும் ஆத்திரத்தில் வெதும்புகின்றனர். தாம் வகுத்துக் கொண்ட போர்த்தந்திர - செயல்தந்திர - இலக்குகள் நோக்கங்கள் எதையும் 30 நாள் விமான - ஏவுகணைத் தாக்குதலுக்குப் பின்னும் துளியும் சாதிக்க முடியவில்லை என்கிற வெறுப்பில் குமுறுகின்றனர்.



அமெரிக்காவின் மேலாதிக்கப் போர் வெறிக்குப் பலியான பச்சிளம் குழந்தை.

கடுமையான விமான - ஏவுகணைத் தாக்குதல்களால் தாலிபான் ஆட்சி சீர்குலைந்து தானே நொறுங்கிப் போகும் ஆப்கான் மக்கள் பீதியுற்று தால்பானுக்கு எதிராகத் திரும்பிக் கலகம் செய்வார்கள். வடக்குக் கூட்டணி காபூலை நோக்கி விரைந்து முன்னேறும். ஒசாமா பின்லேடனின் அல் கொயிதா பயங்கரவாத அமைப்பின் வலைப்பின்னல் சிதறிப் போய்விடும். பின்லேடனையும் - முல்லா ஓமரையும் பிடிப்பது எளிதாகிவிடும் என்கிற கனவுகள், திட்டங்கள் எதுவும் ஈடேறவில்லை.

அதேசமயம், அமெரிக்காவோ, ஆந்த்ராக்ஸ் - நோய்க்கிருமியின் தாக்குதல் பீதியில் நடுநடுங்குகிறது. அடுத்த பயங்கரவாதத் தாக்குதல் பற்றிய பயபீதியில் உறைந்து போயுள்ளது. ''ஏகாதிபத்தியவாதிகள் காற்றில் இலை அசைந்தால்கூட அஞ்சி நடுங்குகிறார்கள்'' என்கிற மாவோவின் கூற்று மீண்டும் மெய்ப்பிக்கப்பட்டிருக்கிறது.

அமெரிக்க - பிரிட்டிஷ் கூட்டுப்படை தமது இலக்கில் ஒரு இம்மிகூட சாதிக்காத நிலையில், ஆப்கான் போர் எவ்வளவு காலம் நீடிக்கும், எப்போது முடியும் என்கிற சலிப்பு அவற்றின் ஆதரவு சக்திகளிடையே உருவாகிவிட்டது. இலக்கின்றி ஆப்கான் வானில் போர் விமானங்கள் திரிகின்றன;



படிப்பகம்

www.padippakam.com

இராணுவ வாகனங்கள், தளவாடங்கள் நகர முடியாதவாறு ஆப்கானின் பனிக்காலம் நெருங்கிக் கொண்டிருக்கிறது; இசுலாமிய நோன்பு ரம்ஜான் மாதத்தில் போரைத் தொடர்ந்தால் இசுலாமிய எதிர்ப்புப் பெருகும்; தவிர்க்க முடியாத தரைப் போரைத் தொடங்கினால் ஆப்கானிலிருந்து இராணுவ சவப்பெட்டிகள் அமெரிக்காவுக்கு நாளும் வந்திறங்கும். இந்த விவகாரங்கள் போரை உடனடியாக முடிக்கும்படி நிர்பந்திக்கின்றன.

ஆனால், இதற்கெல்லாம் அமெரிக்க - பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகள் அசைந்து கொடுப்பதாக இல்லை. ''நாங்கள் இந்தத் தாக்குதலைத் திட்டமிட்டு, படிப்படியாக நிறைவேற்றுகிறோம். இது அடுத்த வசந்த காலம் வரை நீடிக்கலாம். இல்லை, அடுத்த கோடைகாலம் வரையும் நீடிக்கலாம். இது ஆப்கானில் நடப்பதை விட மேலும் நீடிக்கலாம்'' என்கிறார் அமெரிக்கப் படைகளின் கூட்டுத் தளபதி ரிச்சர்டு மையர்ஸ். ஆப்கான் போர் நீண்டகாலம் நடக்கும் என்பது மட்டுமல்ல, மேலும் விரிவுப்படுத்தப்படும் என்பதைச் சூசகமாகத் தெரிவிக்கிறார். பிறகு, இதே கருத்தை மேலும் விளக்கமாகப் பின்வருமாறு தெரிவிக்கிறார்:

''இது நீண்டகாலம் பிடிக்கும் என்று நம்புகிறேன்; இது மூர்க்கமான போராகும். மோதல்கள் இருக்கும்; இது உலக அளவினதாக இருக்கும். இது வெறுமனே இராணுவ ரீதியிலான போராக இருக்காது. நமது நண்பர்கள் - கூட்டாளிகளையும் சேர்த்து, நமது தேசிய பலத்தின் எல்லா ஆயுதங்களையும் ஈடுபடுத்துவதாக இருக்கும். உண்மையில் இது பல ஆண்டுகள், பற்பல ஆண்டுகள் நீடிக்கும். நமது வாழ்நாள் முழுக்கவும் நீடித்தால் கூட நான் வியப்படைய மாட்டேன்'' என்கிறார் மையர்ஸ்.

ஆக, அமெரிக்காவின் இராணுவ - பொருளாதாரத் தலைமையகங்கள் மீது நடந்த பயங்கரவாதத் தாக்குதலைச் சாக்கு வைத்துத் துவக்கப்பட்டிருக்கும் இந்தப் போரின் இலக்கு - நோக்கம் என்ன? போர்க்களத்தின் பரப்பு என்ன? என்பவை பற்றி அமெரிக்க - பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகள் ஆளுக்கொன்றும், நேரத்துக்கு ஒன்றுமாக மாறி மாறிப் பேசுகின்றனர். இதன்மூலம் அவர்களிடையே கருத்து வேறுபாடுகளும் குழப்பங்களும் நிலவுவதாகக் கருதிவிட முடியாது. தமது இலக்கு உலக மேலாதிக்கம் என்பதை வெவ்வேறு வகையில் படிப்படியாக வெளிப்படுத்துகின்றனர் என்பதுதான் உண்மை.

அமெரிக்காவில் பயங்கரவாதத் தாக்குதல் நடந்த அன்று, யார், எதற்காக இத்தாக்குதலை நடத்தினர் என்பதை அறியாத நிலையிலேயே இந்த நூற்றாண்டின், இந்த ஆயிரமாவது ஆண்டின் முதல் போர் என்று அதிபர் புஷ் பிரகடனம் செய்தார். அடுத்த சில மணி நேரத்திலேயே இதற்குக்




அமெரிக்காவின் ''நேடோ'' கூட்டணியைப் பயங்கரவாத அமைப்பு என அம்பலப்படுத்தி ஜெர்மனி - ஸ்டட்கார்ட் நகரில் நடந்த ஆர்ப்பாட்டம்.

காரணமான பயங்கரவாதி பின்லேடனைத் தண்டிப்போம்; அவரது அல் கொய்தா வலைப் பின்னலை நொறுக்குவோம் என்றார். அப்புறம் முடிவற்ற நீதிக்கான புனிதப் போர் என்று மதவெறியுடன் பிதற்றினார். அடுத்து பின்லேடன், அவரது அல் கொயிதா ஆகியவற்றுக்குப் பாதுகாப்புத் தரும் அரசுக்கு எதிரான போர் என்றார். பின்னர் பின்லேடன் அவரது அல் கொயிதாவோடு, முல்லா ஓமர் அவரது தாலிபான் அரசை அழிப்போம் என்றார்.

அடுத்த சில நாட்களில் நடந்த அமெரிக்க காங்கிரசு, செனட் கூட்டுக் கூட்டத்தில் உரையாற்றிய அதிபர் புஷ், ''சுமார் 60 நாடுகளில் பல பத்தாயிரம் பயங்கரவாதிகள் பதுங்கியிருக்கிறார்கள். பூமியின் சந்து பொந்துகளில் எல்லாம் ஒளிந்து கொண்டிருக்கும் அவர்களைக் களையெடுப்பதற்காக உலகு தழுவிய, நிரந்தரப் போரை அமெரிக்கா நடத்தும்'' என்று அறிவித்தார்.

''எமது தற்காப்புக்காக பிற அமைப்புகள், பிற நாடுகள் மீது கூட மேலும் நடவடிக்கை எடுப்பது எங்களுக்கு அவசியமாகலாம்'' என்று ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புக் குழுவுக்கு அமெரிக்கப் பிரதிநிதி ஜான் நீக்ரோபோண்டே எழுதுகிறார். ஐ.நா. பாதுகாப்புக் குழுவின் வரலாற்றிலேயே முதன் முறையாக, இன்னொரு உறுப்பு நாட்டின் மீது போர் நடத்துவோம் என்று அதன் உறுப்பு நாடே பகிரங்கமாக அறிவிப்பது இதுதான் முதல்முறை.

அமெரிக்காவின் சியாட்டில் நகரிலுள்ள உலக வரைபடங்கள் தயாரிப்பு நிறுவனத்திற்கு அமெரிக்க நிர்வாகம் ஒரு அரசாணை பிறப்பித்திருக்கிறது. அதன்படி ஆப்கானின் உட்பகுதிகள் அனைத்தையும் காட்டும் விரிவான வரைபடங்களோடு, சூடான், ஏமன் ஆகிய நாடுகளின் வரைபடங்களைக் கூடத் தரும்படி கேட்டுள்ளது. இந்த நாடுகளையும் அமெரிக்கா தாக்கப் போகிறதா என்ற சந்தேகம் கிளம்பியுள்ள நிலையில், ஈராக் மீதான இறுதித் தாக்குதலை நடத்தப்போவதாக அமெரிக்கா எச்சரித்துள்ளது.

அமெரிக்காவின் முன்னாள், இன்னாள் அரசு உயர் அதிகாரிகள் 19 பேரைக் கொண்ட அமெரிக்க இராணுவக் கொள்கை வாரியம் கூடி, ஈராக்கின் சதாம் உசேனையும் பயங்கரவாத எதிர்ப்புப் போரின் இலக்காக வைப்பது குறித்துப் பரிசீலித்தது. உலகு தழுவிய பயங்கரவாதத்துடன் சதாம் உசேனுக்கு தொடர்பு இருப்பதற்கான சாட்சியங்களை சேகரிப்பதற்கான வேலையை அக்குழு கிளிண்டன் ஆட்சிக்கால சி.ஐ.ஏ. இயக்குநர் ஜேம்ஸ் உஸ்லி என்பவரிடம் ஒப்படைத்துள்ளது.

இதற்கான சாட்சியங்கள் ''திரட்டப்படும்'' முன்னரே, இசுரேல், ஜோர்டான் முதலிய அமெரிக்கக் கைக்கூலி நாடுகளின் உளவு அமைப்புகளும் சதாம் உசைனுக்கும் அமெரிக்காவில் நடந்த பயங்கரவாதத் தாக்குதலுக்கும் தொடர்பில்லை என்று அறிவித்த பின்னரும், எப்படியாவது ஈராக்கையும் தமது உடனடி இலக்கில் சேர்ப்பதற்கு அமெரிக்க முயலுகிறது.

ஆப்கான் மீது விமான ஏவுகணைத் தாக்குதல் தொடங்கிய அடுத்த வாரமே அமெரிக்க இராணுவ மந்திரி டொனால்டு ராம்ஸ்பெல்ட் சொன்னார், ''போரின் அடுத்த கட்டம் ஈராக்கின் சதாம் உசேனை அகற்றுவதுதான். அந்த நடவடிக்கையின் ஒரு பகுதியாக, ஈராக்கின் ஒரு பகுதியை அமெரிக்கப் படைகள் கைப்பற்றி, வெளிநாடுகளில் வாழும் ஈராக்கியர்களைக் கொண்டு ஒரு அரசாங்கத்தை நிறுவுவதுதான்''. இந்தப் பொம்மை அரசின் வருமானத்திற்காகவும், அமெரிக்க எண்ணெய் ஏகபோகங்களின் கொள்ளைக்காகவும் தெற்கு ஈராக்கின் பசாரா நகருக்கு அருகிலுள்ள எண்ணெய் வயல்களைக் கைப்பற்றவும் அமெரிக்கா திட்டமிட்டுள்ளது.

பத்தாண்டுகளாகவே, ஈராக்கில் சதாம் உசேனின் ஆட்சியை வீழ்த்தி, தனது எடுபிடி - ஏவலாள் ஆட்சியை நிறுவுவதற்கு அமெரிக்கா முயன்று வருகிறது. மீண்டும் அந்த முயற்சியைப் புதுப்பித்திருப்பதோடு, ஆப்கானிலும் தாலிபான் ஆட்சியை வீழ்த்தி, தனது கைக்கூலி அரசை நிறுவுவதற்கு எத்தனிக்கிறது. ஏற்கனவே, ஹெய்தி, ஹண்டுராஸ், பனாமா போன்ற குட்டி நாடுகளில் செய்ததைப் போல, அதிரடிப் படைகளை ஏவி ஆட்சிக் கவிழ்ப்புகளையும் பொம்மை அரசுகளை நிறுவுவதையும் சாதித்துவிட எண்ணுகிறது. ஆனால், அமெரிக்காவோ வாய் கொள்ள முடியாத அளவு பெரும் கறித்துண்டைக் கவ்விக் கொண்டுள்ளது!

— தொடரும்



படிப்பகம்

www.padippakam.com



# மருக்காலம்பட்டியில்
# சர்வகட்சி ஆதரவுடன்
# சாதிவெறியாட்டம்

இடிந்து கிடக்கும் வீடுகள்; நொறுங்கிக் கிடக்கும் பண்ட பாத்திரங்கள், தொலைக்காட்சிப் பெட்டிகள், சைக்கிள்கள்; மனித வாடையே இல்லாமல் வெறிச்சோடி கிடக்கும் கிராமம் - இது அமெரிக்காவின் குண்டு வீச்சினால் உருக்குலைந்து கிடக்கும் ஆப்கான் நாட்டின் அவலக் காட்சி அல்ல. சமத்துவபுரம் கண்டு, சமபந்தி விருந்து நடத்தி, 'அமைதிப் பூங்கா'வாகத் திகழும் தமிழகத்தின் மருக்காலம்பட்டி கிராமத்தில்தான் இந்தக் கொடுமை. தலையிலே மூட்டையும், கையிலே துணிப்பையும் இடுப்பிலே கைக்குழந்தையுமாக அந்தக் கிராமத்தை விட்டே தாழ்த்தப்பட்ட மக்கள் அஞ்சி நடுங்கிக் கொண்டு அகதிகளாக ஓடுகிறார்கள். வன்னிய சாதிவெறியர்கள் எப்போது தாக்குவார்களோ என்ற அச்சமும் பீதியும் அவர்களைப் பிடித்தாட்டுகிறது.

தருமபுரி மாவட்டம் அரூர் அருகே பாபிரெட்டிப்பட்டி வட்டத்திலுள்ள சிறிய கிராமம்தான் மருக்காலம்பட்டி. ஏறத்தாழ நூறு தாழ்த்தப்பட்ட குடும்பங்கள் உள்ள இக்கிராமத்தில், நீண்ட காலமாகவே வன்னிய சாதி வெறியர்கள் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர்.



வனனிய சாதி வெறியர்களின் தாக்குதலால் ஊரைவிட்டு அகதிகளாக வெளியேறும் தாழ்த்தப்பட்ட மக்கள்.

இன்றுவரையில் தேநீர் விடுதிகளில் இரட்டைக் குவளை முறையைக் கறாராக நடைமுறைப்படுத்தி வருவதோடு, தாழ்த்தப்பட்டோர் செருப்பு போட்டுக் கொண்டு தெருவில் நடக்கவும், குடையை விரித்துப் பிடிக்கவும் தடைவிதித்துத் தீண்டாமைக் கொடுமையைச் செயல்படுத்தி வருகின்றனர். அண்மைக் காலமாக தாழ்த்தப்பட்டோர், ''தலித்'' அமைப்புகளில் திரண்டு இக்கொடுமைகளை அவ்வப்போது எதிர்க்கத் தொடங்கியதும், வன்னிய சாதிவெறியர்கள் ஆத்திரமுற்று, இதற்குப் பழி வாங்கத் தக்க தருணத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தனர்.

இந்நிலையில் உள்ளாட்சித் தேர்தல் வந்தது. மருக்காலம்பட்டி பஞ்சாயத்தின் (முன்னாள்) தலைவரும் தி.மு.க.வைச் சேர்ந்த வன்னிய சாதிவெறியருமான வடிவேலு, கிராமத்தின் சாதிய ஆதிக்க கட்டைப் பஞ்சாயத்தின் மூலம் பஞ்சாயத்து தலைவர் பதவியை ரூ. 4,10,000-க்கு ஏலம் எடுத்தார். தேர்தலில் வடிவேலு வெற்றி பெறாமல் போனால், சாதிய ஆதிக்க கட்டைப் பஞ்சாயத்தார் அதைப் போல இரு மடங்குத் தொகையை (ரூ. 8,20,000/-) வடிவேலுவுக்குத் தரவேண்டும் என்பது கட்டைப் பஞ்சாயத்தின் ஒப்பந்தம். இம்முடிவுக்குக் கட்டுப்பட்டு தாழ்த்தப்பட்டோர் வடிவேலுவுக்கு ஓட்டுப் போடவேண்டும் என்பது அறிவிக்கப்படாத உத்தரவு.

இதை ஏற்க மறுத்து தாழ்த்தப்பட்டோர் தமது சாதியைச் சேர்ந்த தங்கதுரை என்பவரை வேட்பாளராக நிறுத்தினர். வேட்பு மனுவை வாபஸ் வாங்கச் சொல்லி வன்னிய சாதி வெறியர்கள் கொலை மிரட்டல் விடுத்துப் பல வழிகளிலும் அச்சுறுத்திய போதிலும் தங்கதுரை உறுதியாக நின்றார்.

இதனால் ஆத்திரமடைந்த வன்னிய சாதிவெறியர்கள் தேர்தல் நாளான அக்டோபர் 16-ஆம் தேதியன்று ஓட்டுப்போட வந்த தாழ்த்தப்பட்ட மக்களை வழிமறித்துத் தாக்கி விரட்டியடித்தனர். ''பறப்பசங்களை இப்படியே விட்டா திமிரு அதிகமாயிடும்'' என்று அன்றிரவு கூடிப் பேசிய வன்னிய சாதி வெறியர்கள், அம்மாபாளையம், நடூர், ஆனாபுரம் முதலான கிராமங்களிலிருந்து குண்டர்களைத் திரட்டிக் கொண்டு தாழ்த்தப்பட்டோர் காலனிக்குள் புகுந்து வெறியாட்டம் போட்டனர். இத்தாக்குதலை எதிர்கொள்ள முடியாமல் தாழ்த்தப்பட்டோர் உயிருக்கு அஞ்சி குழந்தை குட்டிகளுடன் கரும்புக் காட்டுக்குள் ஓடி ஒளிந்ததும், வீடுகளிலிருந்த பண்ட பாத்திரங்கள், தொலைக்காட்சி பெட்டிகள், மொபெட் - சைக்கிள்கள் அனைத்தும் அடித்து நொறுக்கப்பட்டுச் சூறையாடப்பட்டன. சில வீடுகள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன.

மறுநாள் 17-ஆம் தேதியன்று காலை மீண்டும் வன்னிய சாதி வெறியாட்டம் தொடர்ந்தது. கூரை வீடுகள் தீயிடப்பட்டன. ஓட்டு வீடுகள் அனைத்தும் அடித்து நொறுக்கப்பட்டன. பாத்திரங்கள், பெட்டிகள், கட்டில்-பீரோ அனைத்தும் கிணற்றிலே வீசியெறியப்பட்டதோடு, தாழ்த்தப்பட்டோரின் 6 பம்பு செட்டுகளும் விவசாய நிலங்களும் நாசமாக்கப்பட்டன. ஊருக்கு நடுவே இருந்த அம்பேத்கார் சிலை உடைத்து நொறுக்கப்பட்டது.

— தொடர்ச்சி 13-ஆம் பக்கம்

வன்னிய சாதி வெறியர்கள் வீடு புகுந்து அடித்து நொறுக்கிய கோரம்.



# "பொடோ" சட்டம்: பயங்கரவாதப் பீதியூட்டி பாசிசத் தாக்குதல்

அரைகுறையாகக் கைவிடப்பட்ட "தடா" சட்டத்திற்கு மறுவாழ்வு கொடுத்து, தீவிரவாதத் தடுப்பு மேலாணை - "பொடோ" (POTO - Prevention of Terrorism Ordinance) என்ற பெயரில் மீண்டும் "தடா"வைக் கொண்டு வந்திருக்கிறது, பா.ஜ.க. கூட்டணி அரசு.

பயங்கரவாதிகள் என்றால் அரசுக்கு எதிராக துப்பாக்கி, குண்டுகளை வைத்துக் கொண்டு வன்முறையில் ஈடுபடுபவர்கள் எனப் பெரும்பாலோர் நினைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால், "பொடோ" மேலாணையோ இந்தியாவின் ஒருமைப்பாடு - ஐக்கியத்தைச் சந்தேகிப்பவர்களைக் கூடப் பயங்கரவாதிகளாகப் பார்க்கிறது.

நீங்கள் காசுமீர் தீவிரவாதிகளை ஆதரிக்கத் தேவையில்லை. அதேசமயம், காசுமீரில் நடக்கும் 'பயங்கரவாதத்துக்கு' எதிரான இராணுவ அட்டூழியங்களை, மனித உரிமை மீறல்களை எதிர்ப்பவராக இருந்தால், உங்களை இந்திய ஐக்கியத்துக்கு எதிரானவராகக் குற்றஞ்சுமத்தி "பொடோ"வின் கீழ் கைது செய்து தண்டிக்க முடியும்.

தீவிரவாதிகளை பேட்டி கண்டு வெளியிட்ட பத்திரிகையாளரிடம், அத்தீவிரவாதிகள் பற்றிய விவரங்களை போலீசார் விசாரிக்கும் பொழுது, அந்தப் பத்திரிகையாளர், தனது தொழில் நியாயப்படி தீவிரவாதிகள் பற்றிய இரகசிய விவரங்களை போலீசாரிடம் கூற மறுத்தால், அந்தப் பத்திரிகையாளரையும் பயங்கரவாதிகளுக்குத் துணை போவதாகக் கூறி "பொடோ"வின்படித் தண்டிக்க முடியும்.

"ஒவ்வொரு குடிமகனும் தேவைப்பட்டால் போலீசின் உளவாளியாக மாற வேண்டும்; அதற்கு உடன்பட மறுப்பவர்கள் பயங்கரவாதிகள்தான்" என "பொடோ" முத்திரை குத்துகிறது.

தீவிரவாதிகள் என முத்திரை குத்தப்பட்டுள்ள அமைப்புகள் முன் வைக்கும் மாற்று அரசியல் கருத்துக்களினால் கவரப்பட்டு, அவர்களுக்கு நன்கொடை அளிக்கும் சாதாரண உழைக்கும் மக்களைக்கூட, பயங்கரவாதத்துக்கு உதவியதாகக் குற்றஞ்சுமத்தி, இச்சட்டப்படித் தண்டிக்க முடியும். சுருக்கமாகச் சொன்னால், "பொடோ" கருத்து சுதந்திரத்தையே பயங்கரவாதமாகப் பார்க்கிறது.

"ஒரு நபருக்குக் காயமோ, மரணமோ ஏற்படுத்தும் வகையில், அல்லது ஒரு சொத்திற்கு, அத்தியாவசியப் பணிகளுக்குச் சேதம் ஏற்படுத்தும் வகையில் ஆயுதம், வெடிபொருட்களைக் கொண்டோ அல்லது வேறு வழிகளிலோ நடத்தப்பெறும் நடவடிக்கைகள் அனைத்தும் தீவிரவாதம்" என "பொடோ" கூறுகிறது.

இதன்படி பார்த்தால், பொதுத்துறை நிறுவனங்களைத் தனியார்மயமாக்குவதை எதிர்த்துத் தொழிலாளர் நடத்தும் போராட்டங்களையும்; இறால் பண்ணைகளுக்கு எதிராக விவசாயிகள் நடத்தும் போராட்டங்களையும்; என்ரானுக்கு எதிராகவும், ஸ்டெர்லைட்டுக்கு எதிராகவும் நடைபெறும் போராட்டங்களையும் கூடத் தீவிரவாதம் என முத்திரை குத்த முடியும்.

தனியார்மயம், தாராளமயம், பன்னாட்டு நிறுவனங்களுக்கு எதிராக எழுந்து வரும் இந்திய மக்களின் புரட்சிகரப் போராட்டங்களைப் பயங்கரவாதம் என முத்திரை குத்த வேண்டும் என்பதற்காகவே பொடோ சட்டம் தீவிரவாதத்தைப் பொத்தாம் பொதுவாக வரையறுக்கிறது.

இச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுபவர்களை முப்பது நாட்கள் வரை போலீசு காவலில் வைத்து விசாரிக்கலாம்; கைதானவர்களைச் சித்திரவதை செய்து போலீசு அதிகாரிகள் பெற்ற வாக்குமூலத்தை நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளும். இயற்கை நீதிக்கு முரணாக, இச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுபவர்களைக் குற்றவாளி என்று நிரூபிக்க வேண்டிய பொறுப்பு போலீசுக்கு கிடையாது. மாறாக, கைது செய்யப்படுபவர்கள்தாம் தங்களை நிரபராதிகள் என நிரூபித்துக் கொள்ள வேண்டும். குற்றப் பத்திரிகையே தாக்கல் செய்யாமல் ஒருவரை ஆறுமாதம் வரை சிறை வைக்கலாம். பயங்கரவாதிகளின், அவர்களுக்கு உதவியவர்களின் சொத்துக்களை ஒரு சாதாரண போலீசு அதிகாரியே பறிமுதல் செய்து விட முடியும். இவ்வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றங்கள் விரும்பினால் மட்டுமே குற்றவாளிகளுக்குப் பிணை வழங்கப்படும்.

தண்டனை, பிணை குறித்த மேல்முறையீடுகளை உச்ச நீதிமன்றத்தில் மட்டும்தான் தாக்கல் செய்ய முடியும். நாடெங்கும் போலீசு ராஜ்ஜியத்தைக் கட்டமைப்பதற்காகவே தயாரிக்கப்பட்டுள்ள இச்சட்டம், குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற்றுவிட்டது; நாடாளுமன்றத்தின் அங்கீகாரத்திற்காகக் காத்து நிற்கிறது.

***

"பொடோ"வின் அண்ணனான "தடா" அமலில் இருந்த பத்தாண்டுகளில் அச்சட்டத்தின் கீழ் நாடெங்கிலும் ஏறத்தாழ 67,000 பேர் கைது செய்யப்பட்டனர். இவர்களுள் 8,000 பேர் மீதுதான் குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. இந்த 8,000 பேரிலும் வழக்கு விசாரணையின் போது 725 பேர் மீது மட்டுமே குற்றம் சாட்டப்பட்டது. மீதி அனைவரும் - கிட்டதட்ட 66,000 அப்பாவிகள், எவ்விதக் குற்றமும் செய்யாமல், எவ்வித வழக்கும் விசாரணையும் நடைபெறாமல், போலீசாலும், நீதிமன்றத்தாலும் பல ஆண்டுகள் சட்ட விரோதமாகச் சிறை வைக்கப்பட்டுத் தண்டிக்கப்பட்டனர்.

பயங்கரவாதமே தலைதூக்காத குஜராத் மாநிலத்தில்தான் அப்பாவி முசுலீம்களும், தொழிலாளர்களும் ஆயிரக்கணக்கில் "தடா"வின் கீழ் கைது செய்யப்பட்டனர்;

போராடும் மக்கள் மீது போலீசார் அரசு பயங்கரவாதத்தை ஏவி விடுவதைச் சட்டப்பூர்வமாக்குகிறது "பொடோ".



அதேசமயம், தீவிரவாதம் தலைவிரித்தாடுவதாகக் கூறப்படும் காசுமீரில் ''தடா''வின் கீழ் பதிவு செய்யப்பட்ட 20,000 வழக்குகளில் 11,000 வழக்குகள் ஆரம்ப விசாரணைக்குப் பிறகு விலக்கிக் கொள்ளப்பட்டன; போதிய ஆதாரமில்லாததால் 2000 வழக்குகள் கைவிடப்பட்டன. இறுதியில் 778 வழக்குகள் விசாரணை முடியாமல் நிலுவையில் இருந்தன.



ஸ்ரீநகரில் பொதுமக்களைச் சுற்றி வளைத்துத் தேடுதல் வேட்டை நடத்தும் இந்திய இராணுவம்.

பயங்கரவாதத்தை ஒழிப்பதற்காகக் கொண்டு வரப்பட்ட ''தடா'', அதற்கு மாறாக, போலீசு அதிகாரிகளால் தெரிந்தே அப்பாவி மக்களின் மீது ஏவிவிடப்பட்டதை அரசே ஒப்புக் கொண்டு, நாடாளுமன்றத்தில் அறிவித்த புள்ளி விவரங்கள் இவை. இந்த உண்மைகளை முன்வைத்துதான், மனித உரிமை அமைப்புகள் போலீசுக்கு வரம்பற்ற அதிகாரம் அளிக்கும் பாசிசச் சட்டமான ''பொடோ'' கொண்டு வரப்படுவதை எதிர்க்கின்றன.

ஆனால், அத்வானியோ, ''பொடோவைத் தவறாகப் பயன்படுத்தும் அதிகாரிகளைத் தண்டிக்க இந்தச் சட்டத்திலேயே இடமிருக்கிறது; இந்தச் சட்டம், மனித முகம் கொண்ட தடா'' என்று வக்காலத்து வாங்குகிறார்.

இந்து மதவெறியர்களுடன் கூட்டணி கட்டிக் கொண்டுள்ள திராவிடக் கட்சிகள் மொழி, இனம், மதச் சிறுபான்மை மக்களுக்கு எதிராகவும் கொண்டு வரப்படும் ''பொடோ'' சட்டத்தை எதிர்க்கத் துப்பில்லாமல், அதைச் சாதுர்யமாக நியாயப்படுத்தி வருகின்றன. தி.மு.க. தலைவர் கருணாநிதி, ''நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் சொல்லும் திருத்தத்தையும் சேர்த்துக் கொண்டு இச்சட்டத்தைக் கொண்டு வர வேண்டும்'' என ஆலோசனை சொல்கிறார். ''தடா''வை எதிர்த்து உதைபட்ட இராமதாசோ, அந்தப் பயத்தில், ''மக்களுக்கு எந்தப் பாதிப்பும் வரக்கூடாது'' என எச்சரிக்கிறார்.

இந்த ஆலோசனைகள், எச்சரிக்கைகளுக்கு மாறாக ''பொடோ'' கொண்டு வரப்பட்டு, 'தவறாக' நடைமுறைப்படுத்தப் பட்டால், இந்த வீரர்கள் என்ன செய்துவிடுவார்கள்? ஆர்.எஸ்.எஸ். கும்பல் முசுலீம் / கிறித்தவர்களைத் தாக்குவதையே எதிர்க்கத் துப்பில்லாதவர்களிடம், போலீசு அதிகாரிகள் முசுலீம் மக்களை நர வேட்டையாடுவதை எதிர்க்கும் திராணியை எதிர்பார்க்க முடியுமா? தனது கட்சித் தொண்டர்களைக் கடற்கரைச் சாலையில் கொல்ல முயன்ற போலீசைத் திருப்பித் தாக்கக்கூடத் துணிவின்றிக் கோழையைப் போல் கவர்னரிடம் மனு கொடுத்த கருணாநிதி, பொடோவுக்கு எதிராகப் பொங்கியெழுந்து விடுவாரா என்ன?

***

பொடோ சட்டம் அப்பாவி மக்களின் மனித உரிமைகள் - பாதுகாப்பு குறித்து அக்கறை கொண்டிருப்பதாக மாய்மாலம் செய்யும் அதே அத்வானிதான், மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளில் இருந்து 'அப்பாவி' போலீசாரைப் பாதுகாப்பது குறித்தும் அக்கறை காட்டுகிறார்.

இரண்டு மாதங்களுக்கு முன்பு ''இந்து சமாசார்'' என்ற பஞ்சாபைச் சேர்ந்த நாளிதழ் நடத்திய விழாவில் பேசிய அத்வானி, ''பஞ்சாப், காசுமீர் மற்றும் வடகிழக்கு மாநிலங்களில் நடந்துவரும் பயங்கரவாத ஒழிப்பு நடவடிக்கைகளில், மனித உரிமை மீறல் குற்றம் சுமத்தப்பட்டு வழக்குகளைச் சந்தித்துவரும் இராணுவத்தினருக்கும், போலீசாருக்கும் சட்டபூர்வ பாதுகாப்பும், நிவாரணமும் கொடுக்க அரசு ஆலோசித்து வருவதாக''க் கூறினார்.

அப்பாவி மக்கள் மீண்டும் பாதிக்கப்பட்டுவிடக் கூடாது என்ற அடிப்படையில்தான் ''பொடோ'' கொண்டு வரப்படுவதை எதிர்ப்பதாகக் கூறும் ஓட்டுக் கட்சிகள் கூட, ''தடா'' போன்ற பாசிசச் சட்டங்களைப் பயன்படுத்திக் கொண்டு அப்பாவி மக்களை நர வேட்டையாடிய போலீசாருக்கு பொது மன்னிப்பு வழங்க அரசு திட்டம் போடுவதை எதிர்க்க முன் வரவில்லை. மாறாக, இவை இந்தப் பிரச்சினையில் பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழன் என்பது போல் 'புத்திசாலித்தனமாக' நடந்து கொள்கின்றன.

அத்வானிக்கு முன்பாகவே, பஞ்சாப் மாநில வலது கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த ஜோகிந்தர் தயால், ''தீவிரவாதிகளை வேரோடு சாய்த்து நாட்டுக்குச் சேவை செய்த அதிகாரிகளின் மீது சிறுபிள்ளைத்தனமாக வழக்குகளைப் போட்டு அவமானப்படுத்தக் கூடாது'' என பஞ்சாப் போலீசுக்காக வக்காலத்து வாங்கினார்.

இடது கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் சுர்ஜித், ''போலீசார் நடவடிக்கையில் இறங்கியிருக்காவிட்டால், தீவிரவாதத்தை ஒழித்திருக்க முடியாது'' எனக் கூறி, அத்வானியின் பொது மன்னிப்புக்கு முட்டுக் கொடுத்து வருகிறார்.

'கம்யூனிஸ்டு'களின் இலட்சணமே இதுதான் என்றால், பஞ்சாபில் போலீசைத் தூண்டிவிட்டு 'தீவிரவாதத்தை' ஒழித்த காங்கிரசைப் பற்றிச் சொல்ல வேண்டியதேயில்லை.

சீக்கிய மதத் தீவிரவாதத்தை ஒழிப்பது என்ற போர்வையில் பஞ்சாப் போலீசார் நடத்திய மனித வேட்டை - போலி மோதல் கொலைகள் தொடர்பாக 264 போலீசு அதிகாரிகள் மீது வழக்குகள் நடந்து வருகின்றன; மனித உரிமை மீறல் தொடர்பாக 107 போலீசு அதிகாரிகள் விசாரிக்கப்பட்டு வருகின்றனர்; பஞ்சாப் போலீசின் அத்து மீறல்களை விசாரித்துத் தண்டிக்கக் கோரும் 826 மனுக்கள் மீதான விசாரணை உச்ச நீதிமன்றத்திலும், பஞ்சாப் உயர் நீதிமன்றத்திலும் நடந்து வருகிறது.

பஞ்சாப் போலீசு மீது சுமத்தப்பட்டுள்ள இந்த மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள், அவர்கள் ஏதோ அறியாமல் செய்துவிட்ட தவறுகள் அல்ல; களையைப் பிடுங்கும் போது நாலு பயிரும் சேர்ந்து வருவது போல, தீவிரவாதிகளோடு போலீசார் நடத்திய மோதலின்பொழுது அப்பாவி மக்களும் சுட்டுக் கொல்லப்பட்டார்கள் என்பதற்காகப் போடப்பட்டவையும் அல்ல.

சீக்கிய மதத் தீவிரவாதிகளை ஒழிப்பதற்காக பஞ்சாப் போலீசு நடத்திய போலி மோதல் கொலைகளுக்கு அப்பாற்பட்டு, அந்தப் பத்து வருடங்களில் கிட்டதட்ட 25,000 சீக்கியர்கள் 'காணாமல் போய்'விட்டனர். பஞ்சாப் போலீசின் ஆள் கடத்தல் - படுகொலைகள் பற்றி சி.பி.ஐ. மூலம் உச்ச நீதிமன்றம் நடத்திய விசாரணையில் பஞ்சாபில் தருண் தருண் மாவட்டத்தில் மட்டும் கிட்டதட்ட 400 அப்பாவி சீக்கியர்கள் போலீசாரால் சித்திரவதை செய்து கொல்லப்பட்டு, அவர்களது உடல்கள் இரகசியமாக எரிக்கப்பட்டது

கண்டுபிடிக்கப்பட்டது. மீதமுள்ள 'காணாமல் போன' சீக்கியர்களின் தலைவிதியைப் பற்றி உச்ச நீதிமன்றமும் அலட்டிக் கொள்ளவில்லை; பஞ்சாப் போலீசும் அடாவடித்தனமாக தனக்கு எதுவுமே தெரியாதென்று சாதித்து வருகிறது.

சீக்கிய மதத் தீவிரவாதத்தை ஒழிக்க பஞ்சாப் போலீசு கட்டவிழ்த்துவிட்ட அரசு பயங்கரவாதத்தால் கொல்லப்பட்டவர்களின், 'காணாமல் போன'வர்களின் எண்ணிக்கையோடு ஒப்பிடும் பொழுது, மனித உரிமை மீறல்கள் தொடர்பாக பஞ்சாப் போலீசு மீது தொடுக்கப்பட்டுள்ள வழக்குகளின் எண்ணிக்கை 1 சதவீதத்துக்கும் குறைவானதுதான். கடந்த பத்தாண்டுகளில் ஒன்பதே போலீசார்தான் இந்தக் குற்றங்களுக்காகத் தண்டிக்கப்பட்டு சிறையில் தள்ளப்பட்டுள்ளனர். 249 போலீசார் பிணையில் வெளியே வந்து சுதந்திரமாகச் சுற்றிக் கொண்டு திரிகின்றனர். பஞ்சாப் போலீசுக்கு எதிராகப் போடப்பட்டமனுக்களில், 1404 வழக்குகளை ஆதாரமில்லை என்று கூறி நீதிமன்றங்கள் ஏற்கனவே தள்ளுபடி செய்துவிட்டன.

பயங்கரவாதம் தலைதூக்காத மாநிலங்களில் போலீசார் தெரிந்தே செய்யும் கொட்டடிக் கொலைகள் - வன்புணர்ச்சிக் குற்றங்களுக்காக அவர்களைத் தண்டிப்பதே குதிரைக் கொம்பாக இருக்கும் பொழுது, ''தேச ஒற்றுமை''க்காக பயங்கரவாதத்தை ஒழிப்பது என்ற போர்வையில் போலீசார் நடத்தும் அத்துமீறல்களை எதிர்த்து வழக்கு தொடுப்பதற்கும், வழக்கை நடத்துவதற்கும் உயிரைப் பணயமாக வைத்துப் போராடியாக வேண்டும் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

இப்படிப்பட்ட நிலையில் பஞ்சாப் போலீசுக்கு எதிராக நடந்து வரும் வழக்குகளையும், விசாரணைகளையம் சிதைக்கும் வண்ணம் ஓட்டுக் கட்சிகள் அனைத்தும் ஒரே குரலில் பஞ்சாப் போலீசுக்கு பொது மன்னிப்பு வழங்க வேண்டும் என்று கூறுவது கடைந்தெடுத்த அயோக்கியத்தனம் தான். ''பொடோ'' சட்டத்திலேயே தவறு செய்யும் போலீசு அதிகாரிகளைத் தண்டிக்க வழி இருக்கிறது என்று அத்வானி கூறுவது கடைந்தெடுத்த மோசடித்தனம்தான்.

பஞ்சாப் போலீசோ இன்னும் ஒருபடி மேலேபோய், ''பொது மன்னிப்பு வழங்குவது என்பது தேசத்திற்காகப் போராடிய போலீசாரை கிரிமினல் குற்றவாளியாக்குகிறது. எனவே, எங்களுக்கு பொது மன்னிப்பு தேவையில்லை. மாறாக, பஞ்சாப் போலீசு மீது போடப்பட்டுள்ள மனித உரிமை மீறல் வழக்குகள் அனைத்தையும் அரசு ரத்து செய்ய வேண்டும்'' எனக் கத்துகிறார்கள். பஞ்சாபைச் சுடுகாடாக்கிய (ஓய்வு பெற்ற) போலீசு அதிகாரி கே.பி.எஸ். கில் தலைமையில் திரண்டிருக்கும் இந்தக் கொலைகார கும்பல், ''அரசு வழக்குகளை திரும்பப் பெறாவிட்டால், தியாகிகள் தினத்தன்று, தங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள போலீசு மெடல்களைத் திரும்பக் கொடுத்து விடுவோம்'' என மிரட்டுகிறது.

அரசு ஊழியர்களும், தொழிலாளர்களும் கூலி உயர்வுக்காக வேலை நிறுத்தம் செய்தால், அதை, ''அரசை மிரட்டுகிறார்கள்'' என இட்டுக் கட்டி எழுதும் பத்திரிகைகள், பஞ்சாப் போலீசார் அரசுக்கு எதிராகப் பகிரங்கமாக சவால் விடுவதை அம்பலப்படுத்த மறுக்கின்றன. போலீசார் ஒன்றாகச் சேர்ந்து தொழிற்சங்க உரிமைகளுக்காகப் போராடினால் சட்டம் - ஒழுங்கு கெட்டுப் போகும் என நியாயம் பேசும் முதலாளித்துவக் கும்பல், அவர்கள் இதைப் போல பாசிச குண்டர் படையாக ஒன்று திரண்டு சிவில் சமூகத்துக்கு எதிராகப் போராடுவதை மட்டும் திட்டமிட்டே அனுமதித்து வருகின்றன.



**'காணாமல் போன' தனது மகன் குல்விந்தர் சிங்கின் நினைவுகளை நெஞ்சில் சுமந்தபடி காலத்தை ஓட்டும் சீக்கிய தாய் மஞ்ஜித் கவுர்.**

***

''தடா'' போன்ற பாசிசச் சட்டங்களைப் பயன்படுத்திக் கொண்டு வெறியாட்டம் போட்ட போலீசாருக்கு பொது மன்னிப்பு வழங்க வக்காலத்து வாங்கும் ஓட்டுக் கட்சிகள், காலாவதியாகிப் போன ''தடா'' சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட்டவர்களை விடுதலை செய்வது பற்றியோ, இச்சட்டத்தின் கீழ் நடந்து வரும் வழக்குகளைத் திரும்பப் பெற்றுக் கொள்வது பற்றியோ வாயே திறப்பதில்லை. காலாவதியாகிப் போன ''தடா'' சட்டத்தின் கீழ் நடந்து வரும் பம்பாய் குண்டு வெடிப்பு உள்ளிட்ட பல வழக்குகளை, வேறு குற்றவியல் சட்டத்தின் கீழ் நடத்தக்கூட இவர்கள் தயாராக இல்லை.

மாறாக, சோ போன்ற பார்ப்பன பாசிஸ்டுகள், ''மனித உரிமை என்று மிரட்டியே போலீசாரின் கைகளைக் கட்டிவிடுவதால் தான் பயங்கரவாதத்தை ஒழிக்க முடியவில்லை; ஏற்கனவே இருக்கும் கிரிமினல் சட்டங்களைப் பயன்படுத்தி பயங்கரவாதிகளை ஒழிக்க முடியாது'' என்று திரும்பத் திரும்பக் கூறி வருகின்றனர். பார்ப்பன - பாசிஸ்டுகளின் இந்த ஒப்பாரி முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைப்பது போன்றது.

''தடா''வும், ''பொடோ'' வும் வருவதற்கு முன்பிருந்தே இருந்துவரும் கலவரப் பகுதிச் சட்டமும், ஆயுதப்படை சிறப்புச் சட்டமும் இராணுவத்திற்கு முழுச் சுதந்திரம் அளிப்பவைதான். இந்த இரு சட்டங்களும் மறைமுகமாக இராணுவ ஆட்சியை சிவில் சமூகத்தின் மீது திணிப்பவை; உள்நாட்டு மக்களின் மீது போர் தொடுக்கும் சட்டப்பூர்வ உரிமையை இராணுவத்திற்கு அளிப்பவை. போர்க் காலக் குற்றங்களுக்காக எதிரி நாட்டு இராணுவ வீரனைத் தண்டிக்க முடியாது என்பது போலவே, இந்தச் சட்டங்களும் இந்திய இராணுவத்திற்கு முழு பாதுகாப்பு அளிப்பவை. இப்படிப்பட்ட பாதுகாப்பை நாடு முழுவதுமுள்ள போலீசுக்கு வழங்குவதற்குதான் ''பொடோ'' சட்டம் கொண்டு வரப்படுகிறது; பொது மன்னிப்பு குறித்தும் பேசப்படுகிறது.

''தேச ஒற்றுமையைப் பாதுகாக்க பயங்கரவாதத்தை ஒழிக்க வேண்டும்; பயங்கரவாதத்தை ஒழிக்க வேண்டும் என்றால், இந்திய மக்களின் குடியுரிமைகளை ஒழிக்க வேண்டும்'' என்கிறது ஆளுங் கும்பல். இதைக் கொஞ்சம் பச்சையாகச் சொன்னால், தேச ஒற்றுமைக்காக உள்நாட்டு மக்களைக் கொலை செய்யவும், கற்பழிக்கவும் போலீசுக்கும் இராணுவத்துக்கும் முழுச் சுதந்திரம் வேண்டும் என்பதுதான். இததான் நாம் பாசிசம் என்கிறோம்; ஆளுங்கும்பலோ ''தேச நலன்'' என்று பூசி மெழுகி மக்களை ஏய்த்து வருகிறது.

• செல்வம்

**இந்த இதழோடு புதிய ஜனநாயகம் 16-வது ஆண்டை நிறைவு செய்கிறது. மறுகாலனியாதிக்கம், இந்து மதவெறி பாசிசத்திற்கு எதிராக பு.ஜ. நடத்திவரும் போராட்டத்திற்கு உறுதியான ஆதரவு அளித்து வரும் வாசகர்கள், முகவர்கள், தோழர்களுக்கு நன்றி கூறிக் கொள்வதோடு, உழைக்கும் மக்கள் அனைவருக்கும் எமது 85-வது நவம்பர் புரட்சி தின வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.**

**—ஆசிரியர் குழு**

www.padippakam.com

# போதை மருந்து ஒழிப்பா? மேலாதிக்கத் தலையீடா?

தென் அமெரிக்கக் கண்டத்தின் உச்சியில் மேற்கே பசிபிக் கடலை ஒட்டியுள்ள சிறிய நாடுதான் கொலம்பியா. அந்நாட்டின் முக்கிய விளைபொருள் கோகோ. அண்டேயன் மலையை ஒட்டி அமேசான் நதி உற்பத்தியாகும் பிராந்தியங்களில் விவசாயிகளின் பாரம்பரியத் தொழில் கோகோ பயிரிடுவதாகும். கோகோவிலிருந்து சுவையான பானம் தயாரிக்கலாம். ''கோகைன்'' முதலான போதைப் பொருட்களையும் தயாரிக்கலாம்.

கொலம்பியாவின் மெடலின் நகரில் போதை மருந்து மாஃபியாக்களின் ராஜ்ஜியம் கொடி கட்டிப் பறக்கிறது. அங்கிருந்து அமெரிக்காவுக்கு போதை மருந்து கடத்தப்படுகிறது. அமெரிக்கர்களில் ஏறத்தாழ 20% பேர் போதை மருந்து அடிமைகள். போதை மருந்து மாஃபியாக்களால் குற்றங்களும் வன்முறையும் பயங்கரவாதச் செயல்களும் பெருகுவதால், போதை மருந்து ஒழிப்பு என்ற பெயரில் அமெரிக்க மேலாதிக்க வல்லரசு கொலம்பியாவை நவீன முறையில் ஆக்கிரமித்து வருகிறது.

கொகைன் போதை மருந்துக்கு மூலப் பொருள் கோகோ. எனவே, கோகோ பயிரிடுவதை ஒழித்துவிட்டால் போதை மருந்தையும் ஒழித்து விடலாம் என்று ஒரு புதிய திட்டத்தை அமெரிக்கா கிளிண்டன் ஆட்சிக் காலத்தில் தயாரித்து, இதற்கென 1600 கோடி டாலரையும் ஒதுக்கீடு செய்தது. இத்திட்டத்தைச் செயல்படுத்தக் கிளம்பியுள்ள அமெரிக்க அதிபர் புஷ், கடந்த ஆகஸ்டு மாதத்தில் கொலம்பியாவில் அமெரிக்க இராணுவ ஆலோசகர்கள், தொழில் நுட்பவாதிகள், இராணுவ ஹெலிகாப்டர்கள், எந்திரத் துப்பாக்கிகள் மற்றும் சாதனங்களைக் கொலம்பியாவில் கொண்டு போய் குவித்துள்ளார்.

அமெரிக்க இராணுவ உதவியோடு, அமெரிக்க இராணுவத்தின் தென் பிராந்தியத் தலைமையின் வழிகாட்டுதலின்படி கொலம்பியாவில் ''ஐக்கிய சுய பாதுகாப்புப் படை'' எனும் அதிரடிப்படை கட்டியமைக்கப்பட்டுள்ளது. இப்படை மூலம் கோகோ பயிரிடப்படும் பகுதிகளில் ஹெலிகாப்டர் மூலம் நச்சு மருந்து தெளிக்கப்பட்டு கோகோ பயிர் அழிக்கப்படுகிறது. இதை கோகோ விவசாயிகளும், விவசாயிகளிடம் செல்வாக்குப் பெற்றுள்ள அரசு எதிர்ப்பு கொரில்லாக் குழுக்களும் கடுமையாக எதிர்த்து நிற்கின்றன. குறிப்பாக, கொலம்பிய புரட்சிகர ஆயுதப்படை (FARC), தேசிய விடுதலைப்படை (ELN) மற்றும் மார்க்சிய - லெனினிய புரட்சிகரக் குழுக்களும் கொரில்லா முறையில் ஆயுதமேந்திப் போராடுகின்றன.

போதை மருந்து பெருக்கத்துக்கும் கடத்தலுக்கும் இரகசியமாக கோகைன் தயாரிக்கும் ஆலைகளும் நிதியாதிக்கக் கும்பல்களும் போதை மருந்து மாஃபியாக்களுமே முக்கிய காரணம். இக்கும்பல்களை ஒழிப்பதை விடுத்து கோகோ பயிர்களை அழித்து விவசாயிகளையும் அரசு எதிர்ப்பு கொரில்லா குழுக்களையும் ஒடுக்குவதில் தான் அமெரிக்க வல்லரசு தீவிரம் காட்டுகிறது. இதில் வேடிக்கை என்னவென்றால், அமெரிக்க உதவியுடன் கட்டியமைக்கப்பட்ட கொலம்பிய அதிரடிப் படையே கோகைன் கடத்தலில் ஈடுபட்டு கொட்டமடிக்கிறது.

உண்மையில் போதை மருந்து கடத்தலையும் பெருக்கத்தையும் ஒழிப்பது அதன் நோக்கமல்ல. ஏனெனில், அமெரிக்க இரகசிய உலகத்தின் முக்கிய தொழிலே போதை மருந்து வியாபாரம்தான். இந்த இரகசிய உலக மாஃபியாக்களின் துணையின்றி அமெரிக்காவின் ஏகபோக நிதியாதிக்கக் கும்பல்கள் ஒரு நிமிடம் கூட நீடிக்க முடியாது என்பது யாவரும் அறிந்த உண்மை. எனினும், போதை மருந்து கடத்தலையும் பெருக்கத்தையும் காரணம் காட்டி, கொலம்பியாவில் ஆளும் வர்க்கங்களுக்குத் தீராத தலைவலியாக உள்ள அரசு எதிர்ப்பு கொரில்லாக்களையும் கம்யூனிசப் புரட்சியாளர்களையும் அழித்தொழிப்பது, கொலம்பியாவில் தனது ஆதிக்கத்தை நிலைநாட்டுவதன் மூலம் ஈக்வடார், பிரேசில், வெனிசூலா ஆகிய நாடுகளையும் தென்னமெரிக்க கண்டத்தையும் அச்சுறுத்திப் பணியவைப்பது, பசிபிக் கடற்கரைப் பிராந்தியத்தைக் கைப்பற்றுவது, இந்நாடுகளின் நாணய முறையை ஒழித்து டாலரை மட்டுமே ஒரே நாணய முறையாக்குவது, அமெரிக்காவின் சுதந்திர வர்த்தக வளையத்தின் (FTAA) கீழ் இந்நாடுகளைக் கொண்டு வந்து,மறுகாலனியாக்குவது என்ற திட்டத்துடன்தான் கொலம்பியாவில் அமெரிக்கா நேரடியாக அரசியல் இராணுவத் தலையீடு செய்து ஆட்டம் போடுகிறது.

9-ஆம் பக்கத் தொடர்ச்சி

பஞ்சாயத்துத் தலைவரான தி.மு.க.வின் வடிவேலு, பா.ம.க.வின் தசரதன், சிதம்பரம், அ.தி.மு.க.வின் ராசமாணிக்கம், தமிழரசன், வழக்குரைஞர் சக்திவேல், நடூர் மனோகரன் என அனைத்து ஓட்டுக்கட்சிகளிலுமுள்ள வன்னிய சாதிவெறியர்களே இந்த வெறியாட்டத்துக்குத் தலைமையேற்று முன்னின்று நடத்தினர்.

இத்தனைக்கும் பிறகும் மாவட்ட ஆட்சியர் இந்தப் பகுதிக்கு வரவில்லை. இச்சாதிவெறியாட்டத்தை எந்தவொரு ஓட்டுக்கட்சியும் எதிர்க்கவில்லை. பாதிக்கப்பட்ட தாழ்த்தப்பட்டோருக்கு ஆறுதல் சொல்லக்கூட முன்வரவில்லை. இக்கொடுமையைக் கண்டித்து தேர்தல் நேரத்தில் ஏதாவது செய்தால், தமது வேட்பாளர்களுக்கு உரிய அளவு வாக்குகள் கிடைக்காமல் வாக்குகள் சிதறிவிடும் என்ற பிழைப்புவாத கண்ணோட்டத்தில் ''தலித்'' அமைப்புகள் அமைதி காத்தன.

அதிகாரிகள், போலீசு, ஓட்டுக்கட்சிகள், ''தலித்'' அமைப்புகள் என அனைத்துத் தரப்பிலும் நம்பிக்கையிழந்து, விரக்தியடைந்த நிலையில் தாழ்த்தப்பட்ட மக்கள் உயிருக்கு அஞ்சி ஊரைவிட்டே வெளியேறி, அகதிகளாக அல்லற்படுகின்றனர்.

எல்லாம் முடிந்த பிறகு, கோயிலில் படுத்துறங்கிய அப்பாவி வன்னியர்கள் சிலரைக் கைது செய்தும், திரும்பிய பக்கமெல்லாம் போலீசை நிறுத்தியும் கலவரத்தைத் தடுத்து அமைதியை நிலைநாட்டிவிட்டதாகப் பசப்புகிறது போலீசு. ஆனால், சாதிவெறியர்களோ சர்வகட்சி ஆதரவோடும் அரசு எந்திரத்தின் பாதுகாப்போடும் சுதந்திரமாக உலா வந்து கொண்டிருக்கின்றனர்.

— வி.வி.மு., தருமபுரி.

## பிழை திருத்தம்

கடந்த 1-15 அக்டோபர் இதழில் வெளியான ''சவடாலுக்கு மூல உத்தி; சந்தர்ப்பவாதமே தந்திர உத்தி; தமிழ்த் தேசத்தின் சதிராட்டம்'' என்ற தொடர்கட்டுரையில், பக்கம் 21 இரண்டாவது பத்தியில், ''இவ்வாறு ஈழ விடுதலைக்குப் பணியாற்றுவ தாக...'' என்று தொடங்கும் பாராவில் சில வரிகள் விடுபட்டுள்ளன. அதைப் பின்வருமாறு திருத்தி வாசிக்கக் கோருகிறோம்.

''இவ்வாறு ஈழ விடுதலைக்குப் பணியாற்றுவதாகக் கருதிக் கொண்டு புலிகளின் ஆதரவாளர்கள் முன் வைக்கும் துரோகத்தனமான பல வாதங்களையும் பு.ஜ. குறிப்பிட்டிருந்தது. ''பு.ஜ.'' குறிப்பிட்டிருந்த அந்த வாதங்களுக்கும் கூட, ''ஆம்'' விகுதி சேர்த்து எல்லாம் பு.ஜ.வின் அவதூறுகள் என்றும், ஒன்று அவர்களது நிலைப்பாடுகள் பு.ஜ.வுக்குத் தெரியாமலிருக்க வேண்டும் அல்லது தெரிந்தே மறைக்க வேண்டும் என்கிறார் தியாகு. புலி ஆதரவாளர்களின் நிலைப்பாடுகள் எமக்குத் தெரியாமலும் இல்லை, மறைக்கவும் இல்லை; அவதூறுகளும் இல்லை. எல்லாம் ஆதாரபூர்வமான உண்மைகள்தாம்.''

எமது கவனக்குறைவினால் நேர்ந்துவிட்ட இத்தவறுக்கு மிகவும் வருந்துகிறோம்.

— ஆசிரியர் குழு.


படிப்பகம்

www.padippakam.com

# "சிமி" தடை: இந்துவெறியர்களின் சட்டபூர்வ வேட்டை

இந்திய இசுலாமிய மாணவர் இயக்கம் - "சிமி"யை செப்டம்பர் இறுதியில் மைய அரசு தடை செய்திருக்கிறது. "சிமி"யின் தலைவர் சாகித் பதர் ஃபலாஹி உட்பட நூற்றுக்கணக்கானவர்கள் நாடு முழுவதும் கைது செய்யப்பட்டுள்ளனர். தில்லி, உ.பி., ம.பி., ஆந்திரா, குஜராத், கேரளா, தமிழ்நாடு உட்பட பல மாநிலங்களிலும் "சிமி" அலுவலகங்கள் மூடி, "சீல்" வைக்கப்பட்டு விட்டன. "சிமி" தடையை எதிர்த்துப் போராடிய இசுலாமிய இளைஞர்கள் மீது உ.பி. - லக்னோவில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் நான்கு பேர் கொல்லப்பட்டனர்; பலர் படுகாயமுற்றனர்.

"அமெரிக்காவில் நடந்த பயங்கரவாதத் தாக்குதல்களை வரவேற்று, தலிபான் - ஒசாமா பின்லேடன் புகழ்பாடும் சுவரொட்டிகள், பிரசுரங்களை சிமி வெளியிட்டது. ஒசாமா பின்லேடனை அதிஉயர்ந்த புனிதப் போர் போராளி என்று போற்றியது. ஆப்கான் மீதான அமெரிக்காவின் தாக்குதல் இசுலாத்தின் மீதான தாக்குதலாகக் கருதி புனிதப் போருக்குத் தயாராகும்படி அனைத்து முசுலீம்களுக்கும் அழைப்பு விடுத்தது" என்று "சிமி" மீது உள்துறை அமைச்சகம் குற்றஞ்சாட்டுகிறது.

இது எப்படி "இந்திய தேச" விரோத நடவடிக்கையாகும் என்கிற கேள்விக்கு பதில் கூறுவதற்காக மேலும் ஆறு குற்றச்சாட்டுகளை "சிமி" மீது மைய அரசு தொடுத்துள்ளது. "பஞ்சாப், காசுமீர் மற்றும் பிற மாநிலத் தீவிரவாதக் குழுக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கிறது. இந்திய ஒன்றியத்தில் இருந்து ஒரு பகுதியைப் பிரிக்கும் கோரிக்கைக்காகப் போராடும் குழுக்களை ஆதரிக்கிறது. அதன்மூலம் இந்தியாவின் பிரதேச ஒருமைப்பாட்டைக் கேள்விக்குள்ளாக்குகிறது. அதன் மாநாடுகளில் தேச விரோத தீவிரவாத நிலையெடுத்து, அனைத்து நாட்டு இசுலாமிய அடிப்படைவாதத்தைப் போற்றிப் பேசியதோடு, பிற மதக்கடவுள்கள் மீது வசைபாடி முசுலீம்களைப் புனிதப் போருக்கு எழுச்சியுறுமாறு கோரினர். வகுப்புவாத உணர்வுகளைத் தூண்டி, இந்தியப் பிரதேச ஒருமைப்பாட்டுக்கு ஊறு விளைவிக்கும் சுவரொட்டிகளையும் பிரசுரங்களையும் பிரசுரித்தது. நாட்டின் பல பகுதிகளிலும் கலவரத்தைத் தூண்டும் நாசி வேலைகளைத் தூண்டிவிட்டது." - இவை "சிமி"யைத் தடை செய்வதற்குக் கூறப்படும் காரணங்கள்.

அரசினாலேயே முன் வைக்கப்படும் மேற்கண்ட குற்றச்சாட்டுகள் எவையும் "சிமி" அமைப்பு நேரடியாக இந்திய ஒருமைப்பாட்டை சீர்குலைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடும் தீவிரவாத, பிரிவினைவாத, பயங்கரவாத அமைப்பு என்பதை நிரூபிப்பதாக இல்லை.

மற்றபடி மத அடிப்படைவாதம், வகுப்புவாத உணர்வுகளைத் தூண்டுவது, பிற மதக் கடவுள்களை ஏசுவது போன்றவை "சிமி" அமைப்பைத் தடைசெய்வதற்குத் தகுந்தவை என்றால், ஆர்.எஸ்.எஸ்., பஜ்ரங் தள், இந்து முன்னணி போன்ற இந்துமத வெறி அமைப்புகள்தாம் முதலாவதாகத் தடை செய்யப்பட்டிருக்க வேண்டும்.

மேலும், "சிமி"யின் நடவடிக்கைகள் "இந்திய சமூகத்தில் அமைதி, ஒருமைப்பாடு, மதச்சார்பின்மையைப் பேணுவது ஆகியவற்றுக்கு ஆபத்து விளைவிப்பதாகவும், அது ஒரு சட்டவிரோத அமைப்பாகவும்" இருப்பதாகத் தடை செய்யும் அரசுக் குறிப்பு அறிவிக்கிறது. "சிமி"யை விடவும் இந்துமதவெறி அமைப்புகளுக்குத்தான் இந்தக் குற்றச்சாட்டுகள் மிகவும் பொருத்தமாக இருக்கிறது.

இதைவிட முக்கியமாக, இரத யாத்திரைகள் என்கிற பெயரில் நாடு முழுவதும் மதவெறிப் படுகொலைகள் புரிந்ததோடு, பாபரி மசூதி இடிப்பு, அதைத் தொடர்ந்து மீண்டும் மதவெறிப் படுகொலைகள் புரிந்து மத்தியில் ஆட்சிக்கு வந்தபிறகு, குஜராத், ம.பி., உ.பி. பீகாரில் கிறித்தவ பாதிரியார்கள் - பெண் துறவிகளைத் தாக்கியும் ஒரிசாவில் கிறித்தவப் பாதிரியாரையும் அவரது இரு புதல்வர்களை உயிரோடு கொளுத்தியும் வெறியாட்டம் போடும் இந்து மதவெறிப் பயங்கரவாத அமைப்புகள் தடைசெய்யப்படவில்லை. அதற்கு மாறாக, அமெரிக்கா, தலிபான் - ஒசாமா பின்லேடன் மோதலைச் சாக்கு வைத்து "சிமி" தடை செய்யப்பட்டுள்ளது.

வரவிருக்கும் உத்திரப் பிரதேச சட்டப் பேரவைத் தேர்தல்களைக் குறிவைத்து, மக்களை மத ரீதியாகப் பிளவுபடுத்தி, இந்து ஓட்டு வங்கியை உறுதிப்படுத்திக் கொள்ளவும், இசுலாமிய மக்களிடையே பயபீதியை விதைக்கவும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைதான் இந்தத் தடை நடவடிக்கை என்று பா.ஜ.க.வை, எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒரே குரலில் குற்றஞ்சாட்டுகின்றன. இது உண்மையல்ல என்று நிராகரித்துவிட முடியாது.

"சிமி" தடை செய்யப்பட்டதைக் கண்டித்து உ.பி., லக்னோ நகரில் நடந்த ஆர்ப்பாட்டத்தின் பொழுது சுட்டுக் கொல்லப்பட்ட முசுலீம் இளைஞர்கள்.




உ.பி. தேர்தல்களுக்கு சில மாதங்களே இருக்கும் இந்தச் சமயத்தில் இசுலாமியர்களிடையே மதவெறி ஆத்திரத்தைத் தூண்டும் வேறு சில நடவடிக்கைகளிலும் ஆர்.எஸ்.எஸ்., பா.ஜ.க. கும்பல் இறங்கியிருக்கிறது. தடையை மீறி விசுவ இந்து பரிசத் தலைவர்கள் அயோத்தியில் இடிக்கப்பட்ட பாபரி மசூதி வளாகத்துக்குள் புகுந்து அங்கு சட்ட விரோதமாக நிறுவப்பட்டுள்ள இராமன் கோவிலில் பூசைகள் நடத்தியுள்ளனர். ஆக்ராவில் பா.ஜ.க.வின் இளைஞர் அணி மாநாட்டுக்குப் போன இந்து மதவெறிக் கும்பல் தாஜ்மகாலுக்குள் நுழைந்து நாசவேலைகள் புரிந்துள்ளனர்.

"சிமி" ஒரு இசுலாமிய மத அடிப்படைவாத, கடும் பிற்போக்கு அமைப்பு; அனைத்து நாட்டு இசுலாமியக் கூட்டு, இசுலாமியப் புரட்சி, இசுலாமிய மதப் புனிதப்போர் ஆகியவை அதன் இலட்சியம்; ஆர்.எஸ்.எஸ். அமைப்பைப் போலவே சிறுவர், பெண்கள், மாணவர்களை இசுலா


படிப்பகம்

www.padippakam.com

மிய மதவெறியூட்டிப் பயிற்றுவிக்கிறது என்பது உண்மைதான். ஆனால், ''சிமி'' மதவெறிக் கலவரங்களிலும், நாச வேலைகளிலும் ஈடுபட்டதாக நிரூபிக்கப்படவில்லை. காசுமீரில் இயங்கும் ஹிஸ்புல் முஜாகிதீன் அமைப்புடன் சேர்ந்து பல இடங்களில் குண்டு வைப்பு படுகொலை கள் புரிந்ததாக மைய அரசு புகார் கூறினாலும், அதற்கான ஆதாரங்கள் கிடையாது.



அதே சமயம் எதிர்கட்சிகள் கூறுவதைப் போல தேர்தல் அரசியல் ஆதாயம் கருதி மட்டும் ''சிமி'' தடை செய்யப்படவில்லை. உலகம் முழுவதும் இசுலாமிய எதிர்ப்பும் - வெறுப்பும் வேகமாகப் பரப்பப்படுகிறது. அமெரிக்காவின் மீதான பயங்கரவாதத் தாக்குதலைக் கண்டித்த இத்தாலி போன்ற மேலைநாடுகள் அதிகாரபூர்வமாகவே இசுலாமிய எதிர்ப்பு வெறியைத் தூண்டுகின்றனர். கிறித்துவ மதவாத அடிப்படையிலான ''மதப் புனிதப்போர்'', ''முடிவில்லா - முற்றுமுழுதான நீதி'' போன்றவை அமெரிக்க அரசால் கிளப்பப்படுகின்றன. இந்த இசுலாமிய எதிர்ப்பு - வெறுப்புச் சூழலைப் பயன்படுத்திக் கொண்டு, இந்து மதவெறியைத் தூண்டிவிட்டு, ஆதாயம் தேடும் நோக்கத்தோடு ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. அரசு செயல்படுகிறது.

இது ''சிமி''யை மட்டுமல்ல; அதோடு தொடர்புடையவை என்று முத்திரை குத்தி, வேறு எந்த இசுலாமிய அமைப்பும் தாக்கப்படுவதற்கு முன் தயாரிப்புதான்.

இதையே மேலும் விரிவுபடுத்தி, தேசவிரோத, பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக எந்தவொரு அமைப்பையும் தடை செய்வதற்கான தயாரிப்பில் அரசு ஈடுபட்டு வருவதையே இது காட்டுகிறது. இதற்காகத்தான் ''பொடா'' சட்டம் அவசர அவசரமாக நிறைவேற்றப்பட்டுள்ளது. பாகிஸ்தான் எதிர்ப்பு, தீவிரவாத பயங்கரவாத எதிர்ப்பு, பிரிவினைவாத எதிர்ப்பு, தேசவிரோத எதிர்ப்பு என்று முத்திரை குத்தப்பட்ட எந்தவொரு விவகாரத்திலும் வாய்திறக்க முடியாமல் ஓட்டுக் கட்சிகள் முடங்கிப் போன நிலையில், நேரடியான மக்கள் எழுச்சிதான் இத்தகைய அறிவிக்கப்படாத பாசிசத் தாக்குதல்களை முறியடிக்க முடியும்.

• மாதவன்

# ஈயத்தைப் பார்த்து இளிக்கும் பித்தளைகள்

சட்டமன்ற, நாடாளுமன்றத் தேர்தல்களில் மட்டுமல்லாது உள்ளாட்சித் தேர்தலில் கூடக் கூட்டணி மாற்றிப் போட்டியிடும் நிலைக்கு ஓட்டுக் கட்சிகள் அம்பலப்பட்டு விட்டன. முற்போக்கு வேடம் கட்டும் இடது, வலது போலி கம்யூனிஸ்டுகளோ இன்னும் ஒருபடி மேலே போய் ஊர் ஊருக்கு ஒரு 'கொள்கைக் கூட்டணி'யை அமைத்துத் தேர்தலைச் சந்தித்துள்ளனர்.

மானாமதுரை பேரூராட்சி தலைவர் பதவிக்கான போட்டியில் சி.பி.ஐ.யும், சி.பி.எம்.மும் தனித்தனியாக வேட்பாளரை நிறுத்தியுள்ளன. ஓட்டுச் சேகரிக்கும் பிரச்சாரத்தின் ஒரு வடிவமாக 'வாக்காளர் விழிப்புணர்வு பேரவை மற்றும் அனைத்து மகளிர் குழுக்கள்' என்ற பெயரில் ஒளிந்து கொண்டு, சி.பி.எம். ஒரு துண்டுப் பிரசுரத்தை விநியோகித்துள்ளது.

அதில் ''வாக்களிக்கும் முன்பு ஒரு நிமிடம் சிந்தியுங்கள்'' என்று தொடங்கி, சி.பி.ஐ., தி.மு.க., ம.தி.மு.க., வேட்பாளர்களையும் முன்னாள் பேரூராட்சி தலைவரையும் அம்பலப்படுத்தியும், சி.பி.எம். வேட்பாளர் ஜே. இராமச்சந்திரனின் நேர்மை, துணிவையும் பட்டியலிட்டுள்ளனர்.

''சி.பி.ஐ. ஒன்றியச் செயலாளரான முத்தையா பேருந்து நிலையமருகே சிறிய சைக்கிள் கடை வைத்திருந்தவர்; கடந்த பத்து ஆண்டுகளில் நகரின் முன்னணிப் பணக்காரர்களின் பட்டியலில் இடம் பெற்றது எப்படி?'' என்று கேட்டு, அந்த இரகசியத்தையும் போட்டு உடைத்துள்ளனர்.

மாதச் சீட்டு நடத்துவது, ரேசன் கடை இயக்குனராக இருந்து ஊழல் செய்தது, 'ரியல் எஸ்டேட்' தொழில் நடத்துவது, ஆற்று மணல் கொள்ளையில் ஈடுபடுவது என நீள்கிறது அந்தப் பட்டியல். ஆரம்ப காலத்தில் மணல் கொள்ளையை எதிர்த்து முத்தையா நடத்திய ''கோவணப் போராட்டத்தையும்'' சுட்டிக் காட்டி கேலி செய்துள்ளது, இப்பிரசுரம்.

மாறாக, தவறு செய்பவர்களைத் தட்டிக் கேட்கும் ஒரே கட்சி, இலஞ்சம் ஊழலுக்கு இடமில்லாத ஒரே கட்சி என்று சுயதம்பட்டமும் அடித்து கொண்டுள்ளது சி.பி.எம். அதே சமயம், தலைவர் பதவிக்காகப் போட்டியிடும் இன்னொரு வேட்பாளரான மக்கள் தமிழ் தேசம் என்ற சாதிக் கட்சியைச் சேர்ந்த வேட்பாளர் வி. சுப்பிரமணியம் என்பவரை மட்டும் அம்பலப்படுத்தவில்லை. ஏனெனில் வி. சுப்பிரமணியம் காங்கிரசு கூட்டணியின் வேட்பாளர். சாதி வெறியரான அவரை அம்பலப்படுத்த சி.பி.எம்.மின் பாரம்பரியமான காங்கிரசு அடிமைப் புத்தி தடுத்துள்ளது. இதனால்தான் இப்பிரசுரத்தைக் கூட நேரடியாகக் கட்சியின் பெயரில் வெளியிட திராணியற்று தன்னார்வ மகளிர் குழுக்களின் பெயரில் வெளியிட்டுள்ளது. இதுதான் 'மார்க்சிஸ்டு' கட்சி மார்தட்டிக் கொள்ளும் நேர்மை, துணிவு!

கடந்த சட்டமன்ற தேர்தலிலும், இந்த உள்ளாட்சித் தேர்தலிலும் 'புரட்சித் தலைவி' ஜெயலலிதாவுடன் கூட்டணி வைத்துக் கொள்வதிலும், விசுவாசமாக இருப்பதிலும் சி.பி.ஐ.க்கும் சி.பி.எம்.க்கும் இடையே ஏற்பட்ட பங்காளிச் சண்டை உலகறிந்ததே! அதன் தொடர்ச்சியாக, ஓட்டுப் பொறுக்குவதிலும் பங்காளி சண்டையில் இறங்கியுள்ளன இக்கட்சிகள். இவர்களுக்கு கம்யூனிசத்தைப் பற்றி பேசவோ, கம்யூனிசக் கொடியையோ பெயரையோ பயன்படுத்தவோ என்ன அருகதை இருக்கிறது?

• சிவா, மானாமதுரை.


படிப்பகம்

www.padippakam.com

# கொத்தடிமைகளாய்க் கருகும் மொட்டுகள்

சிறைச்சாலைகளைப் பற்றியும் அங்கு கைதிகளுக்கு இழைக்கப்படும் கொடுமைகள் பற்றியும் நீங்கள் அறிந்திருப்பீர்கள். சிறைக் கைதிகள் தண்டனைக் காலம் முடிந்த பிறகு விடுதலையாகலாம்; அல்லது 'சுதந்திர தினம்', காந்தி ஜெயந்தி முதலான அரசு விழா நாட்களில் பொது மன்னிப்பு அடிப்படையில் விடுதலை செய்யப்படலாம்.

ஆனால், நீங்கள் வேறு வகையான சிறைச்சாலைகளைப் பற்றி அறிந்திருக்க மாட்டீர்கள். இது திறந்தவெளி சிறைச்சாலை. இங்கு கைதிகளைக் கொட்டடியில் அடைத்து வைப்பதோ, விலங்கு பூட்டுவதோ கிடையாது. இங்கு அடைக்கப்பட்டிருப்பவர்களுக்கு தாங்கள் என்ன குற்றம் செய்தோம் என்று தெரியாது. எப்போது விடுதலையாவோம் என்பது தெரியாது. கணவன் - மனைவி, குழந்தைகள் எனக் குடும்பத்தோடு இவர்கள் இச்சிறைச்சாலைகளில் அல்லற்படுகிறார்கள். இவர்கள் கடனுக்கு தம்மையும் தம் குடும்பத்தையும் அடகு வைத்துள்ள கொத்தடிமைகள்!

தலைநகர் சென்னையை அடுத்துள்ள செங்குன்றத்தில் உள்ள 150க்கும் மேற்பட்ட அரிசி ஆலைகளில் நீங்கள் இவர்களைப் பார்க்கலாம். அரிசி ஆலையின் கரிய - நீண்ட மதிற்சுவரைத் தாண்டி இவர்கள் வெளியே வர முடியாது. அரிசி ஆலையிலேயே ஒதுக்குப்புறமாக எட்டு அடிக்கு பத்து அடி கொண்ட புகை படிந்த கூரைக் கொட்டகைதான் இவர்களது வீடு. அதிகாலை தொடங்கி நள்ளிரவு வரை ஓய்வில்லாத வேலை. அதிலும் கோடை காலத்தில் வேலை கடுமையாக இருக்கும். குழந்தைகள் உள்ளிட்டு குடும்பமே வியர்வை வழியப் பாடுபட வேண்டும். மேஸ்திரியின் ஏச்சையும் பேச்சையும் சகித்துக் கொள்ள வேண்டும். நெல்லைக் கிளறிவிடும் வேலையைச் செய்யும்போது, ஒரு நாளைக்கு 20,30 கி.மீ. அளவுக்கு அவர்கள் கொளுத்தும் வெய்யிலில் வெற்றுக் கால்களுடன் களத்தில் சுற்றி வர வேண்டியிருக்கும். 40 டிகிரிக்கு மேல் கொளுத்தும் வெய்யிலில் களத்தில் காய வைத்த நெல்லைக் கிளறி விடும் வேலை செய்யும்போது சிறுவர்களின் பிஞ்சுக் கால்கள் கொப்புளித்து இரணமாகி விடும். வியர்வையோடு கண்ணீரும் பெருகி உதட்டை நனைத்து உப்பு கரிக்கும்.

கிராமத்தில் பிழைக்க முடியாமல், கடன் சுமை தாளாமல் குடும்பத்தோடு அரிசி ஆலைகளில் கொத்தடிமைகளாக உழல்வோர் எவ்வளவு பேர் என்று முழுமையாகத் தெரியாது. சில தன்னார்வக் குழுக்கள், ஆயிரத்துக்கும் மேலான குடும்பங்கள் செங்குன்றம் அரிசி ஆலைகளில் கொத்தடிமைகளாக உள்ளதாகக் கூறுகின்றன.

அரிசி ஆலை முதலாளியிடம் ரூ. 2000 முதல் ரூ. 10000 வரை கடனாகப் பெற்றுக் கொண்டு இவர்கள் குடும்பத்தோடு கொத்தடிமைகளாகச் சிக்கித் தவிக்கின்றனர். வாங்கிய கடன் எப்போது முடியும் என்றோ, எப்போது இவர்கள் விடுதலையாவார்கள் என்றோ யாருக்கும் தெரியாது. கேட்டால் இன்னும் அசலே முடியவில்லை என்பார் முதலாளி. இன்னும் சில ஆண்டுகள் கழித்துக் கேட்டால் வட்டி இன்னும் முடியவில்லை என்பார். இடையே அவசர செலவு, நோய் நொடி என்று கடன் வாங்கினால், அதற்காக இன்னும் பல ஆண்டுகள் கெரத்தடிமையாக வேலை செய்ய வேண்டும். ''ரூ 10,000 கடன் வாங்கினேன், பத்து வருசமா கொத்தடிமையாக இருக்கேன். முதலாளியைக் கேட்டா இன்னும் வட்டி முடியலை; இன்னும் ரெண்டு வருசம் இருக்கணும்னு சொல்றாரு'' என்று தனது துயரத்தை வேதனையுடன் கூறுகிறார் பழனி என்ற தொழிலாளி. இங்கு அவர் குடும்பத்தோடு கொத்தடிமையாக உள்ளார்.

பழனியின் மூத்த மகன் பெயர் மணி, வயது 12. அவன் விபரம் தெரிந்த நாளிலிருந்து இங்கு கொத்தடிமையாகவே உள்ளான். அவனுக்கு வெளியுலகம் தெரியாது. பேனா - பென்சிலை எப்படி பிடித்து எழுதவேண்டும் என்றும் தெரியாது. அவன் எழுத்தறிவற்ற கொத்தடிமை. அவனைப் போல 200-க்கும் மேற்பட்ட சிறுவர்களும் சிறுமிகளும் அரிசி ஆலைகளில் குழந்தைப் பருவத்திலிருந்தே கொத்தடிமைகளாக உள்ளனர். அவர்களுக்கு பந்து, கோலி, பம்பரம், கிரிக்கெட் என்று எந்த விளையாட்டும் தெரியாது. அதற்கு நேரமோ ஓய்வோ கிடையாது.

''நீ படித்து முடித்து பெரியவனாகி எந்த வேலைக்குச் செல்வாய்?'' என்று அரிசி ஆலையிலே கொத்தடிமையாகித் தவிக்கும் சிறுவன் மணியிடம் கேட்டால், அவனால் பதில் எதுவும் கூற முடியவில்லை. நெஞ்சிலே ஆசை இருக்கிறது. ஆனால் அது நிறைவேறாது என்பதால் துக்கம் தொண்டையை அடைக்கக் கண்கள் குளமாகி அவன் தலையைக் குனிந்து கொள்கிறான்.

***

பட்டுச் சேலை என்றதுமே உங்களுக்கு காஞ்சிபுரம் நினைவுக்கு வரும். கண்ணைக் கவரும் அழகுமிகு காஞ்சிபுரம் பட்டுச் சேலைக்குப் பின்னே கொத்தடிமைகளின் துயரம் இருளாகக் கவிந்திருப்பது உங்களுக்குத் தெரிந்திருக்காது. வழுவழுப்பான பட்டுச் சேலைகளின் இழைகளில் பிஞ்சுக் குழந்தைகளின் வியர்வையும் இரத்தமும் கலந்திருப்பது உங்களுக்குத் தெரிந்திருக்காது.

காஞ்சிபுரம் நகரின் பிள்ளையார் பாளையம், ஒரிகை, குருவிமலை, டோல்கேட், அண்ணா குடியிருப்பு முதலான பகுதிகளில் காலை 7 மணியளவில் ஒட்டிய கன்னங்களும் மெலிந்த உடலும் கிழிந்த சட்டையுமாக கொத்து கொத்தாக, இளஞ்சிறுவர்கள் செல்கிறார்களே, இவர்கள் பட்டுத்தறி முதலாளியிடம்


**கொத்தடிமைக் கொடூரம்: தறி முதலாளியால் சித்திரவதை செய்து கொல்லப்பட்ட சிறுவன் தமிழரசன்.**





படிப்பகம்

அடகு வைக்கப்பட்ட கொத்தடிமைகள். இக்கொத்தடிமைகளில் ஆண்-பெண் வேறுபாடு கிடையாது. வயது வித்தியாசமும் கிடையாது. 6 வயது குழந்தைகள் முதல் 15 வயது சிறுவர்கள் வரை ஏறத்தாழ 40,000-க்கும் மேற்பட்டவர்கள் காஞ்சிபுரம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பட்டுத் தறிக் கூடங்களில் கொத்தடிமைகளாகப் பரிதவிக்கின்றனர்.



பளபளக்கும் பட்டுச் சேலைக்கு பின்னே கவிந்துள்ள இருள்: தறிக்கூடத்தில் கசக்கிப் பிழியப்படும் அடகுக் குழந்தைகள்.

பாசிச ராஜீவ் கொண்டு வந்த புதிய பொருளாதாரக் கொள்கை கைத்தறி நெசவாளர்களின் வாழ்வைப் பறித்தது. பாசிச பா.ஜ.க.வின் தாராளமயமும் உலகமயமும் அவர்களை மரணக் குழியில் தள்ளியது. வாழ வழியின்றிக் கடன் சுமையால் தத்தளிக்கும் நெசவாளர்கள், தமது அன்புக் குழந்தைகளைக் கூட அடகு வைக்கும் அவல நிலைக்கு தள்ளப்பட்டார்கள்.

ரூ.2000 முதல் ரூ. 5000 வரை பட்டுத் தறி முதலாளியிடம் கடனாக (முன் பணமாக)ப் பெற்றுக் கொண்டு நெசவாளர் குடும்பங்கள் தமது குழந்தைகளை அடகு வைக்கின்றனர். காலை ஏழு மணி முதல் இரவு எட்டுமணி வரை இக்குழந்தைகள் தறிக் கூடங்களில் வேலை செய்ய வேண்டும். விடுமுறை எதுவும் கிடையாது. அமாவாசையன்று மட்டும்தான் தறிகளுக்கு விடுமுறை. இக்குழந்தைகளுக்கு மாதச் சம்பளமாக ரூ. 100 முதல் ரூ. 150 வரை தரப்படும். கடனாகப் பெற்ற தொகையைப் பெற்றோர்கள் திருப்பிச் செலுத்தி, தமது குழந்தைகளை மீட்டுக் கொள்ளலாம். அதுவரை இக்குழந்தைகளுக்குக் கொத்தடிமை வாழ்வுதான்!

தறிக் கூடங்களில் வாட்டு போடுதல், புட்டா போடுதல், பருவட்டம் சுற்றுதல், ராட்டினம் சுற்றுதல் முதலான வேலைகள் குழந்தைகளுக்கு ஒதுக்கப்படுகின்றன. இதிலே வாட்டு போடுதல் என்பது கொடுமையான வேலை. தறிக் கட்டைகளுக்கு இடையில் நூலிழைகளைக் கோர்ப்பது தான் வாட்டுப் போடுதல் என்பதாகும். தறியின் உயரம் குழந்தைகளின் இடுப்பளவுதான் இருக்கும் என்பதால் குனிந்து நின்று வாட்டு போட முடியாது. எனவே, குழந்தைகள் முட்டி போட்டுக் கொண்டே வேலை செய்ய வேண்டும். தொடர்ந்து பல மணிநேரம் வாட்டு போடும் வேலை செய்வதால், குழந்தைகளின் கால் முட்டிகளில் சிராய்ப்பு ஏற்பட்டு இரத்தம் கசிந்து புண்ணாகிவிடும். கால் வலிக்கிறது என்றோ, புண்ணிலிருந்து இரத்தம் கசிகிறது என்றோ வேலையை தாமதப்படுத்தக் கூடாது. தறி நெசவாளியின் வேகத்துக்கு ஏற்ப விரைவாக வாட்டு போட வேண்டும். தாமதப்படுத்தினால் மேஸ்திரி பளாரென அடிப்பான்.

முறுக்கேறிய பட்டு நூலிழைகள் சில நேரங்களில் குழந்தைகளின் பூப்போன்ற கைகளில் பிளேடு கீறியதைப் போல காயமாக்கி விடும். வேலை மும்முரத்தில் அந்தக் காயமும் அதில் கசிந்து உறைந்த ரத்தமும் அந்தக் குழந்தைகளுக்குத் தெரியாது. முகத்தில் வடியும் வியர்வையைத் துடைக்கும்போதோ, கைகளைக் கழுவும்போதோ ஈரம் பட்டதும் காயம்பட்ட இடம் சுரீரென எரிச்சல் தரும். காரமான குழம்பு ஊற்றிய சோற்றிலே கைப்பட்டதும் எரிச்சல் அதிகமாகி கண்களில் நீர் திரளும். வேதனையோடு மெதுவாக சாப்பிட்டால், நேரமாகி விட்டது என்று மேஸ்திரி திட்டுவான்.

பட்டுத்தறிக் கூடங்களில் நிலவும் கொடூர சுரண்டலையும் அடக்குமுறையையும், வார்த்தைகளால் விளக்க இயலாது. சிறுவர்கள் மீது அடி, உதை, சித்திரவதை மட்டுமல்ல; அதன் உச்சகட்டமாக தமிழரசன் என்ற 11 வயது இளஞ்சிறுவன் கடந்த அக்டோபர் 6-ஆம் தேதியன்று தறி முதலாளியால் சித்திரவதை செய்யப்பட்டு கொல்லப்பட்டுள்ளான்.

இராசேந்திரன் என்ற கைத்தறி நெசவாளி குடும்பத்தின் வறுமை காரணமாக, தனது அன்பு மகன், தமிழரசனை சம்பந்தம் என்ற தறிமுதலாளியிடம் கொத்தடிமையாக விட்டிருந்தார். இதற்காக அவர் முன் பணமாக ரூ.3000 பெற்றார். ஒருநாள் தமிழரசன் வேலை நேரத்தில் ''வாக்மேன்'' வைத்து பாட்டுக் கேட்டுக் கொண்டிருந்ததைப் பார்த்த முதலாளி சம்பந்தம், அவனை அடித்து தன்னிடமிருந்த வாக்மேனைத் திருடிவிட்டதாகக் குற்றம் சாட்டி அதைப் பறித்துக் கொண்டார். அது தன் நண்பனுடையது என்று விளக்கியும், நண்பனை அழைத்து வந்து சாட்சியமளித்தபோதிலும் முதலாளி ஏற்காமல் அவனை அடித்துள்ளார். முதலாளி அடிக்கிறார் என்று தமிழரசன் தனது தந்தையிடம் அழுது புலம்பியுள்ளான். இந்த வேதனையை சகிக்க முடியாத இராசேந்திரன், தமிழரசனை வேறொரு முதலாளியிடம் அடகு வைத்து ரூ. 3000 பெற்று, பழைய முதலாளி சம்பந்தத்திடம் செலுத்தியுள்ளார். ஆனாலும் இன்னும் ரூ. 500 தர வேண்டுமென சம்பந்தம் தமிழரசனைப் பிடித்து அடித்துள்ளார். தன்னிடமிருந்த ஒரு கொத்தடிமை போய்விட்டதால் ஏற்பட்ட பாதிப்பு காரணமாக ஆத்திரமடைந்த சம்பந்தம், அக்டோபர் 6-ஆம் தேதியன்று தமிழரசனைக் கடத்திவந்து மிருகத்தனமாகத் தாக்கியுள்ளார். பின்னர் தன்னிடமிருந்து ரூ. 500 திருடிவிட்டதாகப் பொய் குற்றம் சாட்டி போலீசு நிலையத்துக்கு அன்று இரவு இழுத்துச் சென்றுள்ளார். இதையறிந்த சிலர் இராசேந்திரனுக்குத் தகவல் தரவும், அவர் போலீசு நிலையத்துக்கு ஓடி விசாரித்துள்ளார். அங்கு, தமிழரசனை விசாரித்துவிட்டு, வீட்டுக்கு அனுப்பிவிட்டதாகப் போலீசார் கூறினர். ஆனால், அன்று இரவு முழுவதும் தமிழரசன் வீடு திரும்பவில்லை. மறுநாள் அவன் திருப்பருத்திக் குன்றத்தில்

செங்குன்றம் அரிசி ஆலை - கொளுத்தும் வெய்யிலில் கருகிடும் தளிர்கள்.



www.padippakam.com

வாயில் களிமண் அடைக்கப்பட்ட நிலையில் பிணமாகக் கிடந்தான்.

இக்கொடுஞ்செயலுக்கு எதிராக நீதி கேட்டு தறிகளில் கொத்தடிமைகளாக உழலும் குழந்தைகளைத் திரட்டி ''சாம்'' எனும் தன்னார்வ குழுவும் சில உள்ளூர் சமூக நல மன்றங்களும் ஊர்வலம் நடத்தி மாவட்ட ஆட்சியரிடம் மனு கொடுத்துள்ளனர். அதைபிறகுதான் தறிக்கூடம் எனும் சிறைச்சாலைகளில் நிலவும் கொடுமைகள் பற்றி செய்திகள் மெதுவாகக் கசியத் தொடங்கியுள்ளன. தமிழரசன் கொலைக்கு ஒரு வாரத்திற்குப் பின்னர்தான் தறி முதலாளி சம்பந்தம் கைது செய்யப்பட்டுள்ளார். 14 வயதுக்குட்பட்ட குழந்தைகளை வேலைக்கு வைப்பது குற்றம் என்கிறது சட்டம். ஆனால், தமிழரசன் திருடியதாக பொய்க் குற்றம் சாட்டி போலீசிடம் அவனை ஒப்படைக்க வந்த தறிமுதலாளியை அப்போதே போலீசார் கைது செய்ய வில்லை. அச்சிறுவனை பெற்றோர் முன்னிலையில் விசாரிக்கவும் இல்லை. இதுதான் சட்டம் - ஒழுங்கைக் காக்கப் புறப்பட்டுள்ள காக்கிச் சட்டை கயவாளிகளின் யோக்கியதை!

***

தலைநகர் சென்னையை அடுத்துள்ள வட்டார நகரமான காஞ்சிபுரத்திலேயே கொத்தடிமைக் கொடூரம் இப்படிக் கேள்விமுறையின்றித் தொடர்கிறது என்றால், தமிழகத்தின் பிற பகுதிகளைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. அப்பளக் கம்பெனிகள், செங்கற்சூளைகள், கல்குவாரிகள், பீடி சுற்றும் கூடங்கள், கைத்தறிக் கூடங்கள், உணவு விடுதிகள், கம்பளம் தரைவிரிப்பு நெசவுக் கூடங்கள் எனப் பல இடங்களிலும் சிறுவர்கள் கொத்தடிமைகளாகப் பரிதவிக்கின்றனர். சிவகாசி தீப்பெட்டித் தொழிலில்தான் சிறுவர்களை வேலைக்கு அமர்த்தும் கொடுமை தொடர்கிறது என்றிருந்த நிலைமைக்குப் பதிலாக, இன்று எல்லா தொழில்களிலும் சிறுவர்கள் கொத்தடிமைகளாக உழலும் கொடுமை கேள்விமுறையின்றித் தொடர்கிறது.

நகரங்கள் என்றால் சிறு தொழிற் கூடங்கள். கிராமங்கள் என்றால்..? நிலப்பிரபுக்களின் பண்ணைகளில் சாணி அள்ள, மாடுமேய்க்க, வரப்பு கழிக்க, களையெடுக்க, புல் பிடுங்க எனக் கொத்தடிமைகளாகச் சிறுவர்கள் வதைபடுகின்றனர். வளப்பமில்லாத மேட்டாங்காடு, விவசாயம், வருடத்தில் மூன்று மாதங்கள் மட்டுமே கிடைக்கும் கூலி வேலை என்று வறுமையில் உழலும் பெரம்பலூர் மாவட்ட கிராமப்புறங்களில் சிறுவர்களும் சிறுமிகளும் பண்ணைகளில் அடகு வைக்கப்பட்டு, கொத்தடிமைக் கொடூரத்தில் கசக்கிப் பிழியப்படுகின்றனர்.

பெரம்பலூர் மாவட்டம் களத்தூர் மற்றும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களில் வறுமையின் காரணமாகப் பெற்றோர்கள் பள்ளி செல்லும் தமது அன்புக் குழந்தைகளை ரூ. 2000 முதல் ரூ. 5000 வரை பண்ணைகளில் அடகு வைக்கின்றனர். மூத்த மகனை அடகு வைத்து வட்டி கட்ட முடியாமல், வேறு வழியின்றி மனதைக் கல்லாக்கிக் கொண்டு இளைய மகனையும் அடகு வைத்துள்ள கூலி விவசாயிக் குடும்பங்கள் இப்பகுதியில் ஏராளம்.

பண்ணையில் வேலைக்கு நேர பாராமல்லாம் கிடையாது. நோய் - நொடின்னு லீவு போடவும் முடியாது. வேலைக்கு வருவதில் கொஞ்சம் தாமதமானாலும் விசாரிக்க பண்ணையிலிருந்து ஆள் வந்துவிடும். வேலை சுத்தமில்லை 'என்றால் பச்சைக் குழந்தைகள் என்றும் பாராமல் அடி விழும். ஆறுதல் சொல்லக்கூட அங்கே யாரும் இருக்க மாட்டார்கள்.

''அம்மா, நான் பண்ணை வேலைக்குப் போகமாட்டேன், என்னைப் போட்டு அடிக்கிறாங்கம்மா; நான் பள்ளிக் கூடம் போறேம்மா' என்று என் மகன் ரா முச்சூடும் அழுவுறான். பொழுது விடிஞ்சதும் அவனை பண்ணைக்கு அனுப்பி வைக்க மனது தாங்கல...'' என்று இன்னுமொரு பிரசவ வேதனை கண்டவர்போலத் துடிக்கிறார் மணிமுத்து என்ற சிறுவனின் தாயான செல்லம்மாள்.

இந்தக் கொடுமையிலிருந்து தம்மையும் தமது குழந்தைகளையும் மீட்க யாராவது உதவ மாட்டார்களா என்று ஏங்குவதும் பின்னர் விதி விட்ட வழி என்று இதையே வாழ்க்கையாக எண்ணி சகித்துக் கொள்வதுமாக வறுமையிலும் அறியாமையிலும் உள்ள இப்பகுதிவாழ் மக்கள் அவதிப்படுகின்றனர்.

களத்தூர், மேட்டுவரநத்தம், நெய்குப்பை புதூர் முதலான கிராமங்களில் ஐம்பதுக்கும் மேற்பட்ட சிறுவர்கள் பண்ணைகளில் கொத்தடிமைகளாக உள்ளதாகச் செய்திகள் வருகின்றன. இவர்களில் முதல் கட்டமாக மூன்று சிறுவர்களை ''வேர்ல்டு விஷன்'' என்ற தன்னார்வக் குழு அண்மையில் மீட்ட பிறகுதான், இப்படி சிறுவர்கள் பண்ணைகளில் கொத்தடிமைகளாக்கப்படும் கொடுமை பற்றி வெளியுலகுக்குத் தெரியவந்துள்ளது.

பெரம்பலூர் மாவட்டத்தில் பண்ணைகளிலிருந்து மீட்கப்பட்ட சிறுவர்கள்: இந்த விடுதலை நிரந்தரமா?



ஆந்திராவில் கல்குவாரிகள், கர்நாடகாவில் செங்கற்சூளைகள், மகாராஷ்விராவில் கடலை மிட்டாய் தொழிலகங்கள் என பிற மாநிலங்களக்குச் சென்று கொத்தடிமைகளாகத் தவித்த தமிழ்க் குடும்பங்களை அங்கொன்றும் இங்கொன்றுமாக மீட்டு வந்து கொண்டிருந்த தன்னார்வக் குழுக்கள், இப்போது தமிழகத்தின் பல பகுதிகளில் கொத்தடிமைத்தனம் கேள்விமுறையின்றித் தொடர்வதைக் கண்டு கையைப் பிசைந்துக் கொண்டு நிற்கின்றன. ஓரிரு குடும்பங்கள் கொத்தடிமைகளாகச் சிக்கிக் கொண்டால் மீட்கலாம். ஆனால் ஆயிரக்கணக்கானோர் இப்படி சிக்கிக் கொண்டால் - சமுதாயமே இருண்ட காலத்திற்குள் தள்ளப்பட்டால் என்ன செய்வது?

ஒரிசாவில் பட்டினியால் பரிதவிக்கும் விவசாயிகள் மாங்கொட்டை கஞ்சி குடித்து சாவிலிருந்து மீளத் துடிக்கிறார்கள். ஆந்திராவில் கடலை விவசாயிகளும், கர்நாடகத்தில் பருப்பு விவசாயிகளும், கேரளாவில் தென்னை விவசாயிகளும், தமிழகத்தில் கரும்பு விவசாயிகளும் கடன் சுமையாலும் விலை வீழ்ச்சியாலும் தற்கொலைக்குத் தள்ளப்படுகிறார்கள். கூலி - ஏழை விவசாயிகளோ கொத்தடிமைகளாகப் பரிதவிக்கிறார்கள். நெசவாளர்களோ வறுமையைப் போக்க வழி தெரியாமல் தமது சிறுநீரகத்தையே விலைபேசி விற்கிறார்கள். ஆட்சியாளர்களாலும் அனைத்து ஓட்டுக் கட்சிகளாலும் பெருமையாகப் பீற்றிக் கொள்ளப்படும் தனியார்மயமும் தாராளமயமும் நாட்டு மக்களுக்கு அளித்துள்ள 'பரிசு'கள்தான் இவை.

இத்தகைய நாட்டு விரோத, மக்கள் விரோத ஏகாதிபத்தியக் கொத்தடிமைகள் ஆட்சியதிகாரத்தில் உள்ளவரை நாடெங்கும் பெருகிவரும் கொத்தடிமைத்தனத்தை ஒழித்துவிட முடியாது. தொழிற்சங்க சட்டத்தைத் திருத்தி தொழிலாளர்களையே கொத்தடிமைகளாக்கக் கிளம்பிவிட்ட துரோகிகளின் ஆட்சியில், இளஞ்சிறுவர்கள் கொத்தடிமைகளாக்கப்படும் கொடுமையைத் தடுத்திடவும் முடியாது. இந்தக் கொடுமைகளுக்கும் அவமானங்களுக்கும் காரணமான தனியார்மய - தாராளமயக் கொள்கைகளையும், அதைத் தீவிரமாகச் செயல்படுத்தி வரும் பாசிச ஆட்சியாளர்களையும் எதிர்த்து நீங்கள் போராடப் போகிறீர்களா? அல்லது நாகரீகக் கொத்தடிமைகளாக நீங்கள் சிக்கித் தவிக்கப் போகிறீர்களா?

• குமார்


படிப்பகம்

www.padippakam.com

# ஏய்த்துப் பிழைக்கும் பொறுக்கிகளை எச்சரித்து விரட்டியது பு.மா.இ.மு.

ஈரோடு நகரில் கடந்த செப்டம்பர் 15-ஆம் தேதியன்று, அகில இந்திய மக்கள் பொதுவுடைமைக் கட்சி (AIPCP) என்ற பெயரில் அதன் பொதுச் செயலாளர் என்று கூறிக் கொண்ட ராஜசேகர் என்பவனும் மற்றும் இரு எடுபிடிகளும் துண்டுப் பிரசுரத் துடன் கடை வீதியில் தமது கட்சிக்கு நிதி வசூல் செய்து கொண்டிருந்தனர். அங்கு வந்த புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணியைச் சேர்ந்த தோழர்கள், இதுவரை கேள்விப்படாத புதிய கம்யூனிஸ்ட் கட்சியாக உள்ளதே என்று அவர்களிடம் விசாரித்தபோது, அவர்கள் கம்யூனிஸ்டு பெயரைச் சொல்லிக் கொண்டு வசூல் செய்து ஏய்த்துப் பிழைக்கும் பொறுக்கி கும்பல் என்று தெரிய வந்தது.

உடனே அவர்களின் யோக்கியதையை அம்பலப்படுத்தி கடைவீதியில் திரண்டிருந்த மக்களிடம் பு.மா.இ.மு. தோழர்கள் விளக்கியதும், அரண்டுபோன அப்பொறுக்கிகள் தாங்கள் செய்தது தவறுதான் என்று கும்பிடு போட்டு மன்னிப்பு கேட்டனர். இதற்கு முன் இந்திய மக்கள் கம்யூனிஸ்ட் கட்சி (IPCP) என்ற பெயரில் தாங்கள் ஏய்த்துப் பிழைத்ததாகவும், அதன் பொதுச் செயலாளர் என்று கூறிக் கொண்ட தஞ்சையைச் சேர்ந்த அன்பழகனுக்கும் தனக்கும் வசூல் பணத்தைப் பங்கு போடுவதில் தகராறு ஏற்பட்டதாகவும் அதனால் அன்பழகன் தன்னை விலக்கி விட்டதாகவும், பின்னர் தானே இப்படியொரு கட்சியை உருவாக்கிக் கொண்டு வசூல் வேட்டை நடத்தி வருவதாகவும், இனிமேல் இப்படிச் செய்யவே மாட்டேன் என்றும் ராஜசேகர் பகிரங்க மன்னிப்பு கேட்டு தனது எடுபிடிகளுடன் பயந்தோடினான். அவனிடம் விசாரித்துக் கொண்டிருந்தபோது, இந்திய மக்கள் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் என்று கூறிக் கொள்ளும் அன்பழகன் என்ற பிழைப்புவாதி தற்போது ஈரோடு நவபவன் விடுதியில் தங்கிக் கொண்டு தஞ்சையில் மாநாடு நடத்தப் போவதாக வசூல் செய்து வருகிறான் என்ற தகவல் கிடைத்தது.

பின்னர் பு.மா.இ.மு. தோழர்கள் நவபவன் விடுதிக்குச் சென்று, பொறுக்கி அன்பழகனைப் பிடித்து விசாரித்தனர். சினிமா நடிகன் ஓமகுச்சி நரசிம்மன், நடிகை சிறீலதா ஆகியோரை வைத்து தஞ்சையில் மாநாடு நடத்தப் போவதாக அச்சிட்ட பிரசுரங்களைக் காட்டி அவன் பசப்பினான். ''சினிமா கழிசடைகளை வைத்து பிழைப்பு நடத்தும் நாயே! உன் கட்சி தமிழ்நாட்டில் எங்கேடா இருக்கிறது?'' என்று மிரட்டிக் கேட்டதும், அவன் அஞ்சி நடுங்கித் தோழர்களின் காலில் விழுந்து இனிமேல் இப்படிச் செய்ய மாட்டேன் என்று மன்னிப்பு கேட்டான்.

இதைத் தொடர்ந்து, ஈரோட்டில் கம்யூனிஸ்டு பெயரால் பொறுக்கித் தின்று வந்த ராஜசேகரின் வீட்டுக்குச் சென்று அப்பகுதி மக்கள் முன் அவன் யோக்கியதையை தோழர்கள் அம்பலப்படுத்தியதும், இனி எங்கேயும் இப்படி வசூல் செய்ய மாட்டேன் என்று அவன் உறுதியளித்தான். கட்சிக்குத் திட்டமோ, கொள்கையோ, அமைப்பு விதிகளோ, ஊழியர்களோ இல்லாமல், லெட்டர்பேடு கட்சி நடத்தியதற்கும், பாட்டாளி வர்க்கத்தின் சின்னத்தையும் கொடியையும் கேடாகப் பயன்படுத்தி பிழைப்பு நடத்தியதற்கும் மன்னிப்பு கேட்டு தனது கைப்பட ஒப்புதல் கடிதமும் எழுதிக் கொடுத்தான்.

கம்யூனிஸ்டுகளில் யார் புரட்சியாளர்கள், யார் போலிகள் - பிழைப்புவாதிகள் என்பதைப் புரிந்து கொள்ள இந்நடவடிக்கை மிகவும் உதவியாக அமைந்தது என்று பு.மா.இ.மு.வை உழைக்கும் மக்கள் பாராட்டினர்.

— புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி, ஈரோடு.

# “வாழ்வைப் பறிக்காதே!” - பெருமுதலாளிகளை எதிர்த்துத் தரைக்கடை வியாபாரிகளின் ஆர்ப்பாட்டம்

திருச்சி என்.எஸ்.பி. ரோடு, தெப்பக்குளம் ஆகிய பகுதிகளில் தரைக்கடை போட்டு வியாபாரம் செய்துவரும் சிறுகடை வியாபாரிகளால் போக்குவரத்து நெரிசல் உண்டாகிறது; பொது மக்களுக்கு இடையூறாக இருக்கிறது என்றும் அவர்களை அப்புறப்படுத்த வேண்டுமென கோரியும் 04.10.01 அன்று ஜவுளி முதலாளிகளின் சங்கம் பேரணி நடத்தியது. இதற்கு முன்பே பெரும் கடை முதலாளிகளின் கோரிக்கையின் பேரில் மாநகராட்சி சிறு கடை வியாபாரிகளை அப்புறப்படுத்தியுள்ளது. இதற்கு எதிராகச் சிறு தரைக் கடை வியாபாரிகள் தங்கள் உரிமையை நிலைநாட்டிக் கொள்ள 'அனைத்துத் தரைக் கடை வியாபாரிகள் பாது காப்புச் சங்கம்' என்ற பெயரில் அணிதிரண்டு போராடி வருகின்றனர்.



இந்நிலையில், போக்குவரத்தைக் காரணம் காட்டித் தரைக்கடைகளை அப்புறப்படுத்தி ஒழித்துக்கட்ட நினைக்கும் பெரு முதலாளிகள் சங்கத்தைக் கண்டித்தும், தீபாவளி பண்டிகையை முன்னிட்டு என்.எஸ்.பி. ரோடு, தெப்பக்குளம் பகுதிகளில் தரைக்கடை போட அனுமதி கேட்டும், 11.10.2001 அன்று அனைத்துத் தரைக்கடை வியாபாரிகள் சங்கக் கூட்டமைப்பு பேரணியும் ஆர்ப்பாட்டமும் நடத்தியது.

அனைத்துத் தரைக்கடை வியாபாரிகள் சங்கக் கூட்டமைப்பின் தலைவர் சேகர் தலைமையில் கண்டனப் பேரணி தொடங்கியது. நந்தி கோயில் தெரு, என்.எஸ்.பி. ரோடு, பெரிய கடை வீதி வழியே சென்று கமான் வளைவருகே ஆர்ப்பாட்டத்தை நடத்தியது. இதில் பெண்கள், பள்ளிச் சிறுவர்கள் உட்படத் திரளான மக்கள் கலந்து கொண்டனர்.

— அனைத்துத் தரைக் கடை வியாபாரிகள் சங்கக் கூட்டமைப்பு, திருச்சி.


படிப்பகம்

www.padippakam.com

# தொடரும் சாராய சாவுகள்: கொலைகாரர்கள் யார்?

சென்னை அம்பத்தூர் அருகே மேனாம்பேடு கிராமத்தில் கடந்த செப்டம்பர் 7-ஆம் தேதியன்று நச்சுச்சாராயத்தைக் குடித்த 13 பேர் பரிதாபமாகப் பலியானார்கள். அந்தத் துயரம் நினைவை விட்டு அகலும் முன்பாக கடந்த அக்டோபர் 5-ஆம் தேதியன்று சென்னை - செங்குன்றம் அருகே கோட்டூர், அத்திவாக்கம், பட்டரைப் பெரும்புதூர் கிராமங்களைச் சேர்ந்த கூலித் தொழிலாளர்கள் 50-க்கும் மேற்பட்டோர் நச்சுச் சாராயத்துக்குப் பலியாகியுள்ளார்கள். இதுதவிர மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வந்த 50-க்கும் மேலானோருக்குக் கண்பார்வை போய்விட்டது.

சென்னை ஸ்டான்லி அரசு மருத்துவமனையில் பிரேதப் பரிசோதனை முடிந்து அறுத்துப்போட்ட கணவனின் உடலை மடியில் கிடத்திக் கொண்டு அழுத பெண்களின் துயரம் பார்ப்பவர் நெஞ்சைக் கசியச் செய்தது. கணவனை இழந்த மனைவி, பெற்றோரை இழந்த குழந்தைகள், மகனை இழந்த தாய் என செங்குன்றம் வட்டாரமெங்கும் இன்னமும் ஒப்பாரி எதிரொலிக்கிறது. திருமண நிச்சயதார்த்த விழாவுக்கு வந்து நச்சுச் சாராயம் குடித்ததால் இரத்த வாந்தி எடுத்து துடிக்கத் துடிக்க தமது உற்றார் - உறவினர்கள் மாண்ட கொடுமையைக் கண்ட அந்த வட்டார மக்கள் அதிர்ச்சியிலிருந்து இன்னும் மீளவேயில்லை.

இப்படுகொலைகளுக்குக் காரணமான ''மெத்தனால்'' எனும் கொடிய இரசாயன நச்சு திரவத்தில் தண்ணீர் கலந்து சாராயமாக்கி விற்ற கஸ்தூரி என்ற பெண்மணியையும் அவரது மகன் பார்த்திபனையும் கைது செய்துள்ளதோடு, செங்குன்றம் போலீசு நிலையத்தைச் சேர்ந்த 42 போலீசாரைக் கூண்டோடு மாற்றம் செய்துள்ளது தமிழக போலீசுத் துறை. இது தவிர இந்த நச்சுச் சாராயக் கலவைக்குப் பயன்படுத்தப்பட்ட ''மெத்தனால்'' மாதவரத்திலுள்ள 'ப்யூர் கெமிக்கல்ஸ்' நிறுவனத்திலிருந்து கடத்திவரப்பட்டதாகக் குற்றம் சாட்டி அந்த நிறுவனத்தை மூடி, அதன் உரிமையாளர் மற்றும் ஊழியர்கள் உள்ளிட்டு ஆறு பேரைக் கைது செய்துள்ளது.

ஒவ்வொரு முறையும் சாராய சாவுகள் நடக்கும்போதெல்லாம் இப்படி சிலரைக் கைது செய்வதும், சம்பந்தப்பட்ட போலீசு நிலையத்தைச் சேர்ந்த போலீசாரைத் தற்காலிகப் பணிநீக்கம் செய்வதும், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அரசு நிவாரணத் தொகை அளிப்பதும் நடக்கிறது. இப்போதும் வழக்கம் போலவே அது திரும்பவும் நடந்துள்ளது.

ஆனால், சென்னை - அம்பத்தூர் சாராயச் சாவுகளுக்குக் காரணமாக இருந்தது ''மெத்தனால்''. சென்னை - செங்குன்றம் சாராய சாவுகளுக்குக் காரணமாக இருந்ததும் ''மெத்தனால்''. மெத்தனால், ஆர்.எஸ். பவுடர், எரிசாராயம் எனக் கொடிய நச்சு இரசாயனப் பொருட்களைக் காட்டமான போதை தருவதற்காகச் சாராயத்தில் கலந்து விற்கின்றனர். இவையெல்லாம் போலீசுக்குத் தெரிந்தே அவர்களின் ஒத்துழைப்போடுதான், சாராய கிரிமினல் குற்றக் கும்பல்கள் தொழிலை நடத்துகின்றன. வயிற்றுப் பிழைப்புக்காக சாராயம் காய்ச்சி விற்போரை விட, இப்படிப்பட்ட கிரிமினல் கும்பல்கள்தான் பெரிய அளவில் கள்ளச் சாராயத் தொலிழில் புகுந்துள்ளனர்.

சாராயம் காய்ச்சி விற்பது என்பது நமது நாட்டில் காலம் காலமாக நடந்து வரும் குடிசைத் தொழில்தான். ஏறக்குறைய எல்லா கிராமங்களிலும் புறநகரப் பகுதிகளிலும் இரண்டு, மூன்று குடும்பங்கள் சாராயம் காய்ச்சி விற்று வருகின்றன. கள்ளச் சாராயம் என்பது கடந்த 50 ஆண்டுக்குள் வந்த விவகாரம் தான். அதற்குமுன் சாராயம் காய்ச்சவும் விற்கவும் தடையில்லை. பெரும் சாராய ஆலைகள் வைத்து நடத்தும் தொழிலதிபர்கள் உருவானதும், அதன் உற்பத்தி விற்பனை மூலம் அரசுக்குக் கலால் வரி வசூலிக்கும் முறை அரசு வருவாய்க்கு முக்கிய மூலாதாரமாக வளர்ந்த பின்னர்தான், இந்த ஏற்பாட்டுக்கு வெளியே சாராயம் காய்ச்சி விற்பது குற்றத் தொழிலாக - சட்ட விரோதச் செயலாகக் கருதப்பட்டது. மதுவிலக்கு கொள்கையை வைத்து ஓட்டுப் பொறுக்குவதும், சாராய அதிபர்களிடம் இலஞ்சக் கூட்டு வைப்பதுமான ஓட்டுக் கட்சிகளின் பித்தலாட்ட நடைமுறையும் சாராயம் காய்ச்சி விற்பதைக் குற்றத் தொழிலாக்கி விட்டன. இருந்தபோதிலும், வறுமையின் காரணமாகவும், வேலையின்மையாலும் சிலர் வயிற்றுப் பிழைப்புக்காக சாராயம் காய்ச்சி விற்பதும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. இவர்கள்தான் போலீசிடம் அடி உதைபடுவதும், மாமூல் கட்டுவதும், வழக்கு - சிறை என்று வதைபடுபவர்களாகவும் உள்ளனர்.

ஆனால், கள்ளச் சாராயத் தொழிலில் புகுந்துள்ள கிரிமினல் குற்றக் கும்பல்கள் வேறுவகையினர். இவர்கள் சாராய ஊறல், அடுப்பு, பானை, பீப்பாய் என்று தொழில் செய்வதில்லை. அதைவிட மலிவான சுலபமான வழிகளில் காட்டமான போதை தரும் சாராயத்தை உற்பத்தி செய்கின்றனர். மெத்தனால், ஆர்.எஸ். பவுடர், எரிசாராயம் மற்றும் பிற இரசாயனக் கலவைகளைக் கொண்டு சாராயத்தைத் தயாரித்து, வயிற்றுப் பிழைப்புக்காக சாராயம் விற்போரை மிரட்டி அடக்கி இந்த விஷச் சாராயத்தை விற்க வைத்து குறுகிய காலத்திலேயே கோடிகளை அள்ளுகின்றனர். இத்தகைய உள்ளூர் கிரிமினல் குற்றக் கும்பல்கள்தான் இன்று கள்ளச்சாராயத் தொழிலில் கொடி கட்டிப் பறக்கின்றனர்.

இச்சாராயக் கிரிமினல்கள் உள்ளூர் ஓட்டுக் கட்சி தலைவர்கள், போலீசு அதிகாரிகளின் கூட்டாளியாகவோ பினாமி

''மெத்தனால்'' சாராயம் குடித்துப் பிணமாகிப் போன கூலித் தொழிலாளர்கள்.





படிப்பகம்

யாகவோ உள்ளனர். சிலர் உள்ளூர் அரசியல் தலைவர்களாக வளர்ந்து பின்னர் எம்.எல்.ஏ., எம்.பி; அமைச்சர்களாகவும் உயர்ந்து விடுகின்றனர். இன்னும் சிலர் வீட்டுமனை, பேருந்து - லாரி போக்குவரத்து, அரிசி ஆலை, கமிசன் மண்டி, சினிமா கொட்டகை, அரசு கட்டுமான ஒப்பந்தக் காரத் தொழில் என்று வளர்ந்து தொழிலபதிபர்களாகவும் சுயநிதிக் கல்லூரிகள் நடத்தும் கல்வியாளர்களாகவும் வள்ளல்களாகவும் முன்னேறுகின்றனர். சமூகத்தில் மதிப்புக்குரிய தலைவர்களாகவும் தளபதிகளாகவும் ''ஐயா''க்களாகவும் பரிணமிக்கின்றனர்.

சாராயச் சாவுகள் நடக்கும் போதெல்லாம் அரசியல் தலைவர்கள் - அதிகாரிகள் - போலீசாரிடம் உள்ள நெருங்கிய உறவைக் கொண்டு இந்தக் குற்றக் கும்பல்கள் எளிதில் தப்பித்து விடுகின்றன. அந்தந்த மட்டத்துக்கு மாதாமாதம் மாமூலும், மாதம் இவ்வளவு வழக்கு என்று அதற்கேற்ப போலீசாரிடம் ஆட்களை ஒப்படைத்துப் பிணையில் விடுவிப்பதும் எவ்விதத் தடங்கலுமின்றி தொடர்வதால் இக்கள்ளச்சாராய கிரிமினல் கும்பல்களை போலீசும் கண்டு கொள்வதில்லை; நடவடிக்கையும் எடுப்பதில்லை. அதேசமயம், இக்கள்ளச் சாராய கும்பல்களுக்கு எதிராகப் புகார் கொடுத்தவர்கள் பற்றி கள்ளச்சாராயக் கும்பலுக்கு அடுத்த நிமிடமே தகவல் தெரிவிக்கப்பட்டு, அவர்கள் இக்கிரிமினல் கும்பல்களால் தாக்கப்படுவதும், ஏன் கொலை செய்யப்படுவதும் தொடர்கிறது.

இத்தகைய கள்ளச் சாராய கிரிமினல் கும்பல்கள் தேர்தல் சமயங்களில் இலவச சாராய விநியோகம், கள்ள ஓட்டு, ஓட்டுச்சாவடிகளைக் கைப்பற்றுவது, வெட்டு குத்து, வெடிகுண்டு வீச்சு என்று தேர்தல் கேலிக் கூத்தை முன்னின்று நடத்துகின்றனர். இதோடு கட்டைப் பஞ்சாயத்து, கடத்தல், மிரட்டிப் பணம் பறித்தல், கூலிக்கு கொலை செய்தல் என உள்ளூர், வட்டார அளவில் ''தாதா''க்களாகச் செயல்படுகின்றனர்.

இதே மாதிரியான சட்ட விரோத - சமூக விரோத வேலைகளைத்தான் சாராய ஆலை அதிபர்கள் மேல்மட்டத்தில் செய்கின்றனர். இவர்கள் வாரி இறைக்கின்ற கள்ளப் பணத்தில்தான் தேர்தல் திருவிழா தடபுடலாக நடக்கிறது. அமைச்சர்களைத் தெரிவு

செய்வது, நீக்குவது, ஆட்சிகளைக் கவிழ்ப்பது, விசுவாச ஆட்சியை நிறுவுவது என ஆணையிடும் அளவுக்கு இவர்கள் வளர்ந்து வருகின்றனர்.

இன்று நாடெங்கும் இப்படிப்பட்ட சாராய மன்னர்களும், உள்ளூர் கள்ளச் சாராய தளபதிகளும் அவர்களோடு கூட்டு சேர்ந்துள்ள ஓட்டுக் கட்சித் தலைவர்கள், அதிகாரிகள், போலீசு கும்பலும் கொண்ட சாராய சாம்ராஜ்ஜியம்தான் கொடிகட்டிப் பறக்கிறது. இவர்கள்தான் கோடிக்கணக்கான மக்களின் வாழ்வைப் பறிப்பவர்கள். குடிகாரக் கணவனையும் பெற்றோரையும் உற்றார் உறவினர்களையும் விஷச் சாராயத்துக்குப் பலி கொடுத்துவிட்டு உழைப்பாளி பெண்களும் குழந்தைகளும் அனாதரவாக நிற்கக் காரணமானவர்களும் இவர்கள்தான்.

ஆனால், இவர்களையெல்லாம் பாதுகாப்பாக மூடி மறைத்துவிட்டு, ''மெத்தனால்'' சாராயம் விற்றவர்களையும், கடத்தி வந்தவர்களையும், தரகர்களையும் கைது செய்து, அவர்களை மட்டுமே குற்றவாளிகளாகக் காட்டுகிறது அரசு. இதில் வேடிக்கை என்னவென்றால், சாராய சாவுகள் நடந்த பகுதியைக் கட்டுப்படுத்தும் செங்குன்றம் போலீசு நிலையத்தைத்தான் தமிழக அரசு ''சீர்மிகு காவல்நிலையம்'' என்று கடந்த ஆண்டில் பாராட்டியுள்ளது. அந்த போலீசு நிலையத்தில் புதிதாகப் பொறுப்பேற்ற சப்-இன்ஸ்பெக்டர் ராஜன் கள்ளச் சாராயத்துக்கு எதிராக கறாராக இருந்ததால், தற்காலிகமாக சாராய வியாபாரத்தை நிறுத்துமாறு கோரிய கீழ்நிலை போலீசார், பின்னர் அந்த இன்ஸ்பெக்டர் பயிற்சிக்காக வெளியூர் சென்றதும் மீண்டும் சாராய வியாபாரத்தைத் தொடரச் சொல்லி நிர்பந்தித்ததாகவும், மாமூல் கேட்டு தொல்லைப்படுத்தியதாகவும், சென்னையைச் சேர்ந்த சாராயத் தரகன் மூலம் மெத்தனால் வாங்கி தண்ணீர் கலந்து விற்றதாகவும், கலவையில் தண்ணீரின் அளவு குறைந்ததால் சாவுகள் ஏற்பட்டதாகவும் சாராயம் விற்ற கஸ்தூரியும் பார்த்திபனும் வாக்கு மூலம் அளித்துள்ளனர். ஆனாலும், மெத்தனால் கடத்தி வந்த தரகனின் பின்னணியில் உள்ள கள்ளச் சாராய கிரிமினல் கும்பலை அரசும் போலீசும் திட்டமிட்டே மூடி மறைத்துவிட்டன. இலஞ்சம் வாங்கிக் கொண்டு கள்ளச் சாராயத்தை விற்க உடந்தையாக நின்ற மதுவிலக்கு போலீசார் மீதும் எந்த வழக்கும் தொடரப்படவில்லை.

சென்னையை அடுத்துள்ள அம்பத்தூர், செங்குன்றம் வட்டாரங்களில் அடுத்தடுத்து நடந்துள்ள கள்ளச்சாராய சாவுகள் ஏதோ அரிதான, விதிவிலக்கான கோரச் சம்பவங்கள் அல்ல. தமிழகம் முழுவதும் கடந்த பத்தாண்டுகளில் கள்ளச் சாராயம் குடித்து மாண்டவர்கள் 341 பேர். இதில் மெத்தனால் குடித்து மாண்டு போனவர்கள் மட்டும் 271 பேர். மெத்தனால் கலவையால் சாவுகள் பெருகி ஆட்சியாளர்களும் போலீசும் அம்பலப்பட்டுப் போயுள்ள நிலையில், மெத்தனாலுக்கு மேலும் கட்டுப்பாடுகள் கொண்டு வந்து தீவிரமாகக் கண்காணிக்கப் போவதாக அரசு அறிவித்துள்ளது. ஆனால், மெத்தனால் விற்பனை - விநியோகக் கட்டுப்பாட்டை மதுவிலக்கு ஆயத்தீர்வை துறையிடம் ஒப்படைத்ததன் மூலம் திருடன் கையில் பெட்டிச் சாவியைக் கொடுத்த கதையாகிவிட்டது.

கள்ளச் சாராயத்தை ஒழிக்கும் போலீசாருக்கு காந்தி பதக்கம், சிறப்பு விருதுகள் என அரசு அறிவிப்புகள் ஒருபுறம்; கள்ளச் சாராயத்தால் செழிக்கும் ஓட்டுக் கட்சி அரசியல் மறுபுறம் என்று தமிழக 'ஜனநாயக'ப் பூங்கா பூத்துக் குலுங்கிக் கொண்டிருக்கிறது. இக்கேடு கெட்ட, கொலைகார சாராய ஜனநாயகத்தைக் குழிதோண்டிப் புதைப்பதைத் தவிர உழைக்கும் மக்களுக்கு வேறுவழியில்லை. சமூக விரோத கள்ளச் சாராய கும்பலைப் பிடித்து உழைக்கும் மக்களே தண்டிப்பதைத் தவிர, சாராயச் சாவுகளைத் தடுக்கவும் வேறு வழியில்லை.

● தமிழ் மணி



**உற்றார் உறவினர்களை விஷச் சாராயத்துக்குப் பலி கொடுத்துவிட்டு மருத்துவமனை பிணவறை அருகே கதறும் உழைப்பாளர் குடும்பங்கள்.**

www.padippakam.com



## தாராளமயத்தின் அடுத்த பலி

கர்நாடகம் துவரம் பருப்புக்குப் பெயர் பெற்ற பாரம்பரிய விவசாயத்தைக் கொண்ட மாநிலம். கர்நாடகத்தில் வறண்ட மாவட்டங்களில் விவசாயிகளின் வாழ்வுக்கான ஆதாரமாக இருப்பது பருப்பு விவசாயம்தான். நிலத்தைக் குத்தகைக்கு எடுத்து துவரை விவசாயத்தில் ஈடுபட்டு வந்த சிறு விவசாயிகள், கடந்த சில ஆண்டுகளாகப் பெருகி வரும் இடுபொருள் செலவினாலும் மழையின்றி விளைச்சல் பாதிக்கப்பட்டதாலும் பெரிதும் நட்டமடைந்தனர். குத்தகை விவசாயிகளுக்கு வங்கி மூலம் கடன் பெறவோ, மானியம் பெறவோ வாய்ப்புகள் இல்லை. எனவே, கடுமையான கந்துவட்டிக்குக் கடன் வாங்கி விவசாயம் செய்கின்றனர். கடன் சுமையோடு பாடுபட்ட போதிலும், பருப்பு கொள்முதல் விலையாக குவிண்டாலுக்கு ரூ. 1800 முதல் ரூ. 2500 வரைதான் விவசாயிகளுக்குக் கிடைத்தது. இப்போது, பருப்பு வகைகளுக்கான தாராள இறக்குமதிக் கொள்கையின் விளைவாக, ஏற்கனவே இருந்து வந்த கொள்முதல் விலை அதளபாதாளத்துக்குச் சரிந்துவிட்டது.

பா.ஜ.க. அரசின் பொது இறக்குமதிக்கான தாராள உரிமம் (OGL) மூலம் இப்போது வெளிநாடுகளிலிருந்து பெருமளவில் துவரம் பருப்பு இறக்குமதியாகி ஒரு குவிண்டால் விலை ரூ. 1200-க்கும் கீழே போய் விட்டது. பாடுபட்ட விவசாயிகள் தாங்கள் விளைவித்த துவரை, பயிறு வகைகளுக்கு உரிய விலை கிடைக்காமல் பெருத்த நட்டமடைந்து, மீள முடியாத கடன்சுமையில் சிக்கி தற்கொலைக்குத் தள்ளப்பட்டார்கள். விளைவித்த துவரையை அடிமாட்டு விலைக்கு கமிசன் மண்டிக்காரர்களிடம் விற்க நிர்பந்திக்கப்பட்ட விவசாயிகள், வேறு பயிர் வைத்து விவசாயம் செய்யவும் வழிதெரியாமல், அடுத்த பருவத்திலாவது விலை உயரும் என்று மீண்டும் துவரை பயிரிடுவதும், மீண்டும் கந்து வட்டிக் கடன் பொறியில் சிக்குவதுமாகத் திண்டாடுகிறார்கள். இதிலிருந்து மீள வழி தெரியாமல் விரக்தியடைந்து போன பல விவசாயிகள் பூச்சி மருந்து குடித்துத் தற்கொலை செய்து கொள்வது அண்மைக் காலமாக அதிகரித்து விட்டது. 1999 முதல் 2001 ஆகஸ்டு வரை கர்நாடகத்தில் 110-க்கும் மேலான விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். கடந்த செப்டம்பரில் மட்டும் தென் கர்நாடக மாவட்டங்களில் 30-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கடன்சுமை தாளாமல் குடும்பத்தோடு தற்கொலை செய்து கொண்டுள்ளனர். துவரை மட்டுமின்றி சோளம் மற்றும் இதர பயிறு வகைகளும் தாராளமாக இறக்குமதியாகி விலைச் சரிவு ஏற்பட்டுள்ளதால், மேலும் பல்லாயிரக்கணக்கான விவசாயிகள் பெருத்த நட்டமடைந்து கந்துவட்டி கடன் பொறியில் சிக்கித் தத்தளித்துக் கொண்டிருக்கின்றனர்.



தாராளமயமும் உலகமயமும் தோற்றுவித்த பயங்கரம்: பெங்களூர் அருகேயுள்ள மாலூரில் தற்கொலைக்குத் தள்ளப்பட்ட விவசாயக் குடும்பம்.

## அடுத்த தாக்குதல் எப்போது? அச்சத்தில் ஏகாதிபத்திய உலகம்

உலகமயமாக்கலின் விளைவாக தீராத நெருக்கடிகளையும் பொருளாதாரச் சரிவையும் சந்தித்து வந்த ஏகாதிபத்திய உலகம், செப்டம்பர் 11 பயங்கரவாதத் தாக்குதலைத் தொடர்ந்து மீள முடியாத நெருக்கடியில் சிக்கிப் பீதியில் அலறுகிறது. ஏற்கனவே, இலாபமில்லை என்று சரிந்து விழுந்து கொண்டிருந்த உலகின் மிகப் பெரிய பன்னாட்டு விமான ஏகபோக நிறுவனங்கள், கடந்த ஒரு மாதத்தில் மட்டும் ஏறத்தாழ ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட ஊழியர்களை வேலையிலிருந்து விரட்டியடித்துள்ளன.

பயங்கரவாதிகளின் அச்சுறுத்தல், விமானக் கடத்தல் முதலானவற்றைக் காட்டி பல விமான நிலையங்கள் மூடப்படுவதாலும், அச்சம் காரணமாக பயணிகளின் எண்ணிக்கை குறைந்து விட்டதாலும் தமக்கு பெருத்த நட்டமேற்பட்டு திவாலாகும் நிலையில் உள்ளதாகக் கூறிப் பல விமான நிறுவனங்கள் ஊழியர்களுக்கு "லே-ஆப்" கொடுத்து, ஆட்குறைப்பு செய்து வருகின்றன. திவாலாகும் விமான நிறுவனங்களுக்கு அமெரிக்க அரசு 1500 கோடி டாலர் அவசரக் கடனுதவி அளித்து முட்டுக் கொடுத்த போதிலும், அவற்றைத் தூக்கி நிறுத்த முடியவில்லை. நெருக்கடிகளைக் காரணம் காட்டி தொழிலாளர்களை வீதியில் வீசியெறிவதும் நிற்கவில்லை.

உலகின் மிகப் பெரிய விமான நிறுவனமான "போயிங்", 30,000 தொழிலாளர்களைச் சிக்கன சீரமைப்பு என்ற பெயரில் வேலை நீக்கம் செய்துள்ளது. அமெரிக்காவின் ஐந்தாவது பெரிய விமான நிறுவனமான "காண்டினென்டல் ஏர்லைன்ஸ்" 12,000 பேரை வேலையிலிருந்து விரட்டியடித்துள்ளது. அமெரிக்காவின் இரண்டாவது பெரிய விமான நிறுவனமான "யு.ஏ.எல்"; 20,000 பேரையும், "நார்த்வெஸ்ட் ஏர்லைன்ஸ்" 10,000 பேரையும் வேலையிலிருந்து விரட்டி வீதியில் வீசியெறிந்துள்ளன. அமெரிக்காவின் கூட்டாளியான பிரிட்டனின் "பிரிட்டிஷ் ஏர்வேஸ்" நிறுவனம் 5000 தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்துள்ளது. ஆஸ்திரேலியாவின் மிகப்பெரிய விமான நிறுவனமான "அன்செட்" மூடப்பட்டு, அதன் 16,000 தொழிலாளர்கள் வேலையிழந்து நிற்கின்றனர்.

விமான நிறுவனங்கள் மட்டுமின்றி, சுற்றுலா, ஓட்டல், பொழுதுபோக்கு விடுதிகள் என இவற்றைச் சார்ந்துள்ள தொழில்களும் நெருக்கடியில் சிக்கிப் பல இலட்சம் பேர் வேலையிழந்து பரிதவிக்கின்றனர். இதன் தொடர்ச்சியாக சரவெடி போல, பங்குச் சந்தை தொடங்கி மோட்டார் கார், எண்ணெய், ஆயத்த ஆடை, மின்னணுத் தொழில் என அடுத்தடுத்து அனைத்திலும் தேக்கமும் சரிவும் தொழிலாளர் வேலை நீக்கமும் பற்றிப் படர்கின்றன. உலகின் மிகப் பெரிய பங்கு பத்திர நிறுவனமான மார்கன் - ஸ்டான்லி, செப்டம்பர் 11-க்குப் பிறகு வந்த நாட்களில் 850 இலட்சம் டாலர் அளவுக்கு நட்டமடைந்து விட்டதாகப் புலம்புகிறது.

இந்தியா, பாகிஸ்தான், வங்கதேசம், கொரியா முதலான நாடுகளிலிருந்து குடிபெயர்ந்து பிழைக்கும் ஆசியத் தொழிலாளர்கள் பல்லாயிரக்கணக்கானோர் இன்று அமெரிக்காவில் வேலையிழந்து பரிதவிக்கின்றனர். வாடகைக் கார் ஓட்டுநர்கள், காபிகடை, செய்தித்தாள் கடை, ஓட்டல், கட்டுமானத் தொழில் நிலையங்களில் பணியாற்றி வந்த ஆசியத் தொழிலாளர்கள் 5000-க்கும் மேற்பட்டோர் வேலையிழந்து நிற்கின்றனர். இன்னும் பல்லாயிரக்கணக்கானோர் "லே-ஆப்" காரணமாக அரைகுறை சம்பளத்தில் அல்லற்படுகின்றனர். வேலையற்றோருக்கான நிவாரண உதவி தரும் கஞ்சித் தொட்டி நிலையங்களில் ஒருவேளை கஞ்சிக்காக நீண்ட வரிசையில் தொழிலாளர்கள் நிற்பது எல்லா பெரு நகரங்களிலும் பெருகி வருகிறது.

மீள முடியாத நெருக்கடி, பொருளாதாரச் சரிவுகளைச் சாதக



படிப்பகம்

www.padippakam.com



மாக்கிக் கொண்டு, தொழிலாளர்களுக்குச் சட்டப்படியான உரிமைகளைக் கூட மறுத்து, ஒப்பந்தத் தொழிலாளர் நிலையில் நிரந்தரத் தொழிலாளர்களை இருத்தி வைக்க பன்னாட்டு ஏகபோக நிறுவனங்கள் முயற்சிக்கின்றன. இதற்கென தொழிலாளர் நலச் சட்டங்களை மாற்றியமைக்குமாறு கோருகின்றன.

உலகமயமாக்கலின் உடனடி விளைவு வேலையின்மைதான் என்பதை இவை மீண்டும் நிரூபித்துக் காட்டிவிட்டன. வேலையிழந்த தொழிலாளர்களும், வேலை கிடைக்காத இளைஞர்களும் கோடிக்கால் பூதமாகத் திரண்டெழுந்து விடுவார்களோ, இந்த பூதம் எப்போது தாக்குமோ என்று அவர்கள் அஞ்சி நடுங்கிக் கொண்டிருக்கிறார்கள்.




"ஊழியர்களைப் போராட்டத்துக்குத் தள்ளிய தலைமை நிர்வாகி கேரி டூமிக்கு நன்றி!" என்ற முழக்க அட்டையுடன் நியூசிலாந்து விமான நிறுவனத்தின் ஆட்குறைப்பு நடவடிக்கையை எதிர்த்து ஆர்ப்பாட்டம்.

## பார்ப்பன இந்து மதத்தின் கோரமுகம்

**ம**த்தியப் பிரதேசத்தின் சட்டர்பூர் மாவட்டத்தில் உள்ளது உஜ்ரா கிராமம். அங்கு ராமச்சந்திர சிவ்ஹரே என்ற பார்ப்பனர் 27 ஆண்டுகளுக்கு முன்பு ராம்-ஜானகி கோயிலைக் கட்டி வழிபாடு நடத்தி பராமரித்து வந்தார். பார்ப்பன இந்துமத ஆகம விதிகளின் படி, பார்ப்பனர்கள் மட்டுமே கோயில் கருவறையில் நுழையவும், சாதி இந்துக்கள் கோயிலினுள் வழிபடவும், தாழ்த்தப்பட்டோர் அதற்கு அப்பால் நின்று வழிபடவும் அனுமதிக்கப்பட்டிருந்தது. திருவிழா காலங்களில் கடவுள் சிலையை கிராமத்தில் ஊர்வலமாக எடுத்து வந்து வழிபடுவதும் நடந்து வந்தது.

கடந்த ஆகஸ்டு 30-ஆம் தேதியன்று பார்ப்பனர்கள் கடவுள் இராமனின் செப்புச் சிலையை (உற்சவ மூர்த்தி) ஊர்வலமாக எடுத்து வந்து விழா நடத்தினர். ஊர்வலம் மேல்சாதியினரின் தெரு வழியாகச் சென்று தாழ்த்தப்பட்டோர் பகுதியை அடைந்தது. உடனே பார்ப்பனர்கள் கடவுள் சிலையை திரைபோட்டு மூடினர். ஊர்வலமாக வரும் கடவுளுக்கு தாழ்த்தப்பட்டோர் எவரும் ஆராதனை நடத்தி வழிபடக்கூடாது என்று பூசாரி தடைவிதித்தார். ஊர்வலத்தில் தாழ்த்தப்பட்டோர் கலந்து கொள்ளவும் பார்ப்பனர்கள் தடைவிதித்தனர்.


காரணம், அவர்கள் மாட்டுக்கறியை உண்டதுதான். இந்த விழாவுக்கு முதல் நாளன்று தாழ்த்தப்பட்டோர் மாடு அறுத்து ஊர் முழுவதும் கறி சமைத்து சாப்பிட்டுள்ளனர். பார்ப்பன இந்துமதம் பசுவைப் 'புனித'மானதாகக் கருதுவதால், மாட்டுக்கறி உண்பவர்கள் இந்து மதவிரோதி என்று குற்றம் சாட்டிய பார்ப்பனர்கள், இக்கோயிலில் தாழ்த்தப்பட்டோர் வழிபடவும் தடைவிதித்தனர்.

இக்கொடுமைக் கண்டு ஆத்திரமடைந்த தாழ்த்தப்பட்டோர், பகுஜன் சமாஜ் கட்சியினரிடம் முறையிட்டதும், மறுநாளே ஆகஸ்டு - 31 -ஆம் தேதியன்று கோயில் நுழைவுப் போராட்டம் நடத்த முடிவாகியது. பார்ப்பனர்கள் இப்போராட்டத்தை எதிர்த்து நின்றதோடு, மேல்சாதி இந்துக்களைக் கொண்டு தாழ்த்தப்பட்டோரை கோயிலினுள் நுழைய விடாமல் தாக்கினர். இந்த அட்டூழியத்தைப் பற்றி மாவட்ட போலீசு கண்காணிப்பாளரிடம் முறையிட்டதும், அவர் குற்றவாளிகளான பார்ப்பன ஆதிக்க சாதியினர் சிலரைக் கைது செய்து, 300-க்கும் மேற்பட்ட தாழ்த்தப்பட்டோரைத் திரட்டிக் கொண்டு போலீசு பாதுகாப்புடன் கோயிலினுள் நுழைந்து கருவறையில் தாழ்த்தப்பட்டோரே அபிசேகம் ஆராதனை நடத்தி வழிபடவும் துணையாக நின்றார்.

இச்செயலைக் கண்டு, "ஐயோ! இந்துமதத்துக்கு ஆபத்து வந்துவிட்டது" என்று அரற்றிய பார்ப்பனர்கள், சுற்றுப்புற பகுதிகளைச் சேர்ந்த பார்ப்பனர்களையும் திரட்டிக் கொண்டு, கோயில் கருவறையில் கடவுளுக்குத் தீட்டு கழிக்கும் பூசைகள் நடத்திக் கோயிலைப் பூட்டி வைத்தனர். பின்னர் கட்டைப்பஞ்சாயத்து நடத்தி , தாழ்த்தப்பட்டோருக்கு ஊரில் எவரும் வேலை கொடுக்கக்கூடாது; கடைகளில் அத்தியாவசியப் பொருட்களைக் கூட விற்கக் கூடாது என்று ஊர்க் கட்டுப்பாடு போட்டு எச்சரித்துள்ளனர்.

இத்தீண்டாமைக் கொடுமையை எதிர்த்து தாழ்த்தப்பட்டோர் மாவட்ட ஆட்சியாளர்களிடம் முறையிட்ட பிறகு, சமாதானக் கூட்டம் நடத்தி சமூகப் புறக்கணிப்பு செய்யக்கூடாது என்று பார்ப்பனர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இருப்பினும் ஒரு சிலருக்கு மட்டும் வேலை கொடுத்துவிட்டு, தாழ்த்தப்பட்டோரை இழிவுபடுத்தி சமூகப் புறக்கணிப்பு செய்யும் கொடுமை இன்னமும் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

பார்ப்பன இந்து மதத்தின் சாதிய அடக்குமுறைக்கு சாட்சியமாக நிற்கும் சட்டர்பூரிலுள்ள ராம்-ஜானகி கோயில்.



அண்மையில் தென்னாப்பிரிக்காவில் நடந்த ஐ.நா. மன்றத்தின் இனவெறி எதிர்ப்பு மாநாட்டில் "இந்தியாவில் சாதிய அடக்குமுறையோ, தீண்டாமையோ கிடையாது; இவை பற்றி சில தாழ்த்தப்பட்ட அமைப்புகள் மிகைப்படுத்திக் கூச்சலிடுகின்றன" என்று இந்திய அரசு வாதிட்டது. அது எவ்வளவு பெரிய மோசடி என்பதை உஜ்ரா கிராமத்தில் நடந்த கருவறை நுழைவுப் போராட்டம் மீண்டும் நிரூபித்துக் காட்டிவிட்டது.

# முட்டுச் சந்தில் திணறும் சி.பி.எம்.

சோவியத் ஒன்றியம் மற்றும் பிற கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் சோசலிசத்திற்குப் பின்னடைவு நேர்ந்த போதிலும் சீனா, வியட்நாம், வட கொரியா மற்றும் கியூபா ஆகிய நான்கு நாடுகளும் கடந்த காலப் படிப்பினைகளுக்குப் பிறகு சரியான பாதையில் சோசலிசத்தை நிர்மாணித்து வருவதாக சி.பி.(எம்) கட்சி சாதித்து வருகிறது. ஆனால் இந்நாடுகளில் ''நிர்மாணிக்கப்பட்டு வரும் பொருளாதார அமைப்பு'' குறித்து சி.பி.(எம்) கட்சி அளித்து வரும் விளக்கமோ, ஜனநாயக சோசலிசம் என்ற பெயரில் கடந்த காலத்தில் இந்தியா பின்பற்றி வந்த நேருவின் கலப்புப் பொருளாதாரக் கொள்கை அடிப்படையிலான தரகு - அதிகார வர்க்க முதலாளியம் தானே தவிர வேறில்லை.

சி.பி.(எம்) கட்சியின் விளக்கத்தின் படியே, சீன நாடு விடுதலை அடைந்தபிறகு முதல் 30 ஆண்டுகளாக அதாவது 1978-ஆம் ஆண்டு வரை பொதுத்துறை நிறுவனங்களும் கூட்டு நிறுவனங்களும் தான் தொழில் துறையில் அதன் வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைந்தன. ஆனால் 1978-இல் இருந்து அமலாக்கப்பட்ட பொருளாதார சீர்திருத்தக் கொள்கையின் அடிப்படையில் தொழில்துறையில் பொதுத்துறை, கூட்டுத்துறை, வெளிநாட்டு மூலதனம், உள்நாட்டுத் தனியார் மூலதனம் ஆகிய வடிவங்களில் தொழில் வளர்ச்சி காணுவதென சீன அரசு முடிவு செய்தது. அதேபோல ''1978-ஆம் ஆண்டு பொருளாதார சீர்திருத்தக் கொள்கை துவங்கிய பிறகு சீனத்தில் சோசலிசப் பொருளாதார வளர்ச்சிக்குத் திட்டமிடல், சந்தைப் பொருளாதாரம் இரண்டையும் பயன்படுத்துவது என்றும் அரசினால் ஒழுங்குபடுத்தப்பட்ட சந்தைத் தேவை என்றும் சீன அரசு முடிவு செய்து அமலாக்கி வருகிறது.'' (ஆதாரம்: மார்க்சிஸ்ட், பிப். 2000, பக்: 10-11)

இதன் சாரம் என்ன? அரசின் பொதுத்துறை, அரசும் தனியாரும் கூட்டுச் சேர்ந்த கூட்டுத்துறை, வெளிநாட்டு மூலதனம், உள்நாட்டுத் தனியார் மூலதனம் ஆகிய பல வடிவங்களைக் கொண்ட உற்பத்தி முறையும் அரசினால் மைய அடிப்படையில் பொருளாதாரத் திட்டமிடலும் கட்டுப்படுத்தப்பட்ட சரக்கு உற்பத்தியும், ஒழுங்குப்படுத்தப்பட்ட சந்தைப் பொருளாதாரமும் அடங்கிய ஒரு அமைப்பு — இதுதான் ஜனநாயக சோசலிசம் என்கிற பெயரால் நேரு - இந்திரா முன் வைத்து அமலாக்கிய கலப்புப் பொருளாதாரம்.

''இந்தியாவில் 30 ஆண்டு காலம் அமலாக்கப்பட்ட இந்தக் கலப்புப் பொருளாதாரக் கொள்கை இங்கே நிரந்தரப் பொருளாதாரத் தேக்கத்தையும் நெருக்கடியையும் ஏற்படுத்தி விட்டது. அரசுத்துறை ஏகபோக வெள்ளையானையாக மாறி பெரும் நட்டத்தையும், உள்நாட்டு வெளிநாட்டுக் கடனையும் குவித்துவிட்டது. அதேபோல மைய ரீதியிலான அரசுப் பொருளாதாரத் திட்டமிடுதலும், கட்டுப்படுத்தப்பட்ட சந்தையும் தனியார்துறையின் வளர்ச்சியை முடக்கிவிட்டது. ஆகவே, தனியார்மயம், தாராளமயம், உலகமயம் என்கிற புதிய பொருளாதாரக் கொள்கைதான் இந்தியப் பொருளாதாரத் தேக்கம் - நெருக்கடிகளைத் தீர்க்கும்'' என்ற மதிப்பீட்டின் அடிப்படையில் நேரு - இந்திரா தலைமையில் அமலாக்கப்பட்ட கலப்புப் பொருளாதாரத்துக்கு சமாதி கட்டப்படுகிறது.

இந்த நிலையில் 30 ஆண்டுகால சோசலிசப் பொருளதாரக் கட்டுமானம் தேக்க நிலை - நெருக்கடியை எட்டிவிட்டதாகக் கூறி இங்கே சமாதி கட்டப்படும் கலப்புப் பொருளாதாரக் கொள்கையைப் போலி கம்யூனிஸ்டுகள் கையில் எடுத்துக் கொண்டுள்ளனர். இங்கே கலப்புப் பொருளாதாரக் கொள்கை கைவிடப்படுவதற்கு சொல்லப்படும் அதே காரணங்களை சோசலிசப் பொருளாதாரக் கொள்கைகள் கைவிடப்படுவதற்கும், இங்கே காலவதியாகிப் போன கலப்புப் பொருளாதாரத்தை வரித்துக் கொள்வதற்கும் போலி கம்யூனிஸ்டுகள் முன் வைப்பதும் தான் வேடிக்கையாகவும் வினோதமாகவும் உள்ளது.

சோசலிச நாடுகளில் சுமார் 30 ஆண்டு காலம் அமலாக்கப்பட்ட மைய ரீதியில் திட்டமிட்ட பொருளாதாரம், கட்டுப்படுத்தப்பட்ட பொது விநியோகம், அரசுக்குச் சொந்தமான பொதுத்துறை உற்பத்திமுறை ஆகியன சோசலிசப் பொருளாதார வளர்ச்சிக்குப் போதுமானவையாக இல்லை; உற்பத்தித் திறனும், தொழில் நுட்பமும், நிர்வாகமும் நவீனப்படுத்தப்பட வேண்டும்; இதற்குப் பொருளாதாரச் சீர்திருத்தங்கள் மிகவும் அவசியமாக உள்ளது என்று போலி கம்யூனிஸ்டுகள் வாதிடுகின்றனர்.

''பொருளாதார ரீதியில் மிகவும் பின்தங்கிய சீனா, வியட்நாம், கியூபா போன்ற நாடுகளில் சோசலிசப் பொருளாதார வளர்ச்சிக்கு உற்பத்தி சக்திகளின் உச்சகட்ட வளர்ச்சியும், உற்பத்தித் திறன் மற்றும் நவீன விஞ்ஞான தொழில் நுட்ப வளர்ச்சியும் அடிப்படைத் தேவையாகும். இந்த வளர்ச்சிக் காலத்தில் பொதுத்துறை என்ற ஒரு உற்பத்தி வடிவம் மட்டுமே போதுமானதல்ல. மாறாக, பன்முகப் பொருளாதார வடிவங்கள் தவிர்க்க முடியாதது என சீனா, வியட்நாம், கியூபா ஆகிய ஆளும் கம்யூனிஸ்ட் கட்சிகள் கடந்த காலப் படிப்பினைக்குப் பிறகு முடிவுக்கு வந்துள்ளன. இதன் அடிப்படையில்தான் இந்நாடுகளின் பொருளாதாரக் கொள்கைகள் அமலாக்கப்பட்டு வருகின்றன'' என்று சி.பி.(எம்) கட்சி கூறுகிறது. (மேற்படி நூல், பக்:10)

சில ஆண்டுகளுக்கு முன்பு கல்கத்தாவில் சி.பி.(எம்) கட்சி நடத்திய கருத்தரங்கில் வியட்நாம் கட்சிப் பிரதிநிதி, ''பல வடிவங்களைக் கொண்ட உற்பத்தி முறையும் அரசினால் ஒழுங்குப்படுத்தப்பட்ட சந்தைப் பொருளாதாரமும் அவசியமானது'' என்றுரைத்தார். சி.பி.(எம்) கட்சியின் 14-வது காங்கிரசு தீர்மானத்திலும், அதன் புதிய திட்டத்திலும் சோசலிசத்திற்கு மாறிச் செல்லுகின்ற காலத்தில் பலதுறை பொருளாதாரக் கொள்கை அவசியமானது என்பது வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்தத் திருத்தல்வாத கட்சிகளுக்கு உலக குருவாக திகழும் டெங்சியாவோ பெங் தலைமையிலான சீனக் கம்யூனிஸ்டு கட்சியின் 14-வது பேராயம் பின்வருமாறு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

''முதலாளித்துவ நாடுகளைவிட சோசலிச நாடுகள் மேலான வளர்ச்சி காண வேண்டுமென்றால் முதலாளித்துவ நாடுகளின் மூலதனம், நவீன உற்பத்தி முறை, நவீனத் தொழில் நுட்பம், நவீன நிர்வாக முறை, தொழிலாளர்களின் திறன் உயர்த்தும் பயிற்சி முறை ஆகிய அம்சங்களைப் பயன்படுத்துவதற்குத் தயக்கம் காட்டக் கூடாது. வலுவான பொதுத்துறை உள்ளதாலும் அரசியல் அதிகாரம் மக்கள் கையில் உள்ளதாலும் மேற்கண்ட கொள்கை சோசலிசத்தைப் பாதிக்காது. மாறாக, பலப்படுத்தவே செய்யும்.''

இந்தியா போன்ற நாடுகள் தமது தேசியப் பொருளாதார வளர்ச்சிக்கு எவையெல்லாம் தேவை என்று இங்குள்ள தரகு அதிகார வர்க்க முதலாளிய - ஏகாதிபத்திய பொருளாதார வல்லுநர்கள் வாதிடுகிறார்களோ, அவையே சோசலிசப் பொருளாதார வளர்ச்சிக்கு அவசியமானவையாக உள்ளதென்று சீனத் திருத்தல்வாதிகள் வாதிடுகின்றனர். பொருளாதாரச் சீர்திருத்தம் என்கிற பெயரில் சோசலிசப் பொருளாதாரத்தை சீர்குலைக்கும் வேலை 20 ஆண்டுகளுக்கு முன்பாகவே சீனாவில் துவங்கி விட்டது. அதன் முதற்படியாக,



படிப்பகம்

www.padippakam.com

✱ மாவோ காலத்தில் கிராமப்புறங்களில் இருந்து வந்த கம்யூன் முறைகள் ஒழிக்கப்பட்டு விவசாய நிலங்கள் சாகுபடி செய்வதற்காக ஒப்பந்த முறையில் வாடகைக்கு விடப்பட்டு விட்டன. விவசாயிகள் தங்கள் வீடுகளைச் சுற்றியுள்ள நிலங்களிலும் சொந்த சாகுபடி செய்யலாம். இந்த மாற்றங்கள் மூலம் இனி சமூக நலனுக்கான பொது உற்பத்திக்காக நிலங்களைப் பயன்படுத்துவது ஒழிக்கப்பட்டு, தனியார் இலாபத்துக்காக விற்பனைக்கான விவசாய உற்பத்தியை நடத்துவது புகுத்தப்பட்டுள்ளது.

✱ கிராமப்புறங்களிலுள்ள உபரி விவசாயத் தொழிலாளர்களைக் கொண்டு நுகர்வுச் சரக்குகளை உற்பத்தி செய்வதற்காக நகரியத் தொழில் மையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. தனியார் மூலதனத்தைக் கொண்டு இவற்றில் உற்பத்தி செய்து விற்கும் சந்தையும் உருவாகியுள்ளது.

✱ ஷென்ஷென், சுகாய், ஷாண்டு மற்றும் ஜியான்மென் ஆகிய நான்கு சிறப்புத் தொழில் மையங்கள் (நமது நாட்டிலுள்ள ஏற்றுமதி வர்த்தக வளாகங்கள் அமைப்பது போல) நிறுவப்பட்டுள்ளன. இவற்றில் வெளிநாட்டு மூலதனத்தையும் வெளிநாட்டுத் தொழில் நுட்பத்தையும், வெளிநாட்டு தொழில் நிர்வாக முறையையும் பயன்படுத்தி முற்றிலும் ஏற்றுமதிக்கான உற்பத்தி நடக்கின்றது. இவற்றின் வெற்றிகரமான வளர்ச்சி காரணமாக யாங்ட்சி சுற்றுப் பகுதி, முத்து ஆற்றுப் பகுதி என்று 12-க்கும் மேற்பட்ட கடற்கரையோர நகரங்களிலும் இத்தகைய தொழில் மையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. ஹியாணன், மக்கோ, ஹாங்காங் போன்ற தீவுகள் சிறப்புத் தொழில் மையமாக மாற்றப்பட்டு தனிமாநிலங்களாகவும் நடத்தப்படுகின்றன.

இவ்வாறு வெளிநாட்டு, உள்நாட்டு தனியார் மூலதன ஊடுருவலும் உற்பத்தி முறையும் புகுத்தப்பட்டபோதும் சீனாவின் சோசலிசப் பொருளாதார அமைப்பு எவ்விதப் பாதிப்பும் இல்லாமல் பாதுகாக்கப்படும் என்றும் வலுவான பொதுத் துறையும், சீனக் கம்யூனிசக் கட்சி ஆட்சியுமே இதற்கு உத்திரவாதம் என்றும் போலி கம்யூனிஸ்டுகள் வாதிடுகின்றனர்.

“கடந்த 50 ஆண்டுகளின் வளர்ச்சியில் சீன பொதுத்துறையின் சொத்து மதிப்பு 38 லட்சம் கோடி ரூபாயாக வளர்ந்துள்ளது. இந்தச் சொத்து மக்களுக்குச் சொந்தமானது. இதுதான் சீன சோசலிச அமைப்பின் அஸ்திவாரம். நாம் நிதானமின்றி, வரம்பின்றி இந்த சொத்துக்களை தனிநபருக்குத் தாரை வார்த்துவிடக் கூடாது. அப்படிச் செய்தால் அது பொதுத் துறையைப் பாதிக்கும். இதன் விளைவாக நமது சோசலிச அமைப்பு தனது அஸ்திவாரத்தை இழந்துவிடும். எனவே, பொதுத்துறை என்பது சீனப் பொருளாதாரத்தின் பிரதான அம்சமாகவும் அதே நேரத்தில் தனியார் துறை, கூட்டுத் துறை என்ற மற்ற வடிவங்களிலும் தொழில் வளர்ச்சி அமைய வேண்டும்.” (மேற்படி நூல், பக்:8)

பொதுத்துறைத் தொழில்கள் என்பதாலேயே அவை சோசலிசத் தன்மை கொண்டதாகிவிட முடியாது. அவை சமுதாய நலன்களுக்காக, கம்யூனிசத் தன்மைகளோடு நடத்தப்படும்போதுதான் சோசலிச அடிப்படையிலானதாகக் கருதப்படும். வெறுமனே உற்பத்திப் பெருக்கம், இலாப நோக்கத்தோடு மட்டும் நடத்தப்படும் பொதுத்துறை என்பது அதிகாரவர்க்க முதலாளித்துவ உற்பத்தி முறையாக மட்டுமே இருக்க முடியும். இது ஒருபுறமிருக்க சீனாவின் பொதுத்துறைப் படிப்படியாக சீரழிக்கப்படுகிறது என்பதுதான் உண்மை.

ஏறத்தாழ 1,17,000 பொதுத்துறை நிறுவனங்கள் இன்னமும் சீனத்தில் உள்ளன. என்றாலும் அந்நாட்டின் ஒட்டு மொத்தத் தொழில் உற்பத்தியில் பொதுத்துறையின் பங்கு 1978-இல் 75 சதமாக இருந்ததை 1995-இல் 35 சதமாகக் குறைத்துவிட்டார்கள். அந்த அளவுக்கு தனியார் மற்றும் வெளிநாட்டுக் கம்பெனிகளின் உற்பத்தி விரிவடைந்து விட்டது. பொதுத்துறை நிறுவனங்கள் மூலதன அழுத்தம் கொண்ட கனரக மற்றும் அடிப்படைக் கட்டமைப்புத் தொழிகளில் மட்டும் இயங்கி வரும் அதே சமயம், தனியார் மற்றும் வெளிநாட்டுக் கம்பெனிகள் நுகர்பொருள் சரக்கு உற்பத்தி மற்றும் சேவைத் துறையில் கவனம் செலுத்துகின்றன.

1995-ஆம் ஆண்டின் இன்னொரு தொழில் துறைத் தகவலின்படி, மொத்த நாட்டு உற்பத்தியில் 35 சதவீதமே உள்ள பொதுத்துறையில் தான் நகர்ப்புறத் தொழிலாளர்களின் எண்ணிக்கையில் 70 சதவீதமானவர்கள் பணிபுரிகிறார்கள். 65 சதவீத அளவு உற்பத்தியைத் தரும் தனியார் மற்றும் வெளிநாட்டுத் தொழில் நிறுவனங்களில் 30 சதவீதத் தொழிலாளர்கள்தான் பணிபுரிகிறார்கள்.

“சீன பொதுத்துறை நிறுவனங்களில் பல நட்டத்தில் இயங்குகின்றன. கடனில் உள்ளன. இன்னும் நவீனப்படுத்தப்படாமல் உள்ளன. தொழிலாளர்கள் பல கம்பெனிகளில் உபரியாக உள்ளனர். இப்படிப்பட்ட நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்திலும் சிரமங்கள் உள்ளன. இச்சூழ்நிலைமையில் பொதுத் துறையில் சீர்திருத்தம் கொண்டு வருவது என்பது இந்தத் துறையை மேலும் வளர்ப்பதென்பதோடு ஒட்டு மொத்த பொருளாதார வளர்ச்சிக்கும் வழிவகுப்பதாகவும் அமையும் என சீன அரசு கூறுகிறது.” (மேற்படி நூல், பக்.7)



சீனத் தலைவர்களுடன் சி.பி.எம். தூதுக் குழுவினர்: சோசலிசத்தை நோக்கிய நீண்ட பயணத்தில் சீனா முன்னேறுவதாகப் பசப்பல்.

இதனால் பொதுத்துறை நிறுவனங்களை நவீனப்படுத்தி, லாபகரமாக நடத்திட சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்வது என்று சீன ஆளும் கட்சியும் அரசும் 1999-இல் முடிவு செய்துள்ளன. இதன் பொருள் தொழிலாளர்களின் வேலை பறிப்பு, வேலை பளுவை ஏற்றுவது, நட்டத்தில் இயங்கும் தொழில்களை மூடிவிடுவதுதான். அந்த வேலையைத்தான் சீன அரசு மேற்கொண்டுள்ளது. வேலையிழந்த தொழிலாளர்களுக்கு ஈட்டுறுதித் திட்டங்கள் கொண்டு வருவது, மாற்று வேலை வாய்ப்புக்கான பொறுப்பை அரசே ஏற்றுக் கொள்வது போன்றவற்றைச் சாக்கு போக்காக காட்டி இந்தியாவில் அமலாக்கப்படும் பொருளாதார சீர்திருத்தங்களில் இருந்து சீனாவில் அமலாக்கப்படுபவை மேலானவை, சோசலிசத் தன்மை வாய்ந்தவை என்று சி.பி.(எம்) கட்சி சித்த


படிப்பகம்

www.padippakam.com

ரிக்கிறது.

ஆனால், சீனாவில் தற்போது பின்பற்றப்படும் பொருளாதாரக் கொள்கைகளின் கேடுகளை சி.பி.(எம்) கட்சியினாலேயே மூடி மறைக்க முடியவில்லை. சீனாவில் வெளிநாட்டு மூலதனம் புகுத்தப்படுவதைப் பற்றி 1993-இல் நம்பூதிரிபாடு பின்வருமாறு எழுதினார். ''இது ஒரு சோதனை என்பதில் சந்தேகமில்லை. இதில் திரிபுகள் ஏற்பட இடமுண்டு. ஆனால், அவைகளைத் தவிர்ப்பதன் பேரால் பொருளாதார முன்னேற்றத்தைத் தவிர்த்தால், சோசலிசத்தின் முன்னேற்றத்திற்கு பாதிப்பு ஏற்படும்'' (மார்க்சிஸ்டு, 1993 ஜூலை, பக்:8)

நம்பூதிரிபாடைத் தொடர்ந்து அவரது சித்தாந்த வாரிசு சீதாராம் யெச்சூரியும் இதை ஒப்புக் கொள்கிறார். ''எப்படியாயினும் இந்த வளர்ச்சிப் போக்குகளின் விளைவாக புதிய பிரச்சினைகளும் உருவாகி வருகின்றன. அதிகரித்து வருகிற அசமத்துவம், வேலையின்மை மற்றும் ஊழல் ஆகியவைகளே அவைகளாகும்.'' ''தற்போதைய அரசுடைமை நிறுவனங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் மாற்றங்களினால் வேலையின்மை எண்ணிக்கை ஒவ்வொரு ஆண்டும் கூடுகிறது என்ற உண்மையும் இருந்து வருகிறது'' ''வேலையின்மை ஒரு அதிமுக்கியமான பிரச்சினைதான்.'' (மார்க்சிஸ்டு, ஜூன் 2000, பக்:27)

சி.பி.(எம்) கட்சியின் தமிழ்நாட்டு தலைவர்களில் ஒருவரான ஜி. ராமகிருஷ்ணன் என்பவரும் இதை ஒப்புக் கொள்கிறார். ''சீன நாட்டில் உருவாகும் பாதகமான அம்சங்களை கட்சி கவனிக்கத் தவறவில்லை.'' ''ஊழல், ஊதாரித்தனம் மற்றும் விரும்பத்தகாத நடவடிக்கைகள் சில பகுதிகளில் பரவி வருகின்றன. அதிகார வர்க்க மனோபாவமுள்ள நடைமுறை, சம்பிரதாய அணுகுமுறை போன்ற பிரச்சினைகள் உள்ளன. வருமானத்திற்கும் விநியோகத்திற்கும் இடையே இடைவெளி உள்ளது. பிராந்தியங்களுக்கு இடையே ஏற்றத்தாழ்வான வளர்ச்சி உள்ளது. நகர்ப்புறங்களிலும், கிராமப் புறங்களிலும் இன்றும் ஒரு சிறு பகுதியினரின் வாழ்க்கை சிரமத்தில் உள்ளது. மக்கள் தொகைப் பெருக்கமும் பொருளாதார வளர்ச்சியும் நாட்டு வளத்தையும் சுற்றுச் சூழலையும் பாதித்துள்ளது.'' (மார்க்சிஸ்ட், பிப். 2000, பக்:12)

பொருளாதார ஏற்றதாழ்வு, அசமத்துவம், வேலையின்மை, இலஞ்சஊழல் - இப்படி சீன சமுதாயத்தில் ஏற்பட்டுள்ள சீரழிவுகள் குறித்து சி.பி.(எம்) கட்சியினர் மிகவும் மென்மையாகப் பூசி மெழுகி, ஒப்புக் கொண்டிருக்கின்றனர். உண்மையில் அங்கே முதலாளித்துவ சமூகச் சீரழிவுகள் எல்லாம் வேகமாகப் பரவுகின்றன. இலஞ்ச - ஊழல், அதிகாரமுறைகேடுகள் மட்டுமல்ல, ஆளும் கட்சியின் அதிகார வர்க்கப் பிரிவினர் புதிய முதலாளிகளாக வளர்கின்றனர். வேலையில்லா திண்டாட்டம் தலைவிரித்தாடுகிறது.

நுகர்பொருள் சந்தையும் நுகர்வெறியும் பரவி, ஐந்து நட்சத்திர விடுதிகள், விபச்சாரம் கூடவே அழகிப் போட்டி, போதைப் பொருள் பழக்கம் - வியாபாரம், அந்நிய மோகம், எயிட்ஸ் போன்ற கொடிய நோய்கள், பெண் சிசுக் கொலை, கிரிமினல்களின் கொலை - கொள்ளை - கற்பழிப்பு ஆகியவை பெருகி வருகின்றன. பல்வேறு பிரதேசங்களுக்கிடையில் மட்டுமல்ல, நகர்ப்புறங்களுக்கும் - கிராமப்புறங்களுக்குமிடையிலான ஏற்றத்தாழ்வுகள் அதிகரித்து வருகின்றன. உள்நாட்டுச் சந்தையில் பன்னாட்டு, தேசங்கடந்த தொழில் கழகங்களின் ஆதிக்கம் - சுரண்டல் பெருகி வருகிறது.

சீனாவின் மொத்த உற்பத்தி வளர்ச்சி, பொருளாதார முன்னேற்றம், அந்நிய

**பொருளாதார ஏற்றதாழ்வு, அசமத்துவம், வேலையின்மை, இலஞ்ச ஊழல் — இப்படி சீன சமுதாயத்தில் ஏற்பட்டுள்ள சீரழிவுகள் குறித்து சி.பி.(எம்) கட்சியினர் மிகவும் மென்மையாகப் பூசி மெழுகி, ஒப்புக் கொண்டிருக்கின்றனர். உண்மையில் அங்கே முதலாளித்துவ சமூகச் சீரழிவுகள் எல்லாம் வேகமாகப் பரவுகின்றன.**

வர்த்தகம், அந்நிய முதலீடு போன்றவைகள் பற்றிய புள்ளிவிவரங்களைக் கொடுத்தே சி.பி.(எம்) போன்ற திருத்தல்வாதிகள் அங்கு சோசலிசம் நாலுகால் பாய்ச்சலில் முன்னேறி வருவதாகப் புளுகுகின்றனர். உண்மையில் அங்கு வளர்ச்சியடைந்து வருவது தரகு முதலாளியக் கூறுகள்தாம். இந்த வளர்ச்சி சோவியத் ஒன்றியம் மற்றும் பிற கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் நடந்ததைப் போல அப்பட்டமான முதலாளித்துவத்தை நிறுவுவதற்கே வழிவகுக்கும். இந்த உண்மையை சி.பி.(எம்) தலைமையினாலேயே மூடிமறைக்க முடியவில்லை.

''இவ்வாறு அதிகரித்து வருகிற அசமத்துவம் முதலாளித்துவ வர்க்கத்தை ஏற்படுத்துமா என்னும் முக்கிய கேள்வி முன்னுக்கு வருகிறது. அரசு முதலாளித்துவம் மற்றும் உற்பத்தி சக்திகளை படிப்படியாக வளர்க்க வேண்டிய அவசியமான இம்மாதிரியான மாறுதல் நோக்கி பயணிக்கும் காலங்களில் இதுபோன்ற இடர்பாடுகள் சோசலிச அரசிற்கு ஏற்படும் என்பதை இது குறித்து பேசுகையில் லெனின் எச்சரிக்கை செய்கிறார். அரசு முதலாளித்துவத்தைக் கட்டும் நடவடிக்கையின் தன்மையினை ஒரு போரைப் போன்றதே என்கிறார். தற்போதைய போரின் பிரச்சினையானது யார் வெற்றி பெறுவார்கள்; சூழ்நிலையின் பலன்களை முதலில் யார் எடுத்துக் கொள்வார்கள் என்பதேயாகும். நாம் முதலாளித்துவம் நுழைவதற்கு கதவைத் திறந்து வைத்து அனுமதிக்கப் போகிறோமா? அல்லது பாட்டாளி வர்க்க அரசு அதிகாரமா? லெனின் மேலும் குறிப்பிடுகையில் இந்தக் கடினமான பிரச்சினையை நாம் சந்திக்கத்தான் வேண்டும். யார் முதல்நிலைக்கு வருவார்கள்? ஒன்று முதலாளித்துவம் அமைப்பு ரீதியாக திரண்டு முதலில் வெற்றி பெறுவார்களேயானால், அவர்கள் கம்யூனிஸ்டுகளை அப்புறப்படுத்தி அதற்கு ஒரு முடிவு கட்டுவார்கள் அல்லது விவசாயிகள் ஆதரவுடன் பாட்டாளி வர்க்கம் அரசு அதிகாரத்திற்கு வருமேயானால் நிச்சயமாக முதலாளித்துவ கனவான்களை கடிவாளமிட்டு தங்களது பிடியில் வைத்திருப்பார்கள். அதன்மூலம் நேரடியாக முதலாளித்துவம் அரசு அமைப்புகளுடன் இணைந்து அரசுக்கு உதவியாகவும் சேவை செய்யும் முதலாளித்துவம் உருவாகும்.'' (மார்க்சிஸ்ட், ஜூன் 2000, பக்: 28)

அரசு முதலாளித்துவமும். உற்பத்திச் சக்திகளும் வளர்க்கப்படும் போது முதலாளித்துவ வர்க்கம் தோன்றுவதைப் பற்றி லெனின் எச்சரிக்கிறார். ஆனால் சீனாவில் நடப்பதோ வேறு விதமானது. அரசு முதலாளித்துவ வளர்ச்சியை முடக்கி, மட்டுப்படுத்தி அந்நிய, உள்நாட்டு தனியார் முதலாளித்துவ வளர்ச்சிக்கு அகலக் கதவு திறந்து விடப்படுகிறது. முக்கியமாக பன்னாட்டு மற்றும் தேசங்கடந்த தொழில் கழகங்களும் தரகு முதலாளிகளும் ஊக்குவிக்கப்படுகின்றனர். ஆக, ஏகாதிபத்திய - தரகு அதிகார முதலாளித்துவ சக்திகளின் ஆதிக்கத்தை நிறுவுவதற்கான அரசு ஊக்குவிப்புகள் தான் சீனப் புதிய பொருளாதாரக் கொள்கையின் உட்கூறுகள் என்பது வெளிப்படையாகவே தெரிகிறது.

சீனாவில் ஏற்பட்டுவரும் பொருளாதார மாற்றங்கள் இந்தியப் பொருளாதார சீர்திருத்தங்களில் இருந்து மாறுபாடானது என்று திருத்தல்வாதிகள் வாதிடுகின்றனர். அதற்கு சீனப் பொருளாதாரத்தில் இன்னமும் அரசுக்குச் சொந்தமான பொதுத்துறை தொழில்கள்தாம் மிகையாக இருக்கின்றது; அதோடு பாட்டாளி வர்க்க அரசு அதிகாரத்தில் இருக்கிறது என்று இரண்டு காரணங்கள் கூறுகின்றனர். அவர்களே ஒப்புக் கொண்டபடி அரசுக்குச் சொந்தமான பொதுத்துறை தொழில்களின் பங்கு வெகுவாகக் குறைந்து வருகிறது. அதேசமயம் சீன அரசை பாட்டாளி வர்க்க அரசு என்று கூறுவதும் உண்மை அல்ல.

— தொடரும்


படிப்பகம்

www.padippakam.com

இந்தப் படத்தில் கைக்குழந்தையுடன் ஒரு பெண்ணைப் பார்க்கிறோமே அந்தப் பெண்ணின் பெயர் ராசாத்தி. தமிழகத்தின் விழுப்புரம் மாவட்டத்திலுள்ள கல்வராயன் மலைப்பகுதியை ஒட்டியிருக்கும் அக்ராபாளையம் கிராமத்தைச் சேர்ந்தவர். இம்மலையில் அக்ராபாளையம், கச்சிராபாளையம், வடக்கநதல் உள்ளிட்டுப் பல கிராமங்கள் உள்ளன. இக்கிராமங்களில் வசிக்கும் பழங்குடியின மக்களின் வயிற்றுப்பாட்டுக்கு ஒரே வழி, காட்டுச் சுள்ளிகளைப் பொறுக்கி விற்பதுதான்.




# இதுதான் இன்றைய இந்தியா

காட்டுச் சுள்ளிகளைக் கூட இப்பெண்கள் சுதந்திரமாகப் பொறுக்கிக் கொண்டு வந்துவிட முடியாது. வனத்துறை போலீசுக்குப் பயந்து பயந்து சுள்ளிப் பொறுக்குவதோடு, தங்களின் சேலையும் காட்டு முட்களில்பட்டுக் கிழிந்து விடாதபடி பார்த்து பார்த்துச் சுள்ளி பொறுக்க வேண்டும். இதனாலேயே இப்பெண்கள் சேலையை அவிழ்த்து வைத்துவிட்டுச் சுள்ளி பொறுக்க வேண்டிய அவலத்தில் வாழ்க்கையை ஓட்டுகிறார்கள்.

இரண்டு மாதங்களுக்கு முன்பு அக்ராபாளையம் கிராமத்தைச் சேர்ந்த பெண்கள் இப்படி சுள்ளி பொறுக்கிக் கொண்டிருந்த பொழுது, வனத்துறை போலீசார் அப்பெண்களைச் சுற்றி வளைத்தனர். மானத்துக்கும், உயிருக்கும் பயந்து அவிழ்த்து வைதத சேலையைக் கூட எடுத்துக் கொள்ளாமல் பல பெண்களும் தப்பித்து ஓடிவிட, ராசாத்தி மட்டும் அம்மிருகங்களின் கையில் சிக்கிக் கொண்டார். ராசாத்தியை அடித்துத் துவைத்த அந்தக் கும்பல், அவரைச் சேலையைக்கூட உடுத்திக் கொள்ள விடாமல், அரை நிர்வாணமாகவே கள்ளக்குறிச்சி நகரத்திற்கு இழுத்து வந்து, அரை நிர்வாணமாகவே 'நீதி'மன்றத்தில் நிறுத்தி, 150 ரூபாய் அபராதம் விதித்து நீதியை நிலைநாட்டியது.

சேலையைக் கூடக் கட்டிக் கொள்ள விடாமல், ராசாத்தியை அடித்து, அவமானப்படுத்தித் தண்டிக்கும் அளவிற்கு, காட்டுச் சுள்ளிகளைப் பொறுக்குவது அத்துணை பெரிய குற்றமா? இந்தக் கேள்வியைக் கேட்டால், "காடு, தேசத்தின் சொத்து; அதைக் காப்பது எனது கடமை" என வனத்துறை அதிகாரி வசனம் பேசி புல்லரிக்க வைக்கிறார்.

காட்டிலேயே பிறந்த மக்களுக்கு, அங்கேயே வாழும் மக்களுக்கு, காட்டு மண்ணில் கேட்பாரற்று விழுந்து கிடக்கும் சுள்ளிகள் கூட சொந்தம் இல்லையென்றால், காடுகள் தேசத்தின் சொத்தாக இருப்பதனால் யாருக்குதான் என்ன பலன்?

இதோ இங்கே குவிந்து கிடக்கும் மரங்கள் எல்லாம், தரகு முதலாளிகள் நடத்தி வரும் "பிளைவுட்" ஆலைகளுக்குக் கொண்டு செல்வதற்காக வெட்டிச சாய்க்கப்பட்டவை. முதலாளிகள் வீசியெறியும் பிச்சைக் காசை வாங்கிக் கொண்டு, அவர்கள் காட்டு மரங்களை வெட்டவும், கனிவளங்களைச் சுரண்டவும் அனுமதிக்கும் "தேச உடமை", பழங்குடியின மக்கள் வனப்பகுதிக்குள் நுழைவதையே சட்ட விரோதம் எனத் தடை செய்கிறது.

சட்டப்பூர்வமாக மட்டுமல்ல; சட்ட விரோதமாகவும் முதலாளிகளுக்காக காடுகள் மொட்டையடிக்கப்படுகின்றன. 'தமிழினப் போராளி' வீரப்பன் சட்டவிரோதமாக வெட்டிய சந்தன மரங்கள், போலீசின் — வனத்துறை அதிகாரிகளின் துணையோடு பான்பராக் தயாரிக்கும் மார்வாடி முதலாளிகளுக்குப் போய்ச் சேர்ந்தன.



முதலாளிகளும், கிரிமினல் கும்பலும் காடுகளை மொட்டையடிப்பதைக் கண்டும் காணாமல் விட்டுவிடும் அதிகார வர்க்கத்தின் "தேசப் பற்று", காட்டில் வாழும் பழங்குடியின மக்கள், தங்களின் வயிற்றுப் பாட்டுக்காகச் சுள்ளி பொறுக்குவதை கிரிமினல் குற்றமாகப் பார்க்கிறது. காட்டில் கஞ்சா பயிரிடுவதை அனுமதிக்கும் போலீசும் வனததுறை அதிகாரிகளும், பழங்குடியின மக்கள் காட்டு நிலங்களைத் திருத்திப் பயிர் செய்வதைத் தடை செய்கின்றனர்.

வீரப்பனைத் தேடுகிறோம் என்று சொல்லிக் கொண்டு, பழங்குடியின மக்களின் உயிருக்கும், மானத்துக்கும் வேட்டு வைக்கின்றனர்.

"தேச உடைமை" என்ற பெயரால் நடக்கும் இந்த முதலாளித்துவக் கொள்ளைக்கும், அதிகார வர்க்கத்தின் அட்டூழியங்களுக்கும் நாம் முடிவு காணுவது எப்போது?

Published and Owned by R. SHANMUGARAJ, 25, Arunachalam St., Jothiramalinga Nagar, Chennai - 600 083.
Printed by him at EZHIL PRINTS, 110, IInd Floor, 63, Arcot Rd., Chennai - 600 024. Editor: R. SHANMUGA RAJ
படிப்பகம்

www.padippakam.com

PUTHIYA JANANAYAGAM
(TAMIL FORTNIGHTLY)

REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS
FOR INDIA UNDER NO. 42648/85

Regd. No. TN/Chief.PMG-544/2001




படிப்பகம்